2013, November 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு


# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



## தமிழக அரசியலால் தடுமாறும் மன்மோகன்

பொதுநலவரசு உச்சி மகாநாடு பகிஷ்கரிப்பும் பாசாங்குகளும்



## ஒட்டுக்கேட்கும் ஒபாமா

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# வீரகேசரி இணையத்தளம்

# இப்போது புதிய வடிவமைப்புடன்!





வீ

www.virakesari.lk


பணம் என்பது பசளைப்போன்றது.
தூவிப்பரவாவிட்டால் அதனால்
பயனேதுமில்லை.
- பிரான்சிஸ் பேக்கன்

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2013, நவம்பர் 01 - 15
பக்கங்கள் - 68

பிரியங்கா மீதான ஆர்வம்
- வி.சுதர்சன்



தீபாவளித் திருநாள் திடீர்ச்சந்திப்பின் பின்னணி
- முத்தையா காசிநாதன்


**50** பிரதமர் மோடி? கார்பொரேட்டுகளின் கனவு பலிக்குமா?
அ.மார்க்ஸ்



ஒட்டுக்கேட்கும் ஒபாமா

**11** பொதுநலவரசு மகாநாடு பகிஷ்கரிப்பும் பாசாங்குகளும்
- பேராசிரியர் சி.சிவசேகரம்

**15** உச்சிமகாநாட்டுக்கு பிறகு எதிர்பார்க்கக்கூடிய நிகழ்வுப் போக்குகள்
- குமார் டேவிட்



உள்நாட்டு அரசியலுக்கும் தேசிய நலனுக்குமிடையே...
- எம்.பி.வித்தியாதரன்

**26** தென்னாபிரிக்காவின் ஆதரவு
- கலாநிதி ஜெஹான் பெரேரா


**43** முஸ்லிம் அரசியலும் வடகிழக்கு மீள் இணைப்பும்
- ஏ.பீர் முகம்மது

**54** அல்பேர்ட் காம்யு நூற்றாண்டு
- மதுசூதனன்




அடங்கிப்போயிருக்கும் முஸ்லிம் விரோத பிரசாரங்கள்
- இஸத் ஹுசைன்

**23** பரிதாப நிலையில் கருணாநிதியும் காங்கிரஸும்
- குசல் பெரேரா



வட மாகாண வாக்காளர்களின் உரிமையும் கூட்டமைப்பு அரசின் கடமையும்
- என்.சத்தியமூர்த்தி



கடைசிப் பக்கம்
குப்பிளான் சண்முகம்

ஆசிரியரிடமிருந்து...

# பொதுநலவரசு மகாநாடும் தமிழர்களின் அரசியலும்

இலங்கையில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவரசு நாடுகளின் உச்சி மகாநாடு இம்முறை அதிகள வுக்கு அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்ட மைக்கு அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என முன்வைக் கப்பட்ட கோரிக்கைதான் காரணம். இந்த மகாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்றே முதலில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 'நிபந்தனை'யுடன் இந்தியா திரைக்குப் பின்னால் மேற்கொண்ட காய்நகர்த்தல்களைய டுத்தே மாநாட்டை இங்கு நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கனடா மகாநாட்டை பகிஷ்கரிப்பதாக அறி வித்திருக்கும் நிலையில், மகாநாட்டில் இந்தியா கலந்து கொள்ள வேண்டுமா என்ற கேள்விதான் அரசியல் அரங் கில் இப்போது பெரிதாக எழுப்பப்படுகின்றது.

மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள் இரண்டு விடயங்களைத் தெரிவிக்கின்றார் கள். இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங் கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை எதுவும் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்படவில்லை என் பதும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் தான் இவர்கள் கூறும் காரணங்கள். இவை குறித்து அழுத் தங்களைக் கொடுப்பதற்கு, சர்வதேச அரங்கில் இலங்கை யைத் தனிமைப்படுத்தும் இதுபோன்ற செயற்பாடுகள் அவசியம் என்பது இவர்களது வாதம்!

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பொது நலவரசு நாடுகளின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொள்வது என்பது சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள உதவும் எனக் கருதுகின் றது. குறிப்பாக 53 நாடுகளைக் கொண்டுள்ள ஒரு அமைப் பின் தலைமைப் பதவியைப் பெற்றுக்கொள்வது என்பது சர்வதேச அழுத்தங்களைக் குறைக்க உதவும். இதன் மூலம் கிடைக்கும் பிரபலம் உள்நாட்டில் ஜனாதிபதியின் செல் வாக்கை அதிகரிக்கும். மகாநாட்டை சிறப்பாக நடத்திக் காட்ட வேண்டும் என இலங்கை அரசாங்கம் துடிப்பதன் பின்னணி இதுதான்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இவ்விட யத்தை எவ்வாறு அணுகுவது என்பது முக்கியமான கேள்வி! புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள் எடுத் துள்ள நிலைப்பாடு வெளிப்படையானது. தமிழக கட்சிகளும் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தான் கொண்டுள்ளன. மகாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும், இந்தியப் பிரதமர் இதில் பங்குகொள்ளக் கூடாது என்பதற்காக ஆக்ரோஷமான போராட்டங்களை அவை முன்னெடுக்கின்றன. தமிழகத்தில் கொந்தளிக்கும் தமிழ்த் தேசியவாத உணர்வுக்கு இசைவாகச் செயற்பட வேண்டியவையாக தமிழகக் கட்சிகள் உள்ளன. அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்தான் அவற் றின் இலக்கு!

பொதுநலவரசு உச்சி மகாநாடு குறித்த அழுத்தங்களால் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை எனவும் சொல்லமுடியாது. பொதுநலவரசு மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு காரணமாக இந்தியாவின் சில நகர்வுகளே இருந்தன. இதற்காக இந்தியா முன்வைத்த கோரிக்கைதான் வடமாகாண சபைத் தேர்தல். வடமாகாண சபைத் தேர்தலை ஒரு நிபந்தனையாக இந்தியா முன்வைத் ததாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறியிருந்தன. தேர்தல் சுயாதீனமானதாகவும், நியாயமானதாகவும் நடை பெற்றால் பிரதமர் மன்மோகன் சிங் மகாநாட்டில் பங்கு கொள்வார் என இந்தியா மற்றொரு நிபந்தனையை முன் வைத்ததாகவும் தகவல் உள்ளது. இந்தப் பின்னணியில்தான் இந்த மகாநாட்டில் மன்மோகன் சிங் கலந்துகொள்ள வேண்டும் என்பதில் இந்திய வெளிவிவகார அமைச்சு அக்கறையாகவுள்ளது. இலங்கை அரசு அதனை எதிர் பார்த்தும் உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் பிராந்திய மற் றும் கேந்திர நலன்களைப் பொறுத்தவரையில் இதில் பங்கு கொள்ள வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக இலங்கை யுடனான தமது உறவுகளில் ஏற்படக்கூடிய இடை வெளியை சீனா பயன்படுத்திக்கொள்ளும் என்ற அச்சம் இந்தியாவுக்குள்ளது. மறுபுறம் தமிழக வாக்கு வங்கி இதற் குத் தடையாகவுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் காங்கி ரஸ் - தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் படுதோல்வியைச் சந்தித்ததற்கு இலங்கை விடயத்தில் காங்கிரஸ் அரசு கையாண்ட அணுகுமுறையே காரணம் என்பதை அக்கட் சியின் தமிழகத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார் கள். அந்தத் தவறை இன்னொரு முறை செய்யக்கூடாது என்பதில் அவர்கள் அவதானமாக இருப்பதால்தான் டில் லிக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். தமிழகத் தின் வாக்கு வங்கியா கேந்திர நலன்களா என்பவற்றுக்கி டையில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய நிலையில் இப்போது டில்லி உள்ளது.

இந்தநிலையில் கேந்திர நலன்களையும் பாதுகாத்துக் கொண்டு தமிழக வாக்கு வங்கியையும் தக்கவைத்துக் கொள்வதற்கான மார்க்கங்கள் உள்ளனவா என்பதைத் தான் டில்லி தேடுகின்றது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்துக்குச் செல்வது அதில் ஒன்றாக அமை யலாம்.

இதன்மூலம் தமிழர்களின் நலன்களில் தான்கொண் டுள்ள அக்கறையை இந்தியா வெளிப்படுத்தலாம். இதில் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்படும். இலங்கைக்கும் இது வெற்றியாக அமையும்.

ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாத இந்த மாகாண சபைதானா? ▪

# கடிதங்கள்













## சச்சினின் தீர்மானம்

'சச்சின் ஒரு சகாப்தம்' என்ற தலைப்பில் கடந்த சமகால இதழில் வெளியான கட்டுரையை படித்தேன். முழுமையான புள்ளிவிபரங்கள் அதில் காணப்பட்டன. நானும் ஒரு சச்சின் அபிமானி என்ற வகையில் என்னால் அந்தக் கட்டுரையில் ஒன்றிப் போக முடிந்திருந்தது.

சச்சின் தனது திறமையின் உச்சத்தில் இருக்கும் போது, ஓட்டங்களை குவித்து சாதனைகளை படைத்துக் கொண்டிருந்த போது, ஓய்வை அறிவித்திருந்தால் அது இந்தியா முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்ற விமர்சனம் பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது விடயத்தில் என்னிடமிருக்கும் ஒரே கேள்வி இது தான். நாட்டுக்காக விளையாடும் திறமையான வீரர் ஒருவர் அதுவும் அனைவராலும் எப்போதும் எதிர்பார்க்கப்படும் சச்சின் போன்ற ஒருவர் தமது புகழை தக்க வைத்துக் கொள்ளவதற்காக விளையாடத்தகுதியான நிலையில் இருக்கும் போதே விலகுவது சரியா அல்லது தன்னால் முடிந்தவரை அணிக்கு பங்களிப்பு செய்துவிட்டு இனிமேலும் தன்னால் முடியாது என்று அவராகவே உணரும்போது விலகிக் கொள்வது சரியா?

கருணாகரன் சேயோன், வவுனியா.

## அமெரிக்காவும் சீனாவும்

தன்னையே ஆள முடியாமல் திணறும் அமெரிக்காவிற்கு உலகின் மீது தொடர்ந்தும் அதிகாரம் செலுத்த முடியுமா? என்ற கட்டுரை சமகாலத்தின் கடந்த இதழில் பிரசுரமாகியிருந்தது. சீன அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான ஷின்குவாவிற்கு ஊடகவியலாளர் லியூசாங் எழுதியிருந்த கட்டுரையின் மொழிபெயர்ப்பாகவே இது வெளியாகியிருந்தது.

அமெரிக்காவின் ஆதிக்க செயற்பாடுகள் பற்றி இந்தக் கட்டுரையில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் அதேநேரம், அமெரிக்காவின் பிடியில் இருந்து விடுபட்ட உலகம் ஒன்றின் தோற்றம் அவசியம். அமெரிக்க டொலருக்கு பதிலீடாக சர்வதேச ஒதுக்கு நாணயமொன்று தெரிந்தெடுக்கப்பட வேண்டும் போன்ற

## கருணா விவகாரம்

கடந்த சமகாலம் இதழில் வெளிவந்துள்ள உட்கட்சிப் பூசல்கள் உணர்த்தும் உண்மைகள் என்ற கட்டுரையில் யதார்த்தமான சில விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும், கருணாவின் பிளவுக்காக சொல்லப்பட்ட காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கும் கிழக்கும் இருதுருவங்கள் என்ற கதை ஒவ்வொரு வரும் தமது தரப்பு தவறுகளை நியாயப்படுத்துவதற்காக கூறிவரும் விடயம். தமிழீழ போராட்டத்தில் அதிகளவான உயிர்த்தியாகம் செய்த போராளிகள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். தனிமனித சந்தோஷத்திற்காகவும் உல்லாச வாழ்க்கைக்காகவும் சலுகைகளுக்காகவுமே கருணா விடுதலைப்புலிகளைக் காட்டிக் கொடுத்தாரே தவிர, கட்டுரையாளர் சொல்லும் காரணத்தால் பிளவு படவில்லை ஏனெனில் கருணாவின் காட்டிக் கொடுப்பின் பின்னர் அவரை கிழக்கிலிருந்து விரட்டியவர்கள் கிழக்கு மாகாணப் போராளிகள் தான்.

எனவே கட்டுரையாளர் இதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

க.ஜெகநாதன், கல்லடி,
மட்டக்களப்பு.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

யோசனைகளும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நம்முடன் நிலத் தொடர்பற்ற நாடுகளின் விடயங்களிலும் அமெரிக்கா மூக்கை நுழைப்பதாகவும் ஊடகவியலாளர் லியூசாங் விமர்சித்துள்ளார்.

எனது அபிப்பிராயம் என்னவெனில், அமெரிக்காவின் அதிகாரப் போக்கு செயற்பாடுகளை நான் ஆமோதிக்கவில்லை. எனினும், சீனாவும் தற்போது மறைமுகமாக ஏனைய நாடுகளுக்குள் தமது சுயநலத்துக்காக ஊடுருவும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறது. இந்து மற்றும் பசுபிக் சமுத்திர பரப்பில் ஏனைய நாடுகளின் எல்லைக்குள் வேவு பார்க்க ஊடுருவும் சீனப் படகுகள் இதற்கு சிறந்த உதாரணம்.

அது மட்டுமல்லாது,உலகின் பல்வேறு நாடுகளிலும் பயன்படுத்தப்படும் அதிகளவிலான சீன ஆயுதங்களை கண்டு அமெரிக்காவே அண்மையில் அதிர்ந்து போயுள்ளது.

என்னதான் சொன்னாலும், சீனா அதிகமாக விமர்சிக்கும் அமெரிக்காவில் தான் அதன் பணத்தை அதிகமாக முதலீடு செய்திருப்பதுட ன், அதன் ஏற்றுமதி வியாபாரத்தின் பெரும் பங்கும் அமெரிக்காவில் தான் தங்கியிருக்கிறது.

அமெரிக்காவின் மனித அபிவிருத்தி சுட்டெண் மிக உயரத்தில் இருக்கிறது. ஆனால், சீனாவின் நிலைமையோ தலைகீழாகவுள்ளது. ஏனெனில், சீன அரசாங்கத்திடம் மிதமிஞ்சிய நிதி வசதி கிடைக்கின்ற போதிலும், அது மக்களின் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை.


குமரகுரு நல்லதம்பி, வெள்ளவத்தை.

## கூட்டமைப்புப்பற்றிய விமர்சனங்கள்

தற்போது கட்டுரையாளர்களுக்குக்கெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே உரலில் அகப்பட்ட அவலாகிப் போயுள்ளது. சகட்டுமேனிக்கு விமர்சித்து வருகின்றனர். அதனை சமகாலத்திலும் காணமுடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டியதுதான். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அவர்களுக்கான சரியான வழியும் ஆலோசனைகளும் கட்டுரையாளர்களால் முன்வைக்கப்படவேண்டும். அதுதான் ஆரோக்கியமான விமர்சனப் பண்பு.

ஆனால் இந்தப் பண்பை, ஆரோக்கியத்தை தற்போதைய கட்டுரையாளர்களிடம் காணமுடியாதுள்ளது கவலை தருகின்றது. விட்ட தவறுகளை, விடும் தவறுகளை மட்டும் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்காமல் செல்ல வேண்டிய வழிகளையும் செய்ய வேண்டிய பணிகளையும் ஆலோசனைகளாக முன்வையுங்கள். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கும் கட்டுரையாளர்கள் செய்யும் கடமையாகவும் இருக்கும்.

சி.பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 09

2013, நவம்பர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெபரின் ராஜ்



புகைப்பழக்கத்தை கைவிடுவதென்பது உலகில் மிகவும் சுலபமான காரியம். ஏனென்றால் நான் ஆயிரக்கணக்கான தடவைகள் அப்பழக்கத்தை கைவிட்டிருக்கிறேன்.

- மார்க் ருவைன்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

இவ்வருட ஆரம்பத்தில் லாஸ்வேகாஸில் நான் கசினோ விளையாடினேன். 2 டொலர்களுடன்தான் நான் விளையாட்டை ஆரம்பித்தேன். அங்கு வேலை செய்த பெண்கள் 140 டொலர்களை வைத்துவிளையாடுமாறு என்னைத் தூண்டினர். நான் அதற்கு உடன்படவில்லை. கசினோ ஒரு கெட்டவிளையாட்டு அல்ல. வெளிநாட்டவர்கள் கூட கசினோவில் பெருமளவு பணத்தைச் செலவு செய்கிறார்கள். கசினோவில் விளையாடவிரும்புகிற இலங்கையர்களும் விளையாடட்டுமே. ஆனால், கசினோவுக்கு எதிராகப் பேசுகிறவர்களின் வாதத்தையும் நாம் கேட்க வேண்டியது முக்கியமானதாகும்.




உயர்கல்வி அமைச்சர்
எஸ்.பி.திசாநாயக்க

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளிலேயே பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். உல்லாசப் பிரயாணத்துறையின் வளர்ச்சியையடுத்து பணத்தை இலகுவாக உழைப்பதற்கு ஒருவழியாக அது இருப்பதே இதற்குக் காரணமாகும். உல்லாசப் பிரயாணத்துறையின் வளர்ச்சியையோ அல்லது அரசாங்கத்தின் எந்தவகையான திட்டத்தையுமோ நாம் தடுத்து நிறுத்த விரும்பவில்லை. ஆனால், பெண்களின் நல்வாழ்வு குறித்து அரசாங்கத் தலைவர்கள் அக்கறைகொள்ள வேண்டும். எனவே, வர்த்தக ரீதியான பாலியல் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும். பாலியல் தொழில் சட்ட பூர்வமாக்கப்படவேண்டும்.



கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ

ஆளும் கட்சியைச் சேர்ந்த 75 சதவீதமான எம்.பி.க்களுக்கு மாத்திரம் அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளைக் கொடுத்து எஞ்சிய எம்.பி.க்களுக்கு அரசாங்கம் பாரபட்சம் காட்டக்கூடாது. பாரபட்சம் காட்டப்பட்ட எம்.பி.க்களுக்கு கல், வெற்றிலை, கருப்பட்டி, பாக்கு போன்றவற்றைக் கையாளுவதற்கான அமைச்சுப் பொறுப்புகளை அரசாங்கம் கொடுக்க வேண்டும். அந்தத் துறைகளில் அவர்கள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள். அவர்களின் திறமைகள் விரயமாவதற்கு அனுமதிக்கக் கூடாது.



ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.நளின் பண்டார

இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள் இந்தியாவை இன்று பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கின்றன. அத்தகைய சூழ்நிலையில் நாய் வாலை ஆட்டுவதில்லை. வால்தான் நாயை ஆட்டத்தொடங்கியிருக்கிறது.



நீர்ப்பாசன அமைச்சர்
நிமல் சிறிபால டி சில்வா

பிரதமர் மன்மோகன்சிங் பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ளவில்லையானால், இந்தியாவை ஒருபோதுமே இலங்கை மன்னிக்காது. கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப் படுத்துமாறு இலங்கையைக் கேட்பதற்கு முன்னதாக இந்தியா காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.



மேல்மாகாண அமைச்சர்
உதய கம்மன்பில

கசினோக்களைப் பதிவுசெய்வதற்கு 2012 ஜனவரி முதலாம் திகதிவரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தபோதிலும், இதுவரை ஒரு கசினோகூட பதிவு செய்யப்படவில்லை. கசினோ உரிமையாளர்களை கைது செய்து சிறையில் அடைத்திருக்க வேண்டும். ஆனால் நாத்தாண்டியாவில் கோழிச் சண்டை பந்தயத்தில் ஈடுபட்ட 33 பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



ஐக்கியதேசியக்கட்சி எம்.பி. ஹர்ஷா டி சில்வா

செய்தி ஆய்வு

# பாதுகாப்புத்துறைக்கு தொடர்ந்தும் கூடுதல் நிதி





பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்காக தடபுடலான ஏற்பாடுகளைச் செய்திருக்கும் அரசாங்கம் மகாநாடு முடிவடைந்த கையோடு 2014 வரவு- செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறது. வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் வகுத்திருக்கும் திட்டங்களை நவம்பர் 21 பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கிக் கூறி உரையாற்றவிருக்கிறார்.

அக்டோபர் பிற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2014 வரவு- செலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் செலவினம் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 200 கோடி ரூபாவாக அதிகரிக்கவிருக்கிறது. கடந்த வருடத்தைய செலவின மதிப்பீட்டை விடவும் இது 30 சதவீதம் அதிகமானதாகும்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 25, 300 கோடி ரூபாவும் துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சுக்கு 14,400 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 2013 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டதையும் விட இத்தடவை 3600 கோடி ரூபா குறைவாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இத்தடவை பொலிஸ் திணைக்களம் சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான புதிய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. புதிய அமைச்சுக்கு 5230 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும் பாதுகாப்புத்துறைக்கு இந்தளவு பெரிய நிதி எதற்காக, யாரின் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று கேள்விகள் கேட்கப்படுகின்றன.

சுகாதார அமைச்சுக்கு 11,760 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் ஒதுக்கப்பட்டதைவிடவும் இது 2200 கோடி ரூபா அதிகமானதாகும். உயர்கல்வி அமைச்சுக்கு 2950 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் 2790 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அடுத்த வருடத்துக்கான கடன் எல்லையை ஒரு இலட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாவாக ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் மட்டுப்படுத்தியிருக்கிறது.

அண்மைய சில வருடங்களாக வரவு- செலவுத் திட்டம் மீதான மக்களின் அக்கறை குறைந்து கொண்டே வந்திருக்கிறது. ஏனென்றால், பெரும்பாலான செலவின மதிப்பீடுகள் அடிக்கடி குறை நிரப்பு பிரேரணைகள் மூலமாக மாற்றப்படுவதுடன், வருவாய் மதிப்பீடுகளும் வரி அதிகரிப்புகள் மற்றும் வர்த்தமானி பிரகடனங்கள் மூலமான அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரிப்புகளின் ஊடாக மாற்றப்பட்டுவிடுகின்றன. வரவு- செலவுத் திட்டத்தையும் விட தங்களது வாழ்க்கை வர்த்தமானிப் பிரகடனங்கள் மூலமாகவே அடிக்கடி பாதிக்கப்படுவதாகவே மக்கள் நம்புகிறார்கள்.



முன்னைய தசாப்தங்களில் வரவு-செலவுத் திட்ட உரைகளுக்கு பத்திரிகைகள் பல பக்கங்களை ஒதுக்குவதைக் காணக்கூடியதாக இருந்தது. இப்போதெல்லாம் அத்தகைய முக்கியத்துவத்தைப் பத்திரிகைகள் அந்த உரைகளுக்கு கொடுப்பதைக் காண முடிவதில்லை. ▪

▶▶ செய்தி ஆய்வு ◀◀

# நியாயமான பின்வாங்கல்

பிரிட்டனுக்குச் செல்கின்ற வெளிநாட்டவர்களில் குறிப்பிட்ட சில நாடுகளின் பிரஜைகள் விசா காலம் முடிவடைந்த பின்னரும் அங்கு தங்கி விடாதிருப்பதை உறுதி செய்வதற்கான ஒரு ஏற்பாடாக 3000 ஸ்ரேலிங் பவுண்களை பிணைப்பணமாகச் செலுத்த வேண்டுமென்ற நடைமுறை சில மாதங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டதல்லவா? அதை இப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் கைவிட்டிருக்கிறது.

குடியேற்றவாசிகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகவே இந்தப் பிணைப்பாண ஏற்பாடு வகுக்கப்பட்டது. ஆனால், அது ஒரு பாரபட்சமான நடவடிக்கை என்றும் குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மாத்திரம் எதிரான நேர்மையீனமான செயற்பாடு என்றும் பரவலாகக் கண்டனம் செய்யப்பட்டது.

நைஜீரியா, கானா, பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய 6 நாடுகளில் இருந்து பிரிட்டன் செல்பவர்கள் மாத்திரமே விசாவுடன் சேர்த்து 3000 பவுண்கள் பிணைப் பணத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த நாடுகளில் இருந்து செல்பவர்களே பிரிட்டனில் விசா காலாவதியான பிறகும் தங்கிவிடக் கூடிய கூடுதல் ஆபத்து இருப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் சந்தேகித்தது.


இந்தப் பாரபட்சமான நடவடிக்கை இந்த 6 நாடுகளையும் அவமதிப்பதாக அமைந்தது. இதுதொடர்பான தங்களது அதிருப்தியை இந்நாடுகளின் அரசாங்கங்கள் பிரிட்டனிடம் தெரியப்படுத்தியுமிருந்தன. பிணைப்பண விவகாரத்தில் நிறவெறிப்போக்கு ஒன்று இருந்ததாகவும் நோக்கப்பட்டது. ஏனென்றால் இலக்கு வைக்கப்பட்டவை வெள்ளையினத்தவரின் நாடுகள் அல்ல. இத்திட்டத்துக்கு பிரிட்டனிலும் கூட எதிர்ப்புகள் கிளம்பவே செய்தன. குறிப்பாக, அரசாங்கத்தின் பங்காளிகளான லிபரல் ஜனநாயகக் கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். பிரிட்டனின் சிறந்த பாரம்பரியங்களுக்கு எதிரான நாகரிகமில்லாத குறுகிய நோக்குடைய ஒரு திட்டம் இது என்று பிரிட்டிஷ் ஊடகங்களும் விமர்சனம் செய்தன.

குடியேற்றவாசிகளுக்கு எதிரான கடுமையான மனநிலை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அரசியல் மற்றும் இராஜதந்திர முட்டுப்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதுடன், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று உணரப்பட்டதாகத் தெரிகிறது. குடியேற்றவாசிகள் விவகாரம் தொடர்பில் பிரிட்டிஷ் பொதுமக்கள் மத்தியிலும் பிளவுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

பிரிட்டனில் குடியேற்றத்தை பலர் எதிர்க்கின்ற போதிலும், பிரிட்டிஷ் சமுதாயத்தின் பல்கலாசாரப் பாரம்பரியத்தை அவர்கள் மதிக்கிறார்கள். குடிவரவு இன்று பிரிட்டனால் நிலைவரங்களைச் சமாளிக்க முடியாமற் போகும். ஏனென்றால், அதன் சமுதாயம் பெரும்பான்மையாக வயோதிபர்களைக் கொண்டதாக இருக்கிறது. அத்துடன் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கூடுதலாகத் தேவைப்படுகிறார்கள். பிரச்சினை என்னவென்றால் சட்டபூர்வ மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட குடிவரவுக்கும் சட்டவிரோத குடிவரவுக்கும் இடையே வேறுபாட்டை எவ்வாறு காண்பது என்பதுதான். பிணைப் பண நடைமுறை சட்டவிரோத குடியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு பெருமளவுக்கு உதவியிருக்குமென்று கூறமுடியாது. ஏனென்றால் விசாகாலம் முடிவடைந்த பிறகும் தங்கவேண்டுமென்று விரும்புபவர்கள் பிணைப் பணத்தை செலுத்திய பிறகும் கூட அவ்வாறு செய்யலாம். பிணைப்பண நடைமுறை பொருளாதாரத்துக்கு முக்கியமான வர்த்தக முதலீடு மற்றும் உல்லாசப்பிரயாணத்துறையை பாதித்திருக்கக்கூடும். வெளிநாட்டு மாணவர்களை கடுமையாக வேண்டிநிற்கும் பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களும் பாதிக்கப்பட்டிருக்கும்.



எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் பிணைப்பாண நடைமுறையைக் கைவிடத் தீர்மானித்திருக்கிறது. இலக்கு வைக்கப்பட்ட 6 நாடுகளில் இரண்டுக்கு பிரதமர் டேவிட் கெமரூன் விஜயம் செய்யவிருக்கும் நிலையில், இத்தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருக்கிறது. கொழும்பில் பொதுநலவரசு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகை தரவிருக்கும் அவர் இம்மாத பிற்பகுதியில் இந்தியாவிற்கும் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ▪



பேராசிரியர் சி.சிவசேகரம்

# பொதுநலவரசு மகாநாடு பகிஷ்கரிப்பும் பாசாங்குகளும்

CHOGM 2013
Sri Lanka

பொதுநலவரசு நாடுகள் எனப்படும் அமைப்பு பிரித்தானியக் கொலனியத்தின் இறுதிச் சின்னங்களில் ஒன்று. இந்தியா கொலனி ஆட்சியினின்று விடுபட்ட பின்பு பிரித்தானியாவின் கொலனியச் சாம்ராச்சியம் வேகமாக உதிரத் தொடங்கியது. 1950களில் மேற்கு ஆபிரிக்க கொலனிகளில் தனக்கு உடன்பாடான ஆட்சியாளர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்து நேரடி ஆட்சியைக் கைவிட்ட பிரித்தானியா கிழக்கு ஆபிரிக்காவில் இரண்டு நாடுகளில் கடுமையான ஆயுதப் போராட்டத்தின் பின்பே தன்நேரடி அதிகாரத்தைக் கைநழுவவிட்டது. 1960 களின் பின்பு (சீனாவுக்குரிய) ஹொங்ஹொங், (ஆர்ஜென் டீனாவுக்குரிய) மல்வினாஸ் (ஃபாக்லன்ட்) தீவுகள், ஸ்பெயினின் ஜிப்ரால்ற்றர் போன்ற சிறுபிராந்தியங்களை மட்டும் தன்வசம் வைத்து வந்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் மிகுந்த தயக்கத்துடன் ஹொங்ஹொங்கைக் கைவிட்டது. மல்வினாஸ் தீவுகள் இன்னமும் ஆர்ஜென்ரீனாவுடனான கடும் முரண்பாட்டுக் குரிய பிரச்சினையாக உள்ளன. ஜிப்ரால்ற்றரை மீட்பதற்கு அங்குள்ள பிரித்தானியத் தளத்தின் தொழில்பார்ப்போரதும் அந்த அயலில் வாழ்வோரதும் பொருளாதாரத் தேவைகள் ஒரு முக்கிய தடையாக உள்ளன.

கொலனிகளை இழந்த பின்பும் முன்னாள் கொலனிகளில் தனது செல்வாக்கைப் பேணவும் பொருளாதார நலன்களைத் தொடரவும் அவற்றில் பிரித்தானிய உற்பத்திகளுக்கான ஏகபோகச் சந்தையை தக்க வைக்கவுமாக பிரித்தானியா பயன்படுத்திய ராஜதந்திரக் கருவிகளில் பொதுநலவரசு அமைப்பு முக்கியமானது. அதை விடவும், தம்மைக் குடியரசுகளாகப் பிரகடனப்படுத்தாத முன்னாள் கொலனிகட்கு, இன்னமும், பிரித்தானிய அரசியே அரசின் சடங்காசாரமான தலைவியாவார். அந்தத் தகைமையை 1957இல் பிரித்தானியா பயன்படுத்தி, பிரித்தானிய கயானா என அறியப்பட்ட இன்றைய கயானாவில் செட்டி ஜகனின் இடதுசாரி அரசாங்கத்தைக் கலைத்தது. இலங்கை ஒரு குடியரசாக அறிவிக்கப்படுவதன் பின்புலத்தில் இலங்கையின் நீதித்துறையின் உச்ச அதிகாரம் பிரித்தானிய அரசியின் பிரிவு கவுன்சிலிடம் இருந்ததன் பயனான முரண்பாடுகளும் இருந்தன. இந்தியாவில் தனது ஆட்சியை இழந்த பிரித்தானிய சாம்ராச்சியம் பல்லிழந்த சிங்கம் என்று கூறப்பட்டது. பொதுநலவரசு அமைப்பு அதன் பொய்ப்பல் வரிசை என்று சொல்லலாமாயினும், அப்பொய்ப் பல்வரிசை கொண்டு எதையும் கடிக்க இயலாது என்பது உலகறிந்த உண்மை.

பிரித்தானியா இன்று அமெரிக்காவின் இளைய கூட்டணியாக இயங்குவதன் மூலமே சர்வதேச

அரங்கில் தனது நலன்களைப் பேணுகிறது. பிரித்தானியா இன்னமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு முழுமையான பங்காளியாக இயலாமைக்கு அமெரிக்காவுடனான நெருங்கிய உறவு ஒரு முக்கிய காரணமாகும். பிரித்தானியா தனது பொருளாதாரப் பலவீனத்தாலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது என்பதில் ஐயமில்லை. அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்ததன் பயனாகவும் அதன் முன்னாள் கொலனிகளில் படிப்படியாக அமெரிக்க பொருளாதாரச் செல்வாக்கும் அரசியல் செல்வாக்கும் வலுப்பெற்றதன் பயனாகவும் பொதுநலவரசு அமைப்பின் சர்வதேச பெறுமதி ஏற்கனவே மிகத் தாழ்ந்துவிட்டது. பெயரளவில் பொதுநலவரசு அமைப்பு உலகின் காற்பங்கினரைக் கொண்ட ஒரு சர்வதேச சமூகம் எனப்பட்டாலும், அதை வலுவுடன் இயக்குவதற்கான அரசியல், பொருளாதார அடிப்படைகள் எல்லாம் அரியுண்டு பலகாலமாகி

**மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு இன்று சர்வதேச அங்கீகாரம் தேவைப்படுகிறது. தனக்கு ஒரு சர்வதேச நம்பகத்தன்மை உள்ளது என்று இலங்கை மக்களை நம்ப வைப்பதற்கான தேவை இருக்கிறது. அதற்கான எந்த வாய்ப்பையும் அரசாங்கம் தவற விடவில்லை. அந்த வகையில் பொதுநலவரசு நாடுகளின் தலைவர்களின் சந்திப்பு அதற்கு கிடைத்துள்ள ஒரு அரிய வாய்ப்பு என்பதில் சந்தேகமில்லை**

விட்டது. அதைவிட வலுவான பன்னாட்டு ஒத்துழைப்பு அமைப்புகளாகப் பிராந்திய அடிப்படையில் ஆசியான் போன்ற பலவும் உருவாகிவிட்டன. எனவே, பொதுநலவரசு அமைப்பின் தலைமை யாரிடம் இருக்கிறது என்பது வெற்றாரவாரமான புகழே ஒழிய வேறெதுவுமல்ல.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு இன்று சர்வதேச அங்கீகாரம் தேவைப்படுகிறது. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியவாதிகள் பலர் கற்பனை செய்வது போல தேசிய இனப்பிரச்சினை பற்றியும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் பற்றியும் மேற்குலக அழுத்தங்களிலிருந்து தன்னைத் தற்காப்பது அல்ல. அதைவிட முக்கியமாகத் தனக்கு ஒரு சர்வதேச நம்பகத்தன்மை உள்ளது என்று இலங்கை மக்களை நம்ப வைப்பதற்கான தேவை அதற்கு உள்ளது. அதற்கான எந்த வாய்ப்பையும் ராஜபக்ஷ அரசாங்கம் தவறவிடவில்லை. அவ்வகையில் பொதுநலவரசு நாடுகளின் தலைவர்களின் சந்திப்பு அதற்குக் கிடைத்துள்ள ஒரு அரியவாய்ப்பு என்பதில் ஐயமில்லை.

இந்தப் பொதுநலவரசு மகாநாட்டையும் 1976 இல் நடந்த அணிசேரா நாடுகளின் மகாநாட்டையும் ஒப்பிடுகிற அரசியல் அவதானிகள் முக்கியமான சில விடயங்களைத் தவற விடுகின்றனர்.

அணிசேரா இயக்கத்தின் முன்னிலை நாடுகளில் ஒன்றாக இலங்கை முதலிலிருந்தே இருந்தது போக, 1970களின் நடுப்பகுதியை அணிசேரா நாடுகள் இயக்கத்தின் உச்சநிலை எனலாம். அம்மகாநாடு உலகின் பெரும்பான்மையைக் கொண்ட உறுப்புரிமை நாடுகளிடையே மட்டுமன்றிச் சீனா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றின் மதிப்பையும் பெற்ற ஒன்றாகும். அதன் பயனான நலன்கள் இலங்கையை வந்தடையாமைக்குச் சர்வதேச மட்டத்திலும் இலங்கையிலும் 1970களின் ஈற்றுப் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கிய பங்களித்தன. அம்மகாநாடு நடந்தபோது, இலங்கையில் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டால் உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்ட காலம் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருந்தது. அம்மகாநாட்டுக்கான செலவு அதிகம் என்று முறைப்படுவோர், பொதுநலவரசு மகாநாட்டிற்கு ஆகும் செலவுடன் அதை நேர்மையாக ஒப்பிட்டால் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு வெவ்வேறு பரிமாணங்களையுடையன என உணர்வர்.

பொதுநலவரசு மகாநாட்டையொட்டிய செலவுகள் மக்கள் மீது எத்தகைய சுமைகளை ஏற்றப்போகின்றன என்பதைப் பற்றி நாம் கணிக்க முதலே, வரவுள்ள வரவு-செலவுத்திட்டம் பாரிய சுமைகளை ஏற்றிவிடும்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கோ சர்வதேசச் செல்வாக்கிற்கோ எவ்விதப் பெறுமதியுமற்ற இம்மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான தேவை, ஒன்று மட்டுமே. இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியாக பலவீனப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் கூறுவதைப் பொய்ப்பிக்க மட்டுமன்றி, மக்கள் மனதில் அரசாங்கத்தைப் பற்றிய ஐயங்கள் எழுகிற சூழ்நிலையில் மக்களின் கவனத்தை உண்மையான பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பும் தேவை இலங்கை அரசாங்கத்திற்கும் உண்மையில் இலங்கையை ஆளுகிற குடும்ப ஆட்சிக்கும் உள்ளது. எனவே இக்கூத்து தேவைப்படுகிறது. இதையொத்த பண விரயக் கேளிக்கைகளான கருணாநிதியின் செம்மொழி மகாநாடும் ஜெயலலிதா நடத்திய ஆடம்பரத் திருமண விழாவும் மட்டுமே அவர்களின் தோல்விகட்குக்காரணமல்ல. எனவே பொதுநலவரசு மகாநாடு ஆடம்பரமாக நடப்பதால் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று ஆரூடம் கூறுவது ஆழமான அரசியல் பார்வைக்குரியதல்ல.

இந்த மகாநாடு இலங்கையில் நடக்கக்கூடாது என்று நினைத்தவர்களால் அதை நிகழாமற் தடுக்க இயலவில்லை. இலங்கையில் நடத்துவது என்ற முடிவு உறுதிப்படுத்தப்பட்ட பின்பு, யாரும் பகிஷ்க

ரித்தாலும் மகாநாடு குழப்பப்பட்டாலும் எவ்வாறோ மகாநாடு நடவாமலே போயிருந்தாலும், அதற்கான பழியை புலம்பெயர்ந்த தமிழர் மீதும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சிக்காரர்கள் மீதும் எதிர்க்கட்சிகள் மீதும் சுமத்தி,பேரினவாதத்தை மேலும் உசுப்பேற்றி, அதன்மூலம் அரசியல் இலாபம்பெற ராஜபக்ஷ ஆட்சிக்கு இயலுமாய் இருந்திருக்கும். எனவே தான் அதற்கு இந்த பொதுநலவரசு மகாநாடு என்ற வெள்ளையானை இருந்தாலும் ஆயிரம்

**உச்சி மகாநாடு இலங்கையில் நடக்கக்கூடாது என்று நினைத்தவர்களால் அதை நிகழாமல் தடுக்க இயலவில்லை. யாரும் பகிஷ்கரித்தாலும் மகாநாடு குழப்பப்பட்டாலும் அதற்கான பழியை புலம்பெயர் தமிழர்கள் மீதும் ஏகாதிபத்திய சூழ்ச்சிக்காரர்கள் மீதும் எதிர்க்கட்சிகள் மீதும் சுமத்தி பேரினவாதத்தை மேலும் உசுப்பேத்தி அரசியல் இலாபம்பெற ராஜபக்ஷ ஆட்சிக்கு இயலுமாய் இருந்திருக்கும்**

பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்லலாம். இந்த வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுகிற செலவை யார் பொறுப்பார்கள் என்பதை நான் விசாரிக்க வேண்டியதில்லை.

பங்குபற்றப் போவதில்லை என்று பல மாதங்கள் முன்பு போக்குக்காட்டிய பிரித்தானியப் பிரதமரின் மனதை மாற்றியது எது என்று ஒரு விடயத்தைக் குறிப்பாகக் காட்டுவது கடினம். ஆனால் நெருக்கடியிலுள்ள பிரித்தானியப் பொருளாதாரச் சூழலில், இலங்கையில் பிரித்தானிய வணிக, முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய பேரங்கள் நடந்தமைக்கான சாடைகள் பலவும் உள்ளன.

எனவே பிரித்தானியப் பங்குபற்றலும் அவுஸ்திரேலியப் பங்குபற்றலும் தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினையுடனோ, போர்க்குற்றங்களுடனோ, மனித உரிமை மீறல்களுடனோ, சட்டமும் நீதியும் பற்றிய பிரச்சினைகளுடனோ, ஊடகச் சுதந்திரத்துடனோ தொடர்புடையனவல்ல. அதே அளவுக்கு, கனடா பங்குபற்றாமையும் கனடாவின் வலதுசாரி அரசாங்கத்தின் மனித உரிமை அக்கறைகளின் பாற்பட்டதுமல்ல. இலங்கையில் மேலாதிக்கத்திற்கான போட்டி, அமெரிக்கா என்கிற ஏகாதிபத்தியப் பெருவல்லரசுக்கும் இந்தியா என்கிற பிராந்திய வல்லரசுக்குமிடையி லானது என்பதை விளங்கிக் கொள்வது பொதுநலவரசு மகாநாட்டு கயிறிழுப்பை விளங்குவதற்கும் உதவுமென நினைக்கிறேன்.

இத்தகைய ஒரு பின்னணியில், மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான வாய்ப்பை பிரித்தானியாவும் இந்தியாவும் சேர்ந்து ஏற்படுத்த அவற்றுக்கு நோக்கங்கள் இருந்திருந்தால் அந்த நோக்கங்களை மாற்றுகிறவிதமாக எதுவும் நடந்ததாகக் கூற இயலுமா? கமலேஷ் ஷர்மா எனும் பொதுநலவரசு செயலாளர் நாயகம் பொதுநலவரசு நாடுகளின் குறிப்பான அக்கறைக்குரிய இலங்கை நீதித்துறை தொடர்பான தகவல்களை வேண்டுமென்றே உறுப்புரிமை நாடுகளிடமிருந்து மறைத்துள்ளார் என்று கனடா குற்றஞ்சாட்டியுள்ளது. அது உண்மையானது. ஆனால், கமலேஷ் ஷர்மா என்ற தனிமனிதர் தனித்து அதைச் செய்திருக்க இயலுமா என்ற கேள்வி எழுகிறது. அந்த மறைப்பிற்கு பிரித்தானிய, இந்திய நிறுவன ஆதரவும் தூண்டுதலும் இருந்தனவா என்பது ஆராய வேண்டிய விடயம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைக் குட்டை குழப்புவதில் தமிழ் நாட்டு அரசியல் கூத்தாடிகளுக்கு நிகராக எவருமில்லை என்பதை 2006 முதல் நாம் மிகத் தெளிவாகக் கண்டிருக்கிறோம். 2008 இல் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி முன்னெடுத்த போர் நிறுத்த இயக்கத்தைக் கடத்திச் சென்று கருணாநிதி காட்டிக் கொடுத்ததை மறந்திருக்கமாட்டோம். இம்முறை, மன்மோகன் சிங் இலங்கைக்குப் போகக்கூடாது என்று கருணாநிதி தொடங்கிய நாடகத்தை ஜெயலலிதா முற்றிலும் தன்வசமாக்கிக் கொண்டார்.

மன்மோகன்சிங் இலங்கை வருவதற்கு தயங்கினார் என்பதை விட வருவதற்கான தடைகளை எப்படிச் சமாளிப்பது என்று திட்டமிட்டுக்கொண்டிருந்தார் என்பது கூட பொருந்தும். தமிழக அழுத்தங்கள் பயனளிக்கக் கூடியவையாக இருந்தால் அவர் எப்போதோ தன்னால் வர இயலாது என்று அறிவித்திருப்பார். அது நடக்கவில்லை. இப்போது அவர் வரக் கூடும் எனத் தெரிகிறது. அதற்கமைய எவ்விதமான உடனடித்தேவையும் இல்லாமல் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தமை மன்மோகன் சிங் இலங்கைக்கு வருவதாக எடுக்கும் முடிவுக்குத் தூண்டுதலாய் இருப்பதாய் கூறப்படுகிறது.

இந்த பனம்பழத்தை விழுத்த ஒரு காகமும் அமரும் தேவை இருக்கவில்லை. எந்தக் கைகள் பனைமர த்தை உலுக்கியிருக்கலாம் என ஊகித்தல் கடினமானதுமில்லை. வடமாகாண சபைத்தேர்தலை நடத்த கைகொடுத்த மன்மோகன்சிங் அரசாங்கத்திற்கு பிரதியுபகாரமாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டதா? அல்லது ராஜபக்ஷவிற்கும் சேர்த்து ஒரு சலுகையாக அந்த அழைப்பு விடுக்கப்பட்டதா என்பது சிந்தனைக்குரியது.

மன்மோகன்சிங் வந்தாலும் வராது மறிக்கப்பட்டாலும் அது இலங்கை- இந்திய உறவை பாதிக்கப்


போவதில்லை. இந்திரா காந்தியின் காலத்தில் தமிழ்த்தேசியப் பிரச்சினையைப் பாவித்து இலங்கை அரசாங்கத்தைப் பணிய வைக்கும் ஒரு தேவை இருந்தது. அத்தேவை 1990களில் குறையத் தொடங்கி 2003இல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் குழப்பப்பட்ட பின்பு இல்லாமலே போய்விட்டது. இலங்கையில் இந்திய முதலாளியம் பெறவுள்ள பொருளாதார நலன்களையோ இந்திய அரசு நாடுகிற பொருளாதார மேலாதிக்கத்தையோ அரசியல் - இராணுவச் செல்வாக்கையோ தமிழகத்து அரசியல் சினிமாவுக்காகப் பறிகொடுக்க இந்திய முதலாளியம் ஆயத்தமாக இல்லை. இந்தியா தேசிய இனப்பிரச்சினையில் அளவுமீறிய அழுத்தஞ் செலுத்தாதவரை ராஜபக்ஷ ஆட்சிக்கு மன் மோகன் சிங் வராமல் இருப்பதை இட்டு எவ்வித மனக்குறையும் இருக்க நியாயம் இல்லை.

தமிழக அரசியல் கட்சிகளின் அழுத்தங்களுக்கு இப்போது ஒரு பெறுமதி உள்ளது போலத் தெரிந்தால் அதன் காரணம் அடுத்த ஆண்டு வரவுள்ள தேர்தல் தான். அது முடிந்தபிறகு வலுவான ஒரு அரசாங்கம் அமைந்தாலும், அமையாவிட்டாலும் தமிழகக் கட்சிகளின் போலி மிரட்டல்களுக்கு அதிக பெறுமதி இராது. இதை நாம் சென்ற பொதுத்தேர்தலுக்கு முன்னர் கண்டோம்.

தமிழக அரசியல் கட்சிகள் மன்மோகன் சிங் மகாநாட்டில் பங்கேற்கக் கூடாதென்ற கோரிக்கையில் வென்றால் அது பொன்னான ஒரு வெற்றி. இப்போது தெரிகிற சாடைகள் கூறுமாப்போல் அது தோற்றால் அது ஒரு பாரிய மூக்குடைப்பு மட்டுமன்றி ராஜபக்ஷவிற்கும் மேலும் ஒரு வெற்றியாகிவிடும். அதன் விளைவு ஏனெனில் ஒருவிதமான நிர்ப்பந்தமுமின்றி ராஜபக்ஷவிற்கு ஒரு மேலதிக வெற்றியை வழங்கிய பெருமை தமிழக அரசியல்வாதிகட்குரியதாகும். அதுபோக ஒரு புறம் புறக்கணிப்பு நாடகமாடிக்கொண்டு மறுபுறம் மன்மோகன்சிங் வருவதற்கு ஒரு நல்லசாட்டு எடுத்துக்கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் வெறுமையை மீண்டும் புலனாக்கி வருகிறது.

பொதுநலவரசு மகாநாட்டை எதிர்க்க தமிழ்த்தேசியவாதிகட்கு உள்ள நியாயத்தை விட வலுவான நியாயம் சிங்கள மக்கள் உட்பட முழுநாட்டினருக்கும் உண்டு.

தடுமாறுகிற ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு ஊன்றுகோல்களாகவே நாட்டிற் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் நடக்கின்றன. அவற்றுக்கான கடன் சுமையை மக்களே செலுத்த வேண்டும். ஏலவே உள்ள சுமைகளின் மேல் பொதுநலவரசு மகாநாடு செலுத்தவுள்ள சுமையைப்பற்றி பேசுவோமானால் சிங்கள மக்களை அரசியல் ரீதியாக விழிப்பூட்ட வாய்ப்பு உண்டு. குறுந்தமிழ்த் தேசியவாதம் அவ்வாறு சிந்திக்க வாய்ப்பளியாது. எனவே தமிழ் மக்கள் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது பெற்ற அரசியல் உயிர்ப்பை பொருளுள்ள முறையில் முன்னெடுப்பார்களாயின் அவர்களுடையதும் முழுநாட்டினதும் மீள் எழுச்சிக்கு வழிசமைப்போராவர். ■



CHOGM 2013
Sri Lanka



குமார் டேவிட்

# உச்சிமகாநாட்டுக்குப் பிறகு எதிர்பார்க்கக்கூடிய நிகழ்வுப் போக்குகள்

**பொதுநலவரசு மகாநாடு உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் ஒரு வெற்றியாக அமைகிறது என்பதில் சந்தேகமில்லை. வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமையிலான மாகாண அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு அனுமதித்ததே அரசாங்கம் அதற்கு செலுத்திய பெரிய விலையாகும்**



பொதுநலவரசு உச்சி மகாநாடு தொடர்பான விவகாரங்கள் இதுவரையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு வெற்றியாகவே அமைந்திருக்கின்றன. திடீர் மாற்றம் ஏதாவது ஏற்படுமென்று நினைப்பதற்கு காரணமில்லை. பல சாதகமான காரியங்கள் நடந்தேறியிருக்கின்றன. கோதாபயவினதும் பிக்குமார்களினதும் எதிர்ப்புக்கு மத்தியிலும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. அல்லாவிட்டால் பொதுநலவரசு உச்சிமகாநாடு இடம்பெறுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. வெள்ளைவான் சம்பவங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் துன் புறுத்தப்படுகின்ற சம்பவங்கள் குறை ந்திருக்கின்றன. சிறைபிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இராணுவத்தினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட காட்சிகளை ஒளிபரப்பிய சனல் 4 தொலைக்காட்சி அலைவரிசைக்கு அனுமதியளிக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற நிலையை வெற்றிகொள்வதில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற அக்கறையின் விளைவாகத் தோன்றிய நிலைவரம் ஜனாதிபதிக்கும் தமிழர்கள் மற்றும் ஜனநாயகவாதிகளுக்கும் பரஸ்பரம் பயனுடையதாகவே அமைந்திருப்ப

தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

'பொதுநலவரசு உச்சிமகாநாடு ஜனாதிபதிக்கு ஒரு வெற்றி. ஆனால், சில விலைகள் செலுத்தப்பட்டிருக்கின் றன' என்ற தலைப்பில் அரசியல் ஆய் வாளர் ராஜன் பிலிப்ஸ் அக்டோபர் 27 சண்டே ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் இலங்கையின் இன்றைய நிலைவரம் குறித்து கச்சித மாக குறிப்பிட்டிருக்கிறார். அதில் ஒரு பகுதியை தமிழ் வாசகர்களுக்காக இங்கே தருகின்றேன்.

'நவம்பர் பொதுநலவரசு உச்சிமகா நாடு உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் ஒரு வெற்றியாக அமைகிறது என்ப திற் சந்தேகமில்லை. மனித உரிமை கள் மற்றும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது குற்றப்பிரே ரணை கொண்டுவரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை போன்ற விவகாரங்கள் தொடர்பில் விசனம் கொண்ட எதிராளிகளையெல் லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, பொது நலவரசு செயலகத்தில் இணைந்து அர சாங்கத்தினால் திட்டமிட்டபடி உச்சிமகாநாடு நடைபெறுவதை உறு திப்படுத்தக்கூடியதாக இருந்திருக்கி றது. கனடா மற்றும் இந்தியா போன்ற நாடுகளினால் பிரதமர் மட்டப் பகிஷ்க ரிப்புகள் இடம்பெறக்கூடும். ஆனால், அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் இலங்கையைக் கைவிடப்போவ தில்லை. உச்சி மகாநாடு தொடர்பான ஒருவாரகாலக் கொண்டாட்டங்கள் நவம்பர் 10 முதல் ஆரம்பமாகப் போகின்றன. கொழும்பு நகரம் அழ காக்கப்பட்டு கம்பீரமாகத் தோற்றம ளிக்கிறது. புதிதாகத் திறக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக விமான நிலையத்திலிருந்து பொதுநல வரசு நாடுகளின் தலைவர்களும் தூதுக்குழுக்களும் கொழும்புக்கு பவனிவரப்போகின்றனர்.

'வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி அதில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு தலைமையிலான மாகாண அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு அனுமதித்ததே அரசாங்கம் செலுத் திய பெரிய விலையாகும். மாகாணச பைத் தேர்தலை ரத்துச்செய்து, மாகா ணசபை முறையையும் முற்றாக ஒழித் துவிடவேண்டுமென்று கோதாபயவிட மிருந்து வந்த பெருமளவு நெருக்கு தல்களின் பின்னணியில் நோக்கும் போது இது மிகவும் நேர்மறையான ஒரு நகர்வாகும். நிலைவரங்கள் இப் போது இரண்டிலொரு வழியில் செல லக்கூடும். செலுத்திய விலையை நேர் மறையான பயனாக அல்லது நிரந்த ரமான அனர்த்தமாக மாற்றுவதற்கு அரசாங்கத்தினால் முடியும்.

'போருக்குப் பின்னரான காலகட்டத் தில் யாழ்ப்பாணக் குடாநாடு, மன் னார் மற்றும் வன்னியில் நிலவுகின்ற பிரச்சினைகளைக் கையாளுவதற்கு வடமாகாண நிருவாகத்துடன் பணி யாற்றி கிழக்கு மாகாணத்துக்கு ஒரு முன்னுதாரணத்தை அரசாங்கத்தி னால் வகுக்கமுடியும். அத்துடன் இந்த அனுபவத்தை ஏனைய மாகாண சபை களுக்கு ஒரு வகைமாதிரியாக (mod-el) பயன்படுத்தலாம். இது நேர்மறை யான பக்கம். இதுமிகவும் கஷ்டமான பணியாக அமையும். ஏனென்றால் ராஜபக்ஷ குடும்பத்தினதும் அரசாங் கத்தினதும் சிந்தனையிலும் அணுகுமு றையிலும் இது முற்றுமுழுதான மாற் றத்தை வேண்டி நிற்கிறது. இராணுவவாதச் சிந்தனையில் தொடர்ந்தும் செயற்பட்டு அரசியல் ரீதியில் சகலதையும் குளறுபடியாக்கு வதே இதற்கு மாற்று ஆகும். பழைய விளையாட்டையே தொடருவது சுலபமானது. ஆனால், அது அனர்த் தத்தை நோக்கிய பாதை என்பது மாத் திரம் நிச்சயமானது' இதுவே ராஜன் பிலிப்ஸின் மதிப்பீடாகும்.

## டேவிட் கெமரூனின் யாழ்ப்பாண விஜயம்

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெம ரூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யத் தீர்மானித்திருக்கிறார். அவ் வாறு அவர் சென்றால், யாழ்ப்பாணத் துக்கு விஜயம் செய்யும் முதல் வெளி நாட்டுத் தலைவராக அவரே இருப் பார். உச்சிமகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டும் அல்லது மகிந்த ராஜபக்ஷ வுடன் கடுமையாகப் பேசவேண்டும் என்று கெமரூனுக்கு கடுமையான நெருக்குதல்கள் கொடுக்கப்படுகின் றன. துரதிர்ஷ்டவசம் என்னவென் றால், தடித்த தோலும் சூழ்ச்சித்தன மான போக்கையும் கொண்ட இல ங்கை அரசாங்கம் எவரினதும் கடுஞ் சொற்களினால் குழப்பமடையப் போவதில்லை. அத்துடன் நிறை வேற்ற நினைக்காத உறுதிமொழி களை வழங்குவதிலும் அது பின்னிற் கப்போவதில்லை. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு புத்திசாலித்தனமாகப் பயன்ப டுத்துமேயானால், கெமரூனின் யாழ்ப் பாண விஜயம் மிகவும் பயனுறுதி யுடையதாக அமையும். போர்க் குற் றங்கள் பற்றிப் பேசுவதுடன் மாத்திரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நின்று விடாமல், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பி லான அக்கறைகளையும் வெளிக் காட்ட வேண்டும். கெமரூன் இலங் கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய முயற்சிக்கின்றார். அத்துடன், தனது எதிரணியை சாந்தப் படுத்துவதிலும் நாட்டம் கொண்டிருக் கிறார் என்று இலங்கை அதிகாரிகள்

**வட மாகாண சபைத்தேர்தலை தடுப்பதற்கு பிக்கு மாரும் கோதாபயவும் இராணுவமும் செய்த பிரசா ரங்கள் எல்லாம் புஷ்வானமாகப் போயின. அச்சு றுத்தல்களை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஜனாதிபதியினால் அலட்சியம் செய்யக்கூடிய தாக இருந்தது. அரசியல் களத்தில் பேரினவா தத்தின் செல்வாக்கு குறித்து மீள்மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகும்**

ஏற்கனவே கூறியிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

'மனித உரிமைகளைப் பேணுவதில் அவர்களின் செயற்பாடுகள் எனக்கு திருப்தியளிக்கவில்லை. போரின் முடிவைத் தொடர்ந்து அவர்கள் செய்திருக்கக்கூடிய காரியங்கள் குறித்து நான் மகிழ்ச்சியடையவில்லை. இந்த விடயங்கள் குறித்து அவர்களுடன் வெளிப்படையான பேச்சுகளை நாம் நடத்துவோம்' என்று கெமரூன் கூறியிருக்கிறார். 'லண்டனின் அக்கறை போர்க்குற்றங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக மாத்திரம் இருக்காது. சட்டத்தின் ஆட்சிபற்றியும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். உச்சிமகாநாட்டுக்குப் பிறகு 53 நாடுகளைக் கொண்ட பொதுநலவரசு அமைப்பின் தலைமைப்பதவியை கொழும்பு ஏற்கவிருப்பதால் அந்த அமைப்பின் பண்புவிழுமியங்களையும் கோட்பாடுகளையும் மதித்து நடப்பதில் தனக்கிருக்கும் விருப்பத்தை இலங்கை வெளிக்காட்டவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்' என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரண்கின் குறிப்பிட்டிருந்தார். பிரிட்டனின் சனல் 4வினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை இலங்கை விசாரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார். சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை இலங்கை ஆயுதப்படைகள் கொலை செய்ததாகவும் உள்நாட்டுப் போரின் போது யுத்த சூனியப் பிரதேசங்களில் தஞ்சமடைந்த குடிமக்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் சனல்-4 குற்றஞ்சாட்டியது என்பது தெரிந்ததே.

## பேரினவாதம் வலுவிழக்கச் செய்யப்பட்டதா?

வடமாகாணசபைத் தேர்தலைத் தடுப்பதற்கு பிக்குமாரும் கோதாபயவும் இராணுவமும் செய்த பிரசாரங்கள் எல்லாம் வெறும் புஷ்வாணமாகிப்போயின. உண்மையில் அந்தப் பிரசாரங்கள் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய ஊர்வலங்கள் இல்லை. பிரமாண்டமான பேரணிகள் இல்லை. அச்சுறுத்தல்களை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஜனாதிபதியினால் அலட்சியம் செய்யக்கூடியதாக இருந்தது. அரசியல் களத்தில் பேரினவாதத்தின் செல்வாக்குக் குறித்து மீள்மதிப்பீடு செய்யவேண்டியது அவசியமாகும். முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களும்கூட தற்போதைக்கு அடங்கிப் போயிருக்கின்றன போலத்தெரிகிறது. பொதுநலவரசு உச்சிமகாநாட்டின் போது இந்தக் கிறுக்கன்கள் தங்களது பேரினவாத விளையாட்டைக் காட்டப் புறப்படுவார்களானால், நிச்சயமாக ஒடுக்கப்படுவார்கள்.

பேரினவாதம் வலுவிழக்கச் செய்யப்பட்டதற்கான பிரதான காரணங்கள் வருமாறு;

1. உள்நாட்டு அரசியல் சமுதாயத்தின் மீது சர்வதேச சமூகத்தின் அதிகாரச் செல்வாக்கு அவதானிகள் நினைத்ததைக் காட்டிலும் கூடுதலான அளவுக்குப் பெரியதாகும். உரிமை மீறல்களையும் நீதித்துறையின் சுதந்திரங்களை மிதிக்கும் செயற்பாடுகளையும் அரசாங்கம் முற்றுமுழுதாக நிறுத்த நிர்ப்பந்திக்கப்படும் வரை இடையறாது சர்வதேச சமூகம் நெருக்குதல்களைப் பிரயோகித்துக் கொண்டிருக்க வேண்டும்.

2. தேர்தல் வெற்றியின் பரிமாணம் மிகவும் விசாலமானதாகும். ராஜபக்ஷ அதை மதித்து நடப்பதைத் தவிர வேறுவழியிருக்கவில்லை. பொதுநலவரசு உச்சி மகாநாடு காரணமாகவே ஜனாதிபதி வடக்குத் தேர்தலை நடத்த வேண்டியிருந்தது. ஆனால், தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு (உச்சிமகாநாடு நடக்கிறதோ, இல்லையோ) தமிழ் மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதைத் தவிர, அவரால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

3. ஒவ்வொரு புதருக்குள்ளும் இருந்து புலிகள் தலையைக் காட்டுகிறார்கள் என்று கோதாபய கட்டிவிடுகிற கதையை பெரும்பாலான சிங்களவர்கள் நம்பத்தயாராயில்லை. விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டதையடுத்து பிரிவினைவாதப் பீதியில்லாமல் போய் விட்டது என்ற விளக்கப்பாட்டைக் கொண்டவர்களாக அவர்கள் காணப்படுகிறார்கள். பேரினவாதிகளைப்பொய்யர்கள் என்று பெரும்பாலான சிங்களவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

4. வடமாகாணத்தில் தமிழர்கள் தங்களது சொந்தத்தில் தெரிவு செய்



**மகிந்த ராஜபக்ஷவுடன் கடுமையாக பேச வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூனுக்கு பெரும் நெருக்குதல்கள் கொடுக்கப்படுகின்றன. துரதிர்ஷ்டம் என்னவென்றால் இலங்கை அரசாங்கம் எவரினதும் கடும் சொற்களினால் குழப்பமடையப் போவதில்லை. நிறைவேற்ற நினைக்காத உறுதி மொழிகளை வழங்குவதிலும் அது பின் நிற்கப்போவதில்லை**

யப்பட்ட மாகாண சபையைக் கொண்டிருக்க வேண்டும் என்று பெரும்பாலான சிங்களவர்கள் நினைக்கிறார்கள்.

5. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகவும் விவேகத்துடனும் சமயோசிதமாகவும் நடந்துகொண்டுள்ளது. தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்பதே தங்கள் விருப்பமேயன்றி, எந்தவிதமான வஞ்சகத் திட்டமும் தங்களிடம் இல்லை என்று சிங்கள மக்களுக்கு உணர்த்தக் கூடியதாக கூட்டமைப்பினர் செயற்பட்டிருக்கிறார்கள்.

## எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்

தற்போதைய சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி ஓரளவுக்கு நல்லிணக்கத்தையும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியையும் காண்பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வடக்கில் மக்கள் செல்வாக்கைக் கொண்ட உறுதியான ஒரு மாகாண நிருவாகம் இருக்கிறது. உச்சி மகாநாட்டின் வெற்றிக்குப் பிறகு ஜனாதிபதி ராஜபக்ஷ கூடுதலான அளவுக்கு மகிழ்ச்சி வாய்ந்தவராகவும் தன்னம்பிக்கை மிக்கவராகவும் காணப்படுவார். எனவே, இருதரப்பினரும் தீவிரவாதிகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் வருமென்று நெடுகிலும் பயந்து கொண்டிராமல், பரஸ்பரம் விட்டுக் கொடுப்புகளைச் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும். சிங்களப் பேரினவாதம் ஒருவகையில் பின்னடைவைக்கண்டு அனுகூலமற்ற நிலையில் இருக்கும் சந்தர்ப்பத்தை பற்றிப் பிடித்து ராஜபக்ஷ வடமாகாண சபைக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கான துணிச்சலான தீர்மானத்தை மேற்கொள்வாரா? அரசாங்கத்தை மகிழ்விப்பதற்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மிகவும் கடுமையாகப் பாடுபடுகிறார் என்பது தெரிகிறது. நல்லிணக்கத்தையும் பொருளாதார நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளுக்கு தமிழ்த்தரப்பிலிருந்து இடையூறுகள் வரப்போவதில்லை என்பதற்கான சகல அறிகுறிகளும் தெரிகின்றன. உண்மையிலேயே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடமிருந்து எந்தவொரு இடையூறும் ஒருபோதும் வந்ததில்லை. ஏனென்றால், நெருக்கடிக்குள் இருப்பது தமிழர்தரப்பேயாகும். பேரினவாதிகளும் அவர்களை எதிர்ப்பதற்குப் பயப்படுகிற அரசாங்கமுமே பிரச்சினைகளை உருவாக்குபவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இப்போது ஒரு புதிய ஜன்னல் திறக்கப்பட்டிருக்கிறது. புதிய வாய்ப்பு வந்திருக்கிறது. ஆனால், நாம் எச்சரிக்கையுணர்வுடனேயே நம்பிக்கை கொண்டவர்களாக நடந்துகொள்ளவேண்டும்.

தேசிய பொருளாதாரம் பாரதூரமான நெருக்கடிக்குள் மாட்டுப்படுமானால், எல்லாமே முற்றுமுழுதாகக் குழம்பிப் போய்விடக்கூடும். நாட்டின் கடன் மற்றும் பட்ஜெட் பற்றாக்குறைப் பிரச்சினைகள் படுமோசமடையப் போவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. சமுதாயத்தை மாத்திரமல்ல, நாட்டின் பொருளாதாரக் கட்டுமானத்தையும் அரித்தெடுத்துக் கொண்டிருக்கும் ஊழல் மோசடிகள் குறைந்தபாடாக இல்லை. இந்த நிலைவரங்களில் எந்தவொன்றையும் மாற்றியமைக்க எதையுமே ராஜபக்ஷ செய்யக்கூடிய சாத்தியமில்லை என்றே தெரிகிறது. அதனால், புதிய வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்றால் கடுமையான பல மாற்றங்கள் தேவை. ■

---

(45ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சண்டை போட்டுக் கொண்டிருந்த வேட்பாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது பிரச்சினைக்கான முடிவை தாங்களே கண்டறிய வேண்டும் என்று சூழ்நிலை உருவானது.

## தலைக்கு மேல் கத்தி

இப்போதைய நிலைமைக்கு தற்போதைய ஜனாதிபதி வாஹீத் கூட ஒரு காரணம். உச்ச நீதிமன்றத்தால் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட தேர்தலில் அவரும் ஒரு வேட்பாளர் ஆவார். அந்தத் தேர்தலில் 5.5 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்று, அவர் கடைசியாக வந்தார். அதேசமயம், மறு தேர்தல் அறிவிப்பு வந்ததும், அதில் தான் போட்டியிடுவதில்லை என்று அவர் அறிவித்தார். அதன் மூலம், நாட்டின் பிரச்சினைக்குரிய காலத்தில் தான் நடுநிலைமையாக செயற்பட முடியும் என்றும் அவர் கருதுவதாக செய்திகள் தெரிவித்தன.

பின்னர், தேர்தல் மறுபடியும் குறிப்பிட்ட திகதியில் நடைபெறாத போது, அரசியல் சாசனம் குறிப்பிட்டுள்ள ஐந்து வருட பதவிக் காலத்திற்குப் பின்னர் தான் பதவி வகிக்கப்போவதில்லை என்ற விதத்தில் அவர் வெளிப்படையாகவே பேசலானார். இதன் அடிப்படையில், தனது பதவிக் காலத்திற்குள் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், நாடு என்ன செய்யவேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் பாராளுமன்றமும் ஆராய வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்த கருத்துப்பட ஜனாதிபதி வாஹீத் பாராளுமன்ற சபாநாயகர் அப்துல்லா ஷாஹீத்திற்கும் கடிதம் எழுதினார். பாராளுமன்றத்தில், செல்லாததான தேர்தலில் முதலில் வந்த முன்னாள் ஜனாதிபதி நஷீதின் மாலைதீவு ஜனநாயக கட்சித் தலைமையிலான கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. எனவே, இது தொடர்பாக பாராளுமன்றம் எடுக்கும் நிலைப்பாட்டிற்கு நாடு தலை வணங்க வேண்டும் என்றல்ல பொருள். அவர்கள் நினைத்தால், தற்போது குழம்பிப் போய் இருக்கும் அரசியல் நிலைமையை மேலும் குழப்ப முடியும். கடந்த காலங்களில் அந்தக் கட்சி இது போல் நடந்து கொண்டுள்ளது என்பதும் உண்மை. ■



இஸெத் ஹுசெய்ன்

# பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்குப்பிறகு இலங்கை முஸ்லிம்கள்

பொதுநலவரசு உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதற்காக சிறந்த ஜனநாயக நடத்தையை வெளிக்காட்டுவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறையே இன்று காணப்படக்கூடியதாக இருக்கும் இனம் புரியாத அமைதிக்குக் காரணம்



பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த முஸ்லிம் விரோத பிரசாரங்களின் அமளியும் ஆர்ப்பரிப்பும் திடீரென்று அடங்கி இனம் புரியாத அமைதியொன்று நிலவுகிறது. முஸ்லிம்கள் பலரைப் பொறுத்தவரை, இந்த அமைதி அச்சம் விளைவிக்கின்ற ஒன்றாகவும் கூட இருக்கிறது. ஏனென்றால் ஹஜ் பெருநாள் கொண்டாட்டங்களின் போது பெரியளவில் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். குறிப்பிட்ட ஒரு திகதியில் மிருகங்களை அறுத்துப் பலியிடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருந்ததெனினும் அவ்வாறு செய்யத் தவறிவிட்டது. மிருகங்களைப் பலியிடுவதென்பது (குர்பான்) ஹஜ் பெருநாளின் ஒரு முக்கிய அம்சமென்பதால், அச்சந்தர்ப்பத்தில் பெருமளவில் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் இடம்பெறக்கூடுமென்று அஞ்சப்பட்டது. ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

நவம்பர் நடுப்பகுதியில் கொழும்பில் பொதுநலவரசின் உச்சிமகாநாட்டை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்பதற்காக சிறந்த ஜனநாயக நடத்தையை வெளிக்காட்டுவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறையே இந்த இனம்புரியாத அமைதிக்கு காரணமாக இருக்கிறது போலும். பொதுநலவரசுக்காக ஜனநாயகம் இப்போது முக்கியமானதாகத் தெரிகிறது. முஸ்லிம் விரோத இனவெறிக் கும்பல்களை ஆதரிப்பதாகத் தெரிந்தால் அல்லது உடந்தையாக இருப்பதாகத் தெரிந்தால், அரசாங்கத்தின் ஜனநாயக நம்பகத்தன்மையும் பொறுப்பேற்கப்போகும் பொதுநலவரசுத் தலைமைத்துவ பாத்திரமும் கேள்விக்குள்ளாக்கப்படும். ஜனநாயக ரீதியானதாகத் தென்படவேண்டுமென்ற தேவையின் காரணமாகவே அரசாங்கம் வடமாகாண

சபைத் தேர்தலையும் நடத்தியது என்பதிற் சந்தேகமில்லை.

ஆனால், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற அமைதி தடுமாற்றமான ஒரு கேள்வியைக் கிளப்புகிறது. பரவலாகக் கூறப்படுவதைப் போன்று, பொதுபல சேனாவும் முஸ்லிம் விரோத தீவிரவாதக் குழுக்களும் அரசாங்கத்தின் உருவாக்கங்கள் என்பதை இந்த அமைதி வெளிக்காட்டவில்லையா? இந்த முஸ்லிம் விரோதக் குழுக்கள் கடைபிடிக்கின்ற வினோதமான அமைதி அரசாங்கத்துக்கு வாய்ப்பானதாக இருக்கிறதல்லவா? அரசாங்கத்துக்கு வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத் தானே இக்குழுக்கள் இப்போது அமைதியாக இருக்கின்றன என்று அர்த்தப்படுத்த வேண்டியிருக்கிறது. அதேவேளை, மேலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு பொதுபல சேனா திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. தான் அரசாங்கத்தின் உருவாக்கம் என்ற எண்ணத்தை மறுதலிக்கும் நோக்குடன் பொதுபல சேனா இவ்வாறு செய்வதாக இருக்கலாம். அத்துடன் இந்த ஆர்ப்பாட்டங்கள் அமைதியானவையாக அமைந்து விட்டால், தாங்கள் தீவிரவாதிகளோ அல்லது முஸ்லிம் விரோதிகளோ இல்லை என்று உரிமை கோர முடியுமல்லவா? வேறு தீவிரவாதக் குழுக்களின் வன்முறை நடவடிக்கைகளுக்காக தங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது என்றும் கூறிக் கொள்ளலாமல்லவா? ஒட்டுமொத்தத்தில், முஸ்லிம்கள் தொடர்பில் அரசாங்கம் இப்போது ஜனநாயகமிதவாதப் பாதையைப் பின்பற்றுகிறது என்ற ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், நிலைவரங்கள் எளிதாக கட்டுப்பாட்டை மீறிச் செல்ல முடியும் என்பதை நாம் மனதிற் கொள்ளத் தவறக்கூடாது.

வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டமை, வடக்கில் தமிழ் எதிர்க்கட்சியொன்று பதவிக்கு வந்ததை ஏற்றுக்கொண்டமை, வடமாகாண முதலமைச்சரின் பதவிப் பிரமாணம் தொடர்பில் விட்டுக்கொடுப்பு உணர்வுடன் செயற்பட்டமை, முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற அமைதி இவை எல்லாமே பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்கு முன்னதாக ஜனநாயகத் தோற்றப்பாட்டைக் காண்பிக்க வேண்டியிருக்கும் அரசாங்கத்தின் தேவையின் வெளிப்பாடுகளேயாகும். அதனால், உச்சிமகாநாட்டுக்குப் பிறகு ஜனநாயக விரோதப்பாதைகளில் பின்னோக்கி சறுக்கல் இடம்பெறும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இது சிலவேளை, எமது எதிர்கால அரசியல் வாய்ப்புகள் குறி த்த மிகவும் மேலெழுந்தவாரியான அனுமானமாகவும் இருக்கலாம். அதற்குக் காரணம், அரசாங்கம் அரைவாசி நவபாசிசத் தன்மையானதாக இருக்கக் கூடும். ஆனால் மெய்யாகவே அது அரைவாசி ஜனநாயக ரீதியானதாகவும் இருக்கிறது. பொதுநலவரசு உச்சி மகாநாட்டின் ஒரு மைத்துவப்பாத்திரம் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அதற்கு ஏற்படுத்தக்கூடும். அதன் விளைவாக (அண்மைய வருடங்களில் எம்மால் காணக்கூடியதாக இருந்த) கடுமையான நவபாசிசப் போக்கில் ஒரு தணிவு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதனுடன் சேர்த்து முஸ்லிம் விரோதப் பிரசாரங்களின் உக்கிரத்திலும் ஒரு குறைவு ஏற்படலாம். எனவே, முஸ்லிம் பிரச்சினையை அக்கறையுடன் கையாளுவதற்கான நல்லிணக்கமான ஒரு தருணம் உருவாக்கக்கூடும். என்னைப் பொறுத்தவரை, முஸ்லிம் பிரச்சினை ஒரு போதுமே அக்கறையுடன் இதுவரை கையாளப்பட்டதில்லை என்றே கூறுவேன். சுதந்திரத்துக்குப் பிறகு முஸ்லிம் பிரச்சினையைப் பொறுத்தவரை, அது வெறுமனே மேலோட்டமான அக்கறையுடனும் தொடர்ச்சியற்ற முறையிலும் தற்காலிக அடிப்படையிலேயே கையாளப்பட்டு வந்தி

முஸ்லிம் பிரச்சினையை கையாள்வதில் தவறான தந்திரோபாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பதை சிங்களவரும் முஸ்லிம்களும் மனந்திறந்து வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். முஸ்லிம் பிரச்சினையை அலட்சியம் செய்வதே அரசாங்கங்களின் தந்திரோபாயமாக இருந்து வந்திருக்கின்ற அதேவேளை, முஸ்லிம்களின் தந்திரோபாயம் வாயை மூடிக்கொண்டிருப்பதாகவே இருந்திருக்கிறது

ருக்கிறது. உருப்படியான வழியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வகுப்பதற்கான தருணம் இதுவாகும்.

விளைவாக இலங்கையின் ஜனநாயகம் பலப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகளையும் நிராகரித்துவிடமுடியாது.

முஸ்லிம் பிரச்சினை தொடருமென்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்க முடியும். ஆனால், மிகவும் குறிப்பிடத்தக்க பண்புவேறுபாட்டுடன் அது தொடரக்கூடியது சாத்தியம். உச்சி மகாநாட்டைத் தொடர்ந்து இருவருடங்களுக்கு இலங்கை ஏற்கப்போகும் பொதுநலவரசு அமைப்பின் தலை

எல்லாவற்றுக்கும் மேலாக, முஸ்லிம் பிரச்சினையைக் கையாளுவதில் தவறான தந்திரோபாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதை இருதரப்பினரும்- அதாவது சிங்களவரும் முஸ்லிம்களும் மனந்திறந்து வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியமா

**தேசத்தைக் கட்டியெழுப்புவது குறித்து எமது அரசாங்கங்கள் ஒருபோதுமே அக்கறையுடன் சிந்தித்ததில்லை. இதுவே மூலாதாரமான பிரச்சினை. தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கு இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது அவசியம். இவ்விவகாரம் தொடர்பில் இருக்கக்கூடிய எதிர்மறையான மனோபாவத்தை மாற்றியமைக்க சிவில் சமூகத்தின் அவசர நடவடிக்கைகள் அவசியம்**

கும். முஸ்லிம் பிரச்சினையை அலட்சியம் செய்வதே எமது அரசாங்கங்களின் தந்திரோபாயமாக இருந்துவந்திருக்கின்ற அதேவேளை, எமது முஸ்லிம்களின் தந்திரோபாயம் வாயை மூடிக்கொண்டிருப்பதாகவே இருந்திருக்கிறது. இதுதொடர்பில் சில உதாரணங்களைக் கூறவிரும்புகின்றேன். 1975ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை அனேகமாக ஒவ்வொருவருடமும் (சிலவேளைகளில் பாரதூரமானவையாகவும் சிலவேளைகளில் அற்பமானவையாகவும்) முஸ்லிம் விரோத குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. ஊடகங்கள் அவற்றை எந்தவிதமான அரசியல் பரிமாணமும் அற்ற குண்டர் குழுக்களுக்கிடையிலான சண்டைகளாகவே கருதின. இக்குழப்பங்கள் குறித்து எந்த அறிக்கையையும் அரசாங்கம் வெளியிடவில்லை. தண்டனைவகையில் கடுமையில்லாத நடவடிக்கைகளே எடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அத்தகைய குழப்பங்கள் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யக்கூடியவையாக இருக்கவில்லை. முஸ்லிம்களும் அறிக்கை எதையும் விடுத்ததில்லை. குழப்பங்கள் இடம்பெற்ற பகுதிகளுக்குச் சென்று சமாதானம் செய்து சமாளித்து விடுவதுடன், முஸ்லிம்களின் நடவடிக்கைகளும் முடிந்துவிடும். எதிர்காலத்தில் குழப்பங்கள் மூளாதிருப்பதை உறுதி செய்யக்கூடிய உருப்படியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்ததில்லை. குழப்பங்கள் வருடத்துக்கு வருடம் தொடரவே செய்தன.

எனது கட்டுரையொன்றில் 1993 ஆம் ஆண்டு கொழும்பு புதுக்கடைப் பகுதியில் இடம்பெற்ற மிகவும் மோசமான முஸ்லிம் விரோத கலவரம் தொடர்பாக எழுதியிருந்தேன். அத்தகையதொரு கலவரம் சிங்கப்பூரில் இடம்பெற்றிருந்தால் லீகுவான் யூ என்ன செய்திருப்பார் என்ற கேள்வியை நான் அதில் கிளப்பியிருந்தேன். அது மிகவும் பொருத்தமான ஒரு கேள்வி. ஏனென்றால் அவர் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முன்மாதிரியாகச் செயற்பட்டவர் என்ற மதிப்பைக் கொண்டவர். வன்முறைக்குப் பொறுப்பான குண்டர்கள் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் எளிதாக அடையாளம் காணப்படக்கூடியவர்கள் என்று நான் சுட்டிக் காட்டியிருந்தேன். லீ குவான் யூ சட்டத்தின் நுட்ப நுணுக்கங்களைப் பற்றி பெரிதும் கவலைப்படாமல், முன்னுதாரணமான தண்டனை நடவடிக்கையை எடுத்து சிங்கப்பூரில் மேலும் அத்தகைய இனக்கலவரங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்திருப்பார் என்பது நிச்சயம். எனது அந்தக் கட்டுரை அன்றைய அரசாங்கத்தின் மீது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. குழப்பங்கள் தொடரவே செய்தன. பிறகு முஸ்லிம் விரோத இனவெறி வேறுபட்ட வடிவங்களை எடுத்தது. அண்மைய இரு வருடங்களாக, பொதுபலசேனாவும் அதைவிட வெறித்தனம் கொண்ட குழுக்களும் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றன. முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறிப்பிரச்சினை முடிவுக்கு வருவதாக இல்லை. ஏனென்றால், அதை அரசாங்கம் அலட்சியம் செய்கிறது. முஸ்லிம்களும் அது தொடர்பில் மௌனமாக இருக்கிறார்கள். தங்களுடைய தந்திரோபாயங்கள் மிகவும் அவமானமுறையில் தவறானவையாக அமைந்து விட்டன என்பதை சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்டு, இருதரப்பினரும் திருத்தமான நடவடிக்கைகளை கட்டாயமாக எடுக்க வேண்டும்.

முஸ்லிம்கள் எந்தவிதமான மனச்சாட்சி உறுத்தலும் இல்லாமல் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களுடன் அணிசேர்ந்திருந்தார்கள். அவர்கள் மட்டுமீறிய கோரிக்கைகளை முன்வைக்காமல் சிங்கள அரச அதிகாரத்துக்கு மிகவும் மோசமான முறையில் அடிபணிந்தார்கள். மிருகபலி, பள்ளிவாசல்கள் பல்கிப் பெருகுதல் போன்ற பல சினமூட்டும் விடயங்கள் சிங்கள - முஸ்லிம் உறவுகளை சீர்குலைத்து வந்திருக்கின்றன என்பது நிச்சயம். ஆனால், அண்மைக்காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குறிப்பாக பொதுபலசேனாவினாலும் அதையும் விட கூடுதலானளவுக்கு தீவிரவாதத்தன்மைகொண்ட குழுக்களினாலும் நடத்தப்பட்டு வந்திருக்கின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த சினமூட்டல்கள் எந்தவிதத்திலும் நியாயப்பாட்டைக் கொடுத்துவிடவில்லை என்பதும் நிச்சயமானதாகும். இந்த ஆர்ப்பாட்டங்களை இனவெறியின் பாணியில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் அடிப்படையிலேயே விளங்கிக் கொள்ள முடியும் என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

இலங்கையின் இன வெறிப்பிரச்சினையை ஆழமாக ஆராய வேண்டும். அதை இக்கட்டுரையில் செய்ய இயலாது. பிரச்சினையின் வெளிப்படையான அடிப்படைக்கூறுகளை மாத்திரம் இங்கு கூறவிரும்புகிறேன். மற்றவர்களைத் தாழ்வானவர்களாக நினைக்கும் போக்கு (சகலருக்கும்




பொருந்துவதாக இல்லாவிட்டாலும் கூட) மனிதர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது. அத்தகைய போக்கின் காரணமாக மற்றவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளும் பாரபட்சத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் இனப்படுகொலைகளும் இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இன்றைய உலகில் குறிப்பிட்ட சில சமூக-பொருளாதார சூழ்நிலைகளின் கீழ் இந்த மனப்போக்கு தழைத்தோங்க முடியும். அரிதாக இருக்கின்ற வளங்களை அடைவதற்கான போராட்டமே இலங்கையில் இனவெறியைத் தூண்டிவிடுகின்ற பிரதான காரணியாக இருந்து வந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

முஸ்லிம் பிரச்சினையைக் கையாளுவதற்கு எடுக்கப்படக்கூடிய நடைமுறைச்சாத்தியமான சில நடவடிக்கைகள் குறித்து எனது அவதானிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே தப்பபிப்பிராயங்கள் ஏற்படுவதற்கு காரணமான சர்ச்சைக்குரிய சகல விவகாரங்கள் தொடர்பிலும் அரசாங்கம் முன்னைய தவறான அணுகுமுறைகளைக் கைவிட்டு திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்தகைய சில விவகாரங்கள் (மிருகபலியை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்) பல தசாப்தங்களாக நீடித்துவருகின்றன. இவற்றின் விளைவாக சிங்கள-முஸ்லிம் உறவுகள் மோசமடைவதைத் தடுக்க உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை. புதிய பிரச்சினையாக ஹலால் சான்றுப் பத்திரப் பிரச்சினை வந்திருக்கிறது. இதைப்பற்றி முன்னர் எவரும் கவலைப்பட்டதில்லை. திடீரென்று ஹலால் பிரச்சினை மேலெழுந்து பொதுபலசேனாவின் முஸ்லிம் விரோத பிரசாரத்தின் மையப்புள்ளியாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தேசத்தைக் கட்டியெழுப்புவது பற்றி எமது அரசாங்கங்கள் ஒரு போதுமே அக்கறையுடன் சிந்தித்ததில்லை என்பதே மூலாதாரமான பிரச்சினையாகும். தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கு இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டியது அவசியமானதாகும். தேசத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் இருக்கக்கூடிய எதிர்மறையான மனோபாவத்தை மாற்றியமைப்பதற்கு சிவில் சமூகத்தின் அவசர நடவடிக்கைகள் அவசியமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸார் வகிக்கின்ற பாத்திரம் குறித்து கவனம் செலுத்தவிரும்புகிறேன். அவர்கள் ஆர்ப்பாட்டங்களை கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொலிஸாரின் அந்த தவறு குறித்து நான் பெரிதாகக் குறைகூறக்கூடாது என்று சிலர் என்னிடம் சொன்னார்கள். சிங்களவர்களைப் பொறுத்தவரையிலும் கூட, சட்டத்தின் ஆட்சி இல்லை. வெலிவேரியா சம்பவம் இதற்கு ஒரு உதாரணம் என்று அவர்கள் காரணம் கூறுகிறார்கள். ஆனால், முஸ்லிம் மதத்தலைவர்கள் தலைமையில் முஸ்லிம் கும்பல்கள் பௌத்த விகாரைகளைத் தாக்கினால் பொலிஸார் அப்போதும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸார் பார்வையாளர்களாக இருப்பதில் உள்ள இனவெறிப்பரிமாணத்தை புறக்கணித்துவிடமுடியாது.

பார்வையாளர்கள் போன்று நடந்துகொள்ளும் இந்தப் பொலிஸாரின் போக்கு தொடர்பில் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு வேறு பல காரணங்களும் இருக்கின்றன. சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் முஸ்லிம்களுக்கு எதிராக எதையும் செய்ய முடியும் என்பது இனவெறிக் கும்பல்களுக்கு தெரிந்திருக்குமென்றால், பிறகு விரைவில் வன்முறைக்கு பதில் வன்முறை இடம் பெறும் என்பதையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அந்த வன்முறைப் பித்தலாட்டம் தான் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்களைப் பலியெடுத்த முழு அளவிலான உள்நாட்டுப் போரை மூளவைத்தது. வன்முறைகளின் போது, ஆர்ப்பாட்டங்களின் போது பார்வையாளர்களாக இருக்கும் பொலிஸாரின் போக்கிற்கு முடிவைக் கட்டுவதென்பது ஜனாதிபதியைப் பொறுத்தவரை சிக்கலானதாக இருக்கக்கூடாது. ஏனென்றால் அத்தகைய போக்கு அரசாங்கத்தினாலோ அல்லது சிங்கள மக்களினாலோ வழிநடத்தப்படவில்லை. அது மிகப்பெரிய எதிரியான சிங்கள அரச இனவெறியினால் வழிநடத்தப்படுகிறது. ▪

CHOGM 2013
Sri Lanka



# ஜெயலலிதாவின் தந்திரோபாயத்தால் கருணாநிதியும் காங்கிரஸும் பரிதாப நிலையில்...



குசல் பெரேரா

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங் நிச்சயமாக கொழும்பு பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிப்பார். இந்திய அரசியல் பற்றிய எனது செ ாந்த மதிப்பீட்டின் அடிப்படையிலான எனது பணிவான அனு மானம் இது. மகாநாட்டில் தான் பங்குபற்றப்போவதாக இந் திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் முன்கூட்டியே விடுத்த அறிவிப்பு மங்கலாகிப் போய்க்கொண்டிருந்த தமிழ் நாட்டுத் தீவிரவாதத்தை உசுப்பேற்றிவிட்டது. உடனடியாக சென்னையில் உள்ள இரு தபாலகங்களுக்குள் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன.

அரசாங்க வரித்துறை அலுவலகம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. கொழும்பு மகாநாட்டில் பங்கேற்கப்போவ தாக அறிவித்தமைக்காக குர்ஷித்தை அமைச்சர் பதவியில் இரு ந்து அகற்றுமாறு தமிழ்நாட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்கள். ஆனால், காங்கி ரஸ் கட்சியின் முக்கியமான தலைமைத்துவக் குழுவோ கொழும்பு மகாநாட்டில் எவ்வாறு பங்குபற்ற முடியும் என்பது குறித்தே ஆராய்ந்து கொண்டிருந்தது.

போர்க்குற்றங்களுக்காக ஜனாதிபதி ராஜபக்ஷவையும் அவ ரது அரசாங்கத்தையும் விசாரிக்க வேண்டுமென்றும் தமிழீழம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் சர்வஜன

வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமென்றும் கோரிக்கை முன்வைத்து மார்ச் மாதம் முதல் தமிழ்நாட்டில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களுக்குப் பிறகு கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டுமென்ற கோரிக்கையை முதலமைச்சர் ஜெயலலிதா முன்வைத்து தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினார். இதனால் அந்த மாணவர்களின் தீவிரவாதம் சற்று அமிழ்ந்துபோனது. ஜெயலலிதாவின் கோரிக்கை இலங்கையில் தமிழர்களுக்கென தனிநாடொன்று வேண்டுமென்று கோரும் தீவிரவாதக் குழுக்களின் நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப்போகவில்லை. அதனால், அக் குழுக்கள் அசௌகரிய மடைந்தன. ஆனால், நீண்டகாலமாகத் தொடரும் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமலேயே இருக்கிறது. தற்போது அந்தப் பிரச்சினை கூடுதல் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ்நாடு மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிர யோகம் செய்வதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. மீனவர்கள் பிடித்த மீன்கள் பறிக்கப்படுவதாகவும் தமிழ்நாட்டில் இருந்துவரும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இது இலங்கை கடல் எல்லைக்குள் தான் இடம்பெறுகின்றது. இரண்டு அல்லது மூன்று மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் பிரச்சினையை தமிழ்நாட்டில் உள்ள 'ஈழக்கோரிக்கையாளர்கள்' அலட்சியம் செய்ய முடியவில்லை.

தமிழீழ சுலோகத்தை சூடாக வைத்திருப்பதற்கு உதவியான உணர்ச்சி பூர்வமான ஒரு விவகாரமாக கொழும்பு பொதுநலவரசு உச்சி மகாநாட்டை தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசாங்கம் மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. பிரதமர் மன்மோகன்சிங் மகாநாட்டில் பங்குபற்றக்கூடாது என்பதே அடிப்படைக் கோரிக்கை. மீண்டும் ஒருதடவை சட்டசபையில் தீர்மானமொன்றைக் கொண்டுவந்து



முதலமைச்சர் ஜெயலலிதா சகல தீவிரவாதக் குழுக்களையும் தோற்கடித்துவிட்டார். மத்திய அரசாங்கமும் மன்மோகன் சிங்கும் மகாநாட்டைப் பகிஷ்கரிப்பதற்கு தீர்மானமெடுக்க வேண்டும் என்பதே தமிழ்நாடு சட்டசபைத் தீர்மானத்தின் மூலமான கோரிக்கை. ஜெயலலிதாவின் பரமவைரியான கருணாநிதியும் அவரின் திராவிட முன்னேற்றக்கழகமும் அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. புதுடில்லியில் உள்ள தங்களது சொந்த அரசாங்கத்தின் மீது நெருக்குதலைக் கொண்டுவருவதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் ஜெயலலிதாவின் தீர்மானத்தை ஆதரித்தனர். இதன் விளைவாக தீர்மானம் ஏகமனதான ஆதரவைப் பெற்றது. பொதுநலவரசு உச்சிமகாநாட்டுக்கு எதிரான பிரசாரத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டதன் மூலமாக ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்கு ஆதரவானவர்களின் வாக்குவங்கியையும் தனதாக்கிக் கொண்டார். இதற்குப் பிறகு தமிழ் நாட்டுத் தீவிரவாதிகள் கொழும்பு உச்சிமகாநாட்டுக்கு எதிரான பிரசாரத்தில் பரபர ப்பை ஏற்படுத்துவதற்கு எதைச் செய்தாலும் அதனால், ஜெயலலிதாவின் செல்வாக்குத்தான் அதிகரிக்கும் என்றாகிவிட்டது. கருணாநிதிக்கும் தமிழ்நாடு காங்கிரஸுக்கும் ஏற்பட்ட கதியைப் பாருங்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையின் விளைவான வேதனை வாக்குகளைக் கொண்டுவருகிறது. கடந்த தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் தனக்குச் சார்பாக நிலைவரங்களை மாற்றியது அப்பிரச்சினையே என்பதை ஜெயலலிதா நன்கு அறிவார். அண்ணா தி.மு.க.வின் தலைவி என்ற வகையில் தனது அரசியல் வாழ்வு பூராகவும் ஜெயலலிதா பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்திருக்கின்ற போதிலும், போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கைத் தமிழர்களின் நிலைமைகள் அவருக்கு தேர்த



லில் மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தன. புதுடில்லியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தின் ஒரு நேச அணியாக இருந்ததன் மூலம் வன்னியில் இடம்பெற்ற அட்டூழியங்கள் சகலவற்றுக்கும் பொறுப்பாயிருந்ததாக கருணாநிதி மீது சுமத்தப்பட்ட பழி அவரின் வாக்கு வங்கியை அரித்தெடுத்துச் சென்று விட்டது.

புதுடில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை, மோடியையும் பாரதிய ஜனதாவையும் விஞ்சி வாக்குகளைக் கொண்டுவரக்கூடிய ஒருவரல்ல ராகுல் காந்தி. கடுமையான வறுமை,

**கொழும்பு உச்சி மகாநாட்டு எதிரான பிரசாரத்தில் பரபரப்பை ஏற்படுத்துவதற்கு தமிழ் நாட்டு தீவிரவாத கட்சிகள் எதைச்செய்தாலும் அதனால் ஜெயலலிதாவின் செல்வாக்குத்தான் அதிகரிக்கும் என்று ஆகிவிட்டது. ஜெயலலிதா தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான உறுதியான நிலைப்பாட்டைக்கொண்டிருக்கும் பட்சத்தில் நிலைவரங்களில் கருணாநிதியால் பெரிய மாற்றங்களைக் கொண்டுவர முடியாமல் போகும்**

பரந்தளவிலான குற்றச் செயல்கள், இனமத மோதல்கள் காரணமாக காஷ்மீரிலிருந்து மணிப்பூர்வரை, ஆந்திராவிலிருந்து அசாம்வரை வாக்குவங்கி பிளவுபட்டுக் கிடக்கிறது. வட இந்திய இந்துக்களின் வாக்குகளில் ஒரு கணிசமான வாக்குகளைக் கைப்பற்றக்கூடிய அனுகூலத்தை மோடி நிச்சயமாகக் கொண்டிருப்பார். இஸ்லாமியப் பயங்கரவாதத்தின் தாக்குதல் பட்டியலில் முன்னணியில் இருக்கிறார் மோடி என்பதால் அவருக்குக் கிடைக்கும் பிரசித்தமே இந்துத்வா வாக்குகளை கவருவதற்கான பெரிய தகுதியாகிவிட்டது. அத்தகையதொரு துருவமயப்பட்ட சூழ்நிலையில், இந்தியாவுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற பயங்கரவாதத்தாக்குதல்களின் பின்னணியில் பாகிஸ்தானே இருக்கிறது என்று இந்திய ஊடகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. இது இந்துத்துவாக்காரர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரப்படுத்துவதற்கு வசதியாக அமைகிறது. இது இலங்கையில் தமிழ்ப்பிரிவினைவாதத்துக்கு எதிரான போர் என்ற பிரசாரத்தை முன்னெடுத்த சிங்களத் தீவிரவாதிகள் தமிழர்களுக்கு விரோதமான போக்கை வளர்த்ததற்கு ஒப்பானதாகும். இந்திய ஊடகங்களில் செய்யப்படுகின்ற பாகிஸ்தானுக்கு எதிரான பிரசாரங்கள் இந்துத்வா மனப்போக்கை மேலும் பலப்படுத்த உதவி செய்து இந்திய அரசியல் சமுதாயத்தைப் பிளவுபடுத்தும். ஏற்றத்தாழ்வானதாக இருந்தாலும்கூட, குஜராத்தின் அபிவிருத்தியும் மறுசீரமைக்கப்பட்ட மோடியின் பிம்பமும் அதிகரித்து வருகின்ற இந்திய மத்திய தரவர்க்கத்தை புதிதாகக் கவர ஆரம்பித்திருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. நரசிம்மராவ் பிரதமராக இருந்த வேளையில் மன்மோகன்சிங் அறிமுகப்படுத்திய சந்தைப் பொருளாதாரத்திலிருந்து உருவாகிய இந்த மத்தியதரவர்க்கம் இப்போது இருவருட பொருளாதார மந்த நிலையையடுத்தும் படுமோசமான ஊழல் மோசடிகள் அம்பலமாகிக் கொண்டிருப்பதையடுத்தும் மன்மோகன்சிங் மீது அதிருப்தி கொண்டதாகக் காணப்படுகின்றது. புதியதொரு சந்தை அவதாரத்தை எதிர்பார்க்கும் மத்தியதரவர்க்கம் மோடியை நோக்கி அணிதிரளுகிறது போலத் தெரிகிறது. ஆனால் புதிய மத்தியதரவர்க்கத்தின் வாக்குகள் மாத்திரம் (கடுமையாகப் பிளவுபட்டிருக்கும் இந்திய சமுதாயத்தில்) மோடிக்கு ஒரு பெரும்பான்மைப்பலத்துடனான அரசாங்கத்தைக் கொடுத்துவிடாது.

இத்தகைய பின்புலத்திலே, எந்தவொரு பெரிய தேசியக் கட்சியும் தனியாக மத்தியில் அரசாங்கத்தை அமைப்பது சாத்தியமில்லை என்பதால், தென்னிந்தியா அதுவும் குறிப்பாக, தமிழ்நாடு இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெறுகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் பாரதிய ஜனதாவும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி என்ற பெயரில் காங்கிரஸும் பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அரசியலையே செய்து கொண்டிருக்கின்றன. மேற்கு வங்காளத்தின் தான்தோன்றித்தனமான முதலமைச்சர் மமதா பானர்ஜி மோடியுடன் ஒருபோதும் கூட்டணி அமைத்துக் கொள்ள முன்வரமாட்டார். மோடியுடன் சேர்வதன் மூலம் மமதா முஸ்லிம் வாக்குகளை இழக்க விரும்பப்போவதில்லை. மேற்குவங்காளத்தில் 35 சதவீதமான வாக்குகள் முஸ்லிம்களுடையவை. பெரும்பாலான தென்னிந்திய தொகுதிகளில் பாரதீய ஜனதா கணக்கெடுக்கக் கூடிய செல்வாக்கைக் கொண்டிருக்கவில்லை. கேரளாவில் ஆர்.எஸ். எஸ். இயக்கத்துக்கு பெரிய வலையமைப்பு இருக்கிறதென்றாலும் பாரதிய ஜனதா தேர்தலில் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை. தமிழ்நாட்டிலும் பெரிய வித்தியாசம் இல்லை. என்றாலும் மோடிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே நெருக்கமான உறவு இருக்கிறது. வேறு எந்த வட இந்தியத் தலைவருக்குமே இவ்வாறு ஜெயலலிதாவுடன் பெரிய உறவு கிடையாது. பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்பட்ட பிறகு திருச்சியில் செப்டெம்பர் 26 ஆம் திகதி நடைபெற்ற பாரதீய ஜனதாவின் பேரணியில் மோடி உரையாற்றினார். ஜெயலலிதா மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதே மோடியின் நோக்கமாக இருந்திருக்கக் கூடும். ஆனால், 2014 பொதுத் தேர்தலில் அண்ணா தி.மு.க.தனித்தே போட்டியிடும் என்பதற்கான சமிக்ஞைகளையே ஜெயலலிதா காட்டியிருக்கிறார்.

அதேவேளை, ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருக்கக்கூடிய மிகவும் சிரேஷ்ட தென்னிந்தியத் தலைவர் என்று கூறக் கூடிய மத்திய நிதியமைச்சர் பழனியப்பன் சிதம்பரம் கொழும்பு பொதுநலவரசு உச்சிமகாநாடு குறித்து சென்னையில் கருணாநிதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். மகாநாடு குறித்து மத்திய அரசாங்கம் தீர்மானமொன்றை எடுக்கும் போது தமிழ்நாட்டின் உணர்வுகள் கருத்திற்கொள்ளப்

*(28ஆம் பக்கம் பார்க்க)*

உள்நாட்டு அரசியல்



கலாநிதி ஜெஹான் பெரேரா

# தற்போதைய சூழ்நிலையில் தென்னாபிரிக்காவின் ஆதரவே சிறந்தது

இலங்கையில் இடம் பெற்றவை குறித்து முன்வைக்கப்பட்டிருக்கின்ற குற்றச் சாட்டுகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் இடம் பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் நாட்களில் நேரப்போகின்றவற்றுக்கான ஒரு எச்சரிக்கையாகும். நிலைவரங்களை கையாள்வதற்கு சிறந்த வழிமுறைகள் குறித்து புதிதாக சிந்திக்க வேண்டியிருக்கிறது

இலங்கை அரசாங்கம் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மாகாணசபையை நிறுவியதன் மூலமாக நல்லிணக்க செயன்முறைகளை ஊக்கப்படுத்துவதில் தீர்க்கமான ஒரு முன்னோக்கிய அடியை எடுத்து வைத்திருக்கிறது. புதிய மாகாணசபையின் முதல் வாரங்களில் உயர் ந்த மட்டங்களிலேயே குறிப்பாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையில் நல்லெண்ணம் வெளிப்படுத்தப்பட்டது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங்கிற்கு வடமாகாண முதலமைச்சரினால் விடுக்கப்பட்ட அழைப்பை விடவும் நல்லெண்ண உதாரணம் வேறு இருக்க முடியாது. இந்த அழைப்பு பொதுநலவரசு உச்சிமகாநாட்டுக்காக இந்தியப்பிரதமர் இலங்கைக்கு வருவதை எளிதாக்கியிருப்பதுடன், மகாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதையும் உறுதிப்படுத்தக்கூடியதாக அமைகிறது. இது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு பெரும் விருப்பத்துக்குரியதாகஇருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்று விரும்புகின்ற உள்நாட்டுச் சக்திகளும் சர்வதேச சமூகத்தில் இருக்கும் சக்திகளும் இலங்கை அரசாங்கத்தினால் காணப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பொதுவில் திருப்தியடைந்திருக்கின்றன. ஆனால், மனித உரிமைகள் மற்றும் போர்க்காலத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பிலான பொறுப்புடைமை குறித்து கூடுதலான அளவு க்கு கவனம் செலுத்துகின்ற வேறு சக்திகளும் இருக்கின்றன. மனித உரிமைகள் அமைப்புகளும் புலம்பெயர் தமிழ்ச்சமூகமும் இதில் அடங்கும். இலங்கை நிலைவரத்தின் எதிர்மறையான அம்சங்கள் தொடர்பில் சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் இச்சக்திகள் தீவிரமாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. இலங்கையில் பொதுநலவரசு அமைப்பின் உச்சிமகாநாடு நடைபெறுவதைத் தடுப்பதற்கும் அந்த மகாநாட்டுக்குப் பிறகு அந்த அமைப்பின் தலைமைத்துவ த்தை ஜனாதிபதி ராஜபக்ஷ ஏற்பதற்கு எதிராகவும் இச்சக்திகள் பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றன.

பொதுநலவரசு உச்சிமகாநாட்டுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், சில தினங்களு க்கு முன்னர் நல்லிணக்கம் தொடர்பிலான முதலா

வது இலங்கை- தென்னாபிரிக்கா மகாநாடு கொழும்பில் நடைபெற்றிருப்பது ஒரு தற்செயலான பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். மறுபுறத்தில் அது ஒரு தற்செயல் இல்லாமல் இருந்திருக்கவும் கூடும். அரசாங்கம் அதன் சொந்த நிலைப்பாட்டுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை எவ்வாறு வென்றெடுப்பது என்பது குறித்து தந்திரோபாய அடிப்படையில் சிந்தித்துக் கொண்டிருப்பதும் சாத்தியம். இந்த நிகழ்வில் தென்னாபிரிக்காவுடனான இலங்கை அரசாங்கத்தின் பங்காண்மை அதன் நிலைப்பாட்டுக்கு பொதுநலவரசு நாடுகள் பலவற்றின் ஆதரவை வென்றெடுப்பதில் கணிசமான அளவுக்கு உதவுவதாகவும் அமையும்.

மனித உரிமைகள் மற்றும் போர்க்காலச் சம்பவங்களுக்கான பொறுப்புடைமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக்கையாளுவதில் அக்கறையாக இருப்பதாக அரசாங்கம் அதன் மீது பழி கூறுபவர்களுக்கு காட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே இலங்கையில் உள்ள சவாலாகும். தென்னாபிரிக்காவின் நல்லிணக்க உதாரணம் மகத்தான ஒரு வெற்றியாகவும் மோதல்கள் இடம்பெறுகின்ற ஏனைய நாடுகளுக்கான ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவும் சர்வதேச சமூகத்தின் மனதில் இன்று ஆழப்பதிந்துவிட்டது. தென்னாபிரிக்கா அதன் சொந்த நல்லிணக்கப் பாதையில் சுடர்விட்ட மேற்குலகத்தைச் சாராத நாடு என்றவகையில், இலங்கை அரசாங்கத்தினால் மிகவும் விரும்பி ஏற்கப்படக்கூடிய ஒரு பங்காளியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முக்கியமான பல்வேறு விவகாரங்களில் அரசாங்கம் விட்டுக்கொடுப்பைச் செய்யப் போவதில்லை என்பதே தென்னாபிரிக்கா தலைமையிலான நல்லிணக்க மகாநாட்டின் ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளர்களினால் எடுக்கப்பட்ட வெளிப்படையான நிலைப்பாடாக இருந்தது. நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் மற்றும் ஒற்றையாட்சி அந்தஸ்து என்பவை இதில் அடங்கும். இவை ஒரு அரசாங்கம் எடுக்கக்கூடிய நியாயபூர்வமான நிலைப்பாடுகளாகும். தென்னாபிரிக்கா உட்பட உலகின் வேறு பல நாடுகளும் இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதை அரசாங்கம் முன்வைத்த விதத்தில் சில பிரச்சினைக்குரிய அம்சங்கள் இருக்கவே செய்கின்றன. சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்த பாத்திரமும் சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினையொன்று இருக்கின்றது என்பதும் நிராகரிக்கப்படுகிறது. போரின் முடிவுக்குப் பிறகு இலங்கை ஒரே மக்களைக் கொண்ட ஒரு தேசம் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ பிரகடனம் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாநாட்டின் இரண்டாம் நாள் தென்னாபிரிக்க தூதுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மிகவும் உணர்வமைதியும் தன்னடக்கமும் வாய்ந்தவையாக இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எதிர்காலத்துக்கு சுலபமான பாதை எதுவும் கிடையாது என்றும் நல்லிணக்கம் தான் உண்மையான இலக்கு என்றால் உண்மை, பொறுப்புடைமை, இழப்பீடு செய்தல் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் போன்ற விவகாரங்கள் முறையாகக் கையாளப்பட வேண்டியிருக்கும் என்றும் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். தென்னாபிரிக்காவில் நல்லிணக்கத்தின் இந்த நான்கு அம்சங்களும் அவர்களின் பிரபல்யமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (Truth and Reconciliation Commission) வடிவில் பல வருடங்களாக ஒன்றும்விடாமல் யாவுமளாவிய வகையில் கையாளப்பட்டன.

பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மன்னிப்பைப் பெறுவதற்கான சுலபமான வழியாகவும் வன்முறைக் காலத்தின் போது தாங்கள் செய்தவற்றைப் பற்றி மறந்து மன அமைதியைப் பெறுவதற்கான நம்பிக்கையைத் தரக்கூடிய வழியாகவும் தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சில சந்தர்ப்பங்களில் நோக்கப்படுகிறது. ஆனால், தென்னாபிரிக்காவில் மன்னிப்புக்கோரி விண்ணப்பித்த 7000க்கும் அதிகமானவர்களில் ஆயிரத்துக்கும் சற்று அதிகமானவர்களுக்கே மன்னிப்பு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மன்னிப்பைப் பெற்றவர்கள் முழு உண்மையையும் சொல்லத் தயாராக இருக்க வேண்டியிருந்தது. அத்துடன் முழு உண்மையையும் சொல்வதாக நல்லிணக்க ஆணைக்குழுவை நம்பச் செய்யத் தவறியவர்கள் மன்னிப்பைப் பெறத் தவறினார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் தன்னியக்கமாக மன்னிப்புப்பெறக்கூடியதாக பொதுவான மன்னிப்பு ஏற்பாடு எதுவும் தென்னாபிரிக்காவில் இருக்கவில்லை.

தென்னாபிரிக்காவில் அரும்பாடுபட்டு மன்னிப்புகள் வழங்கப்பட்டபோது, இன்றுள்ளதைப் போன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) மற்றும் மனித உரிமைகள் சட்டத்துறைக்

> மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்கால சம்பவங்களுக்கான பொறுப்புடைமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாளுவதில் அக்கறையாக இருப்பதாக அரசாங்கம் அதன் மீது பழிகூறுபவர்களுக்கு காட்ட வேண்டியிருப்பதே இலங்கையில் உள்ள பெரிய சவாலாகும்

கோட்பாடுகள் (Human rights juris prudence) என்று எந்த ஏற்பாடும் இருக்கவில்லை. இன்று சுயாதிபத்தியம்கொண்ட அரசாங்கமொன்றினால் ஆணையிடப்பட்டால் கூட, பொதுவில் சகலருக்கும் மன்னிப்பு வழங்கும் ஏற்பாடொன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அங்கீகரிக்காமல் விடக்கூடும். அத்தகைய மன்னிப்புகள் சர்வதேச தராதரங்களுக்கு இசைவானவையாக இல்லாவிட்டால் ஏனைய நாடுகளின் அரசாங்கங்களும் அவற்றை அங்கீகரிக்காமல் விடக்கூடும். இலங்கையில் இடம்பெற்றவை குறித்து முன்வைக்கப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் இடம்பெறுகின்ற பெரிய ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் நாட்களில் நேரப்போகின்றவைக்கான ஒரு எச்சரிக்கையாகும். இந்தப் பிரச்சினையை அரசாங்கத் தலைவர்கள் தாங்கள் அதிகாரத்தில் இருக்கின்ற தற்போதைய தருணத்தில் அதாவது செயன்முறைகளில் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய தகுதியான நிலையில் இருக்கும் வேளையில் கையாளுவதே சிறந்தது. காலங் கடக்கவிடுவது உகந்ததல்ல.

மறுபுறத்தில் இலங்கையில், கடந்த காலநடைமுறை வித்தியாசமானதாக இருந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும். ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யின் இரு கிளர்ச்சியின் (1971 ஆம் ஆண்டிலும் 1980 களின் பிற்பகுதியிலும்) இடம்பெற்றன. அக்கிளர்ச்சிகளின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பதிலாக சகலதுமே மறக்கப்பட்டன. கடந்த காலத்துடன் சேர்த்து அவையெல்லாம் புதைக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் முடிவுக்குப் பிறகும் அதே நடைமுறையே விரும்பப்படத்தக்கதாக இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால், இலங்கையின் போர்க்குற்ற பிரச்சினை தொடர்பில் சர்வதேச ரீதியான ஆர்ப்பாட்டங்கள் தணிவதற்கான அறிகுறியைக் காணமுடியாதிருக்கும் நிலையில், நிலைவரத்தைக் கையாளுவதற்கான சிறந்த வழிமுறை குறித்து புதிதாகச் சிந்திக்க வேண்டிய தேவையிருக்கிறது. தென்னாபிரிக்காவின் வழிகாட்டல்களைப் பெறுவதே தற்போதைய சூழ்நிலையில் செய்யக் கூடிய மிகவும் சாத்தியமான காரியமாகும். அதை அரசாங்கம் செய்கிறது போலத் தெரிகிறது. ▪

---

*(25ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

படுமென்றே அவர் அச்சந்திப்புக்குப் பிறகு கருத்துத் தெரிவித்தார். தமிழ் நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஜெயலலிதாவின் தீர்மானத்திற்குள் இப்போது கருணாநிதி அகப்பட்டுப் போயிருக்கிறார். 2014 பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, கருணாநிதி மீண்டும் தனது செல்வாக்கு நிலைக்கு வருவதற்கு இடமளிக்க வேண்டிய தேவையை காந்திகளும் காங்கிரஸ்காரர்களும் உணருகிறார்கள். இதற்காக இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பான நிலைப்பாட்டை அவர் தொடர வேண்டியிருக்கிறது. அல்லது ஜெயலலிதாவுடனும் அவரது அண்ணா தி.மு.க.வுடனுமே காங்கிரஸ் நெருங்கிச் செல்லவேண்டும். இது நினைத்துப் பார்ப்பதற்கே கஷ்டமான காரியம். அதனால் காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரை பாதுகாப்பான நேசஅணி தி.மு.க.வும் கருணாநிதியுமேயாகும். ஆனால், ஜெயலலிதா தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான உறுதியான நிலைப்பாட்டைத் தொடரும் பட்சத்தில் நிலைவரங்களில் பெரிய மாற்றத்தைக் கருணாநிதியால் கொண்டுவர முடியாமற் போகும்.

எனவே, காங்கிரஸ் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை தற்போதைக்குச் செய்யக்கூடிய பொருத்தமான காரியம் எந்தவிதமான பகிஷ்கரிப்பைப் பற்றியும் பேசாமல் கொழும்பு உச்சிமகாநாட்டில் பங்கேற்பதேயாகும். பிரிட்டிஷ்காரர்கள் பங்கேற்கின்ற பொதுநலவரசு அமைப்பின் மகாநாட்டில் பிரசன்னமாகாமல் இருக்க இந்தியாவினால் முடியாது. இது பிரிட்டிஷ் நலன்களைப் பகிஷ்கரிக்கும் ஒரு காந்திய நடவடிக்கை இல்லை. இது இலங்கையுடனும் தமிழர்களின் அபிலாசைகளுடனும் சம்பந்தப்பட்டது. இந்திய மத்திய அரசாங்கம் இந்தத் தமிழர்களின் அபிலாசைகளை ஆதரித்ததை விட அவற்றிற்கு எதிராகச் செயற்பட்டதுதான் இதுவரையான வரலாறு. பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் பற்றி பேசுவாரேயானால், மகாநாட்டுக்குப் புறம்பாக தமிழர் பிரச்சினை குறித்து இலங்கைத் தலைவர்களுடன் பேசுவாராக இருந்தால், மகாநாட்டுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி அதன் இமேஜை சீர்செய்துகொள்வதற்கு சில மாதங்கள் இருக்கின்றன. அதனால் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மன்மோகன்சிங்கிற்கு ஒரு கடிதத்தை எழுதினார். உண்மையில் இந்தியா செய்யாதவற்றுக்காக அந்நாட்டுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதிய விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு மன்மோகன்சிங்கை அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், அந்தக் கடிதத்துக்கும் பொதுநலவரசு மகாநாட்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று முதலமைச்சர் கூறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பொதுநலவரசு மகாநாட்டில் பங்கேற்பது குறித்து காங்கிரஸ் தலைமைத்தும் தீர்மானிப்பதற்கு இன்னும் சொற்பநாட்களே இருக்கின்றன. உச்சி மகாநாட்டுக்குப் பிறகு மோடியோ பாரதிய ஜனதாவோ தமிழ்நாட்டில் எதையும் பெரிதாகச் செய்துவிடப்போவதில்லை. அதுவே காங்கிரஸுக்கு இருக்கும் அனுகூலமாகும். மீண்டும் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் அல்ல, ஜெயலலிதாவே முக்கியத்துவமானவராக இருக்கப் போகிறார். ▪

# தீபாவளித் திருநாள் திடீர்ச்சந்திப்பின் பின்னணி

தீபாவளித் திருநாள்! கடந்த சில மாதங்களாக திரும்பிப் பார்க்காமல் இருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியை திடீரென்று சந்தித்தார் இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம். 'இசைப் பிரியா' படுகொலை செய்யப்பட்டது குறித்து வெளியான 'சனல்-4' காட்சிகள் தமிழகத்தில் அதிர்ச்சியை உருவாக்கியிருக்கின்ற நிலையில், சிதம்பரத்தின் இந்தச் சந்திப்பு மிகவும் முக் கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. 20 நிமிடங்கள் மட்டுமே சந்தி த்து விட்டு வெளியே வந்த சிதம்பரம், தீபாவளி வாழ்த்துச் சொன்னதாக தெரிவித்தார். பொதுநலவரசு மகாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வது குறித்து எங்கள் உணர்வுகளைக் கூறியிருக்கிறோம் என்றார். இசைப் பிரியா கொலை பற்றி கேட்டதற்கு 'மனித உரிமைகள் மீறல் குறித்து இந்தியாவும், உலக நாடுகளும் ஏற்கனவே கண்டனம் தெரிவித்துள்ளன' என்று சுட்டிக்காட்டினார். ஆனாலும் இந்த திடீர் சந்திப்பிற்கு பல்வேறு பின்னணிகள் இருக்கின்றன என்றால் அது மிகையாகாது. அக்டோபர் 31 ஆம் திகதி அன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் கலைஞர் கருணாநிதி. அப்போது-



தி.மு.க. பன்முகக்குழப்பங்களுக்குள்ளாகி இருக்கிறது. காங்கிரஸுடன் கூட்டணி வைக்க மனச்சாட்சி இடம்தரவில்லை என்பதே மூத்த தலைவர்களின் கருத்தாக இருக்கிறது.






முத்தையா காசிநாதன்

- தமிழர்களை வேட்டையாடிய சிங்கள வெறியர்கள் நடத்துகின்ற பொதுநலவரசு மகாநாட்டில் பிரதமர் கலந்து கொண்டால், அதனுடைய விளைவுகளை அவர்கள் சார்ந்துள்ள கட்சி அனுபவிக்க நேரும்.
- இந்தியாவைச் சேர்ந்த துரும்பு கூட இந்த மகாநாட்டிற்குச் செல்லக்கூடாது.
- வினை விதைத்தவர்கள் வினை அறுப்பார்கள். - இந்த கொப்பளிக்கும் கோப வார்த்தைகள் எல்லாம் காங்கிரஸை நோக்கி கருணாநிதி விடுத்த அக்டோபர் அட்டாக்!

பத்திரிகைப் பேட்டியில் இந்த அளவிற்கு கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைச் செய்த கலைஞர் கருணாநிதி, கிட்டத்தட்ட காங்கிரஸ் கட்சிக்கு அன்றைய தினம் சாபம் விட்டார் என்றே சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எடுக்கும் அனைத்து நிலைப்பாடுகளுமே அந்த அளவிற்கு தி.மு.க.விற்கு எரிச்சலூட்டும் வகை

யில் அமைந்திருக்கிறது. பேட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதற்கு முன்பு, தமிழக சட்டமன்றம் கூடியது. அந்தக் கூட்டத்தொடரின் முக்கிய தீர்மானமே இலங்கையில் நடக்கும் பொதுநலவரசு மகாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்ற ஒருமனதான தீர்மானம்தான். பெயரளவுக்குக் கூட இந்தியா அங்கே போகக்கூடாது என்றே தமிழக சட்டமன்றம் ஒரு மனதாகக் கேட்டுக் கொண்டது. தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த தீர்மானத்தை ஆதரித்தார்கள். அக்கட்சியின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் சல்மான் குர்ஷித், 'நான் மகாநாட்டிற்கு போவேன்' என்று கூறினாலும், அவர் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளை பொது நலவரசு மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற சட்டமன்ற தீர்மானத்திற்கு முழுமனதாக ஆதரவு கொடுத்தது. இப்படி தீர்மானத்தையும் ஆதரித்துவிட்டு, பிரதமர் மன்மோகன்சிங்கும் பொதுநலவரசு மகாநாட்டில் பங்கேற்பார் என்று காங்கிரஸ் கட்சி சூசகமாகக் கருத்துகளை 'லீக்' செய்வதைப் பார்த்து விட்டுத்தான், 'வினை விதைத்தவர்கள், வினை அறுப்பார்கள்' என்று சுட்டெரிக்கும் வார்த்தைகளை காங்கிரஸை நோக்கி வீசினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

கடுங்கோபத்திற்கு பல அர்த்தங்கள் கண்டுபிடிக்க முடியும் என்றாலும், பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனிமைப் படுத்தப்படும் என்பதைக் கோடிட்டுக் காட்டும் முக்கிய கருத்து என்றே இதை எடுத்துக்கொள்ள வேண்டும். 'பொதுநலவரசு மகாநாட்டு' புறக்கணிப்பு என்பது மட்டுமன்றி இலங்கைத் தமிழர் பிரச்சினை இனி வருகின்ற பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரை தமிழகத்தில் முன்னிலைப்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் பாராளுமன்றத் தேர்தல்கள் 2014 மே மாதத்தில்தான் நடக்கப் போகிறது. அதற்கு முன்பு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மனித உரிமைகள் பற்றிய இன்னொரு கூட்டம் ஐ.நா. சபையில் வருகின்ற பெப்ரவரி மாதம் வருகிறது. அந்தக் கூட்டத்திற்கு முன்பும் ஐ.நா.வில் இந்தியா எடுக்க வேண்டிய நிலை பற்றி தமிழகக் கட்சிகள் எல்லாம் ஒரு கருத்தைச் சொல்லி அப்போதும் பெரும் போராட்டம் வெடிக்கும். சுருங்கச் சொன்னால், இலங்கைத் தமிழர் கூட்டணி வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் அ.தி.மு.க. இருக்கிறது. அக்கட்சியின் சார்பில் முதல்வர் ஜெயலலிதா செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ள கட்அவுட்களில் கூட, 'காங்கிரஸ் வேண்டாம்' என்று அடங்கியுள்ள வாசகங்களைப் பளிச்சனப்பார்க்க முடிகிறது. ஆனால் காங்கிரஸ் கட்சி தி.மு.க.வுடனும் இருந்து விடக்கூடாது, விஜயகாந்து

**இந்தியாவிலிருந்து ஒரு துரும்புகூட பொதுநலவரசு மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்று கலைஞர் கருணாநிதி கூறியதை வரவேற்று பேட்டியளித்திருந்தார் தமிழக பாரதீய ஜனதா தலைவர் பொன். ராதாகிருஷ்ணன். இந்தப் பேட்டி காங்கிரஸார் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது**

பிரச்சினை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை ஒன்று கூட்டணிப் பிரச்சினையாக இருக்கிறது. இன்னொன்று தேர்தல் பிரச்சினையாக இருக்கிறது. ஆனால் யாருக்கும் இது ஒரு கொள்கைப் பிரச்சினை என்பதை இன்னும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் வைகோ தலைமையிலான ம.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சிகளுமே இந்த விடயத்தில் முதலில் ஒரு நிலைப் பாட்டையும், பிறகு இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்து வந்திருக்கின்றன. அதனால் இந்த பொது நலவரசு மகாநாடு மட்டுமல்ல, அடுத்து வரப்போகின்ற ஐ.நா. சபை கூட்டமும் தமிழகத்தில் 'அரசியல் தட்பவெட்பத்தை' மேலும் உஷ்ணமாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால் அ.தி.மு.க. இன்றைய திகதியில் கம்யூனிஸ்ட் கட்சிகளை மட்டும் தன் அணியில் வைத்துக் கொண்டு போட்டியிடுவது என்ற முடிவை எடுத்து விட்டது. அதனால் 'நாற்பதுக்கு நாற்பது' என்ற கோஷத்தை மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகும் அ.தி.மு.க. கைவிடவில்லை. அதேநேரத்தில் அக்கட்சி காங்கிரஸுடன் நெருங்கிச் செல்வது போன்ற சமிக்ஞைகளைச் செய்தாலும், உள்மனதில் காங்கிரஸுடனும் போய் விடக்கூடாது என்பதில் அ.தி.மு.க. தலைமை ஜரூராக வியூகம் வகுத்துச் செயல்படுகிறது. 'தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எம்.பி. பதவி கிடைக்காமல் பார்த்துக் கொள்கிறேன். இங்கு என் போக்கில் விடுங்கள்' என்று பா.ஜ.க.வின் தலைமைக்குக் கூட மறைமுகமாகக் கோடிட்டுக் காட்டுவது போலவே அ.தி.மு.க. தலைமையின் செயல்பாடுகள் இருக்கின்றன. அதனால்தான் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியைக்கூட வாழ்த்தி அறிக்கை விடாத முதல்வர், பொதுநலவரசு விவகாரத்தில் 'இந்தியா புறக்கணிக்க வேண்டும்' என்று தீர்மானமே சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.க. முற்றிலும் புதிய 'தீவிர' நிலைப்பாட்டை எடுத்து வருகிறது என்றால் அதிலும் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமிருக்க முடியாது.

இந்நிலையில் இடியப்பச் சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பது தி.மு.க.வும், தே.மு.தி.க.வும் தான். காங்கிரஸைக்காட்டித்தான் தி.மு.க.வுக்கு செக் வைத்துக் கொண்டிருக்கிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த். ராஜ்ய சபை தேர்தல் நடைபெற்ற போதும், இப்போது ஏற்காடு இடைத்

தேர்தலுக்கு ஆதரவு கேட்டு கடிதம் எழுதிய பிறகும் கூட தி.மு.க. விட்ட தூது பற்றி கண்டுகொள்ள விஜய காந்த் முன் வரவில்லை. ஏனென்றால் 'தனக்கு காங்கிரஸின் கை இருக்கி றது' என்று விஜயகாந்த்திடமாக நினைப்பதுதான்! அப்படியே தேவைப்பட்டால் காங்கிரஸைக் காட்டி கடைசி நேரத்தில் தி.மு.க. வுடன் தனது தேர்தல் பேரத்தை வைத் துக் கொள்ளலாம் என்பதில் அவர் தெளிவாக இருக்கிறார். ஆனால் அத ற்கு பொதுநலவரசு மகாநாடு பிரச்சி னையாக இருந்தது. அதைக்கூட விஜ யகாந்த் சமாளித்தார். சமீபத்தில் டில் லிக்குச் சென்ற விஜயகாந்த், 'என் தலைவன் பிரபாகரனையே கொன்று விட்டார்கள். இனி பொதுநலவரசு மகாநாட்டில் இந்தியா கலந்து கொண் டால் என்ன? கலந்து கொள்ளாவிட் டால் என்ன?' என்று அடக்கி வாசித் தார். ஆனால் அவரே கூட இப்போது 'இசைப்பிரியா கொல்லப்பட்ட காட் சிகள்' வந்த பிறகு சங்கடத்தில் மாட் டிக் கொண்டிருக்கிறார். இந்தச் சூழ்நி லையில், பிரதமர் மன்மோகன்சிங் மகாநாட்டில் பங்கேற்றால், காங்கிர ஸுடன் கூட்டணி வைப்பதிலும் விஜ யகாந்திற்கு தர்மசங்கடம் ஏற்படும்.

தி.மு.க.விற்கோ பன்முகக் குழப் பங்கள். அக்கட்சிக்கு காங்கிரஸுடன் கூட்டணி வைக்க மனச்சாட்சி இடம் தரவில்லை என்பதே மூத்த தலைவர் களின் கருத்தாக இருக்கிறது. சமீபத் தில் 2-ஜி அலைக்கற்றை ஊழல் பற்றி விசாரித்த பி.சி.சாக்கோ தலைமையி லான பாராளுமன்ற கூட்டுக்குழு தனது அறிக்கையை இந்திய பாராளு மன்ற சபாநாயகர் மீரா குமாரிடம் கொடுத்து விட்டது. அந்த அறிக்கை '1.76 இலட்சம் கோடி ரூபாய் நஷ் டம்' என்ற குற்றச்சாட்டை பிசுபிசுக்க வைத்துவிட்டது. ஆனால், பிரதமரை தவறாக வழிநடத்தினார் தி.மு.க. அமைச்சர் அ.ராஜா என்ற பகிரங்க குற்றச்சாட்டை வலியுறுத்தியுள்ளது. இது தி.மு.க.வின் மீது சுமத்தப்பட்ட களங்கம் என்று அக்கட்சி தலைமை கருதுகிறது. இந்த அறிக்கையிலும் தி.மு.க. படு அப்செட். அத்துடன் கலைஞர் கருணாநிதியின் காரசாரப் பேட்டிக்கு முன்பு தான் 2-ஜி வழக் கில் தயாளு அம்மாள் சாட்சியளித் தார். அதுவும் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் இல்லமான கோபா லபுரம் வீட்டில் உள்ள அறை ஒன்றே நீதிமன்றமாக மாற்றப்பட்டு, அங்கே அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட் டது. சென்ற சட்டமன்றத் தேர்தலின் போது அறிவாலயத்தில் காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணி பேசிக் கொண்டி ருந்த நேரத்தில், அதே கட்டிட மாடி யில் தயாளு அம்மாளிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. தற்போது பாராளுமன்றத் தேர்தல் வருகின்ற நேரத்தில் கோபாலபுரத்திற்கே நீதிபதி வந்து சாட்சியத்தை பதிவு செய்திருக்கிறார். இதையெல்லாம் மறந்து விட்டு காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி வைக்கும் என் பதை இப்போது அறுதியிட்டுச் சொல்ல முடியாது. காங்கிரஸுடன் தி.மு.க. அறவே சேரக்கூடாது என்ற வியூகத்தின் முயற்சிதான் இலங் கைத் தமிழர் பிரச்சினையில் அ.தி. மு.க. வெளியிடும் அதிரடிக் கருத்து கள்.

இப்படியொரு பரபரப்பான சூழ் நிலையில், 'இந்தியாவிலிருந்து துரு ம்பு கூட பொதுநலவரசு மகாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்று கலை ஞர் கூறியிருக்கிறார். அதை வரவேற் கிறேன்' என்று தமிழக பா.ஜ.க. தலை வர் பொன்.ராதாகிருஷ்ணன் பேட்டி யளித்தார். இந்தப் பேட்டி காங்கிர ஸுக்கு 'கிலி'யை ஏற்படுத்தியிருக்கி றது. அதுமட்டுமல்ல, பா.ஜ.க.வின் பாராட்டு வந்த நேரத்தில், இலங்கை யில் நடைபெற்ற இறுதிப் போரின் போது இசைப்பிரியா பிடிபட்டது, கொடூரமாக கொல்லப்பட்டது போன்ற காட்சிகளை 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்டது. இந் தக் காட்சிகள் தமிழகத்தில் முன்பு போரின் போது உருவாகியிருந்தது போன்ற 'சென்டிமென்டை' தமிழக மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கி றது. இந்தப் பின்னணியில்தான் நவம் பர் 2ஆம் திகதி, தீபாவளி தினத்தன்று மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் அவ சரமாக சென்னை வந்து முன்னாள் முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார். 'என் தாயாரின் மறைவுக்கு கூட இரங்கல் தெரிவிக்காத, அந்த மரணத்தை விசா ரிக்காத அவரைச் சந்திக்க மாட்டேன்' என்று சபதம் எடுத்திருந்தார் ப.சிதம் பரம். அந்த விரதத்தை முறித்துக் கொண்டு தி.மு.க. தலைவர் கருணா நிதியை வந்து சந்தித்துள்ளார் என் றால் அந்த அளவிற்கு 'பொதுநல வரசு பிரச்சினை' 'இசைப்பிரியா கொலைக் காட்சிகள்' எல்லாம் காங்கி ரஸின் மீது தமிழகத்தில் கடுங்கோ பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே அரசியல் பார்வையாளர்கள் எண்ணு கிறார்கள்.

இந்தச் சந்திப்பு வெறும் இருபது நிமிடங்களே நடந்தது. அப்போது பிரதமர் மன்மோகன்சிங் தரப்பிலி ருந்து சொல்லி அனுப்பப்பட்ட செய் தியைத்தெரிவித்த சிதம்பரம், தி.மு.க. தலைவர் கருணாநிதியை 'கன் வின்ஸ்' பண்ணும் விதத்திலேயே கருத்துகளை தெரிவித்ததாகத் தெரிகி றது. குறிப்பாக வடமாகாண முதல் வர் விக்னேஸ்வரனே பொதுநலவரசு மகாநாட்டில் கலந்து கொள்வது, அவரே பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருப்பது போன்ற விடயங்க ளின் பின்னணியில் பிரதமர் எடுக்க விருக்கின்ற முடிவுகளை வெளிப்ப டுத்தியதாகவும் தெரிகிறது. ஆனா லும் சிதம்பரத்தின் கருத்திற்கு செவி சாய்த்து தி.மு.க. தலைவர் கருணா நிதி 'கன்வின்ஸ்' ஆகவில்லை என்ப துதான் தற்போது கிடைத்துள்ள செய்தி. 'ப.சிதம்பரம் மிஸன் பெயிலி யர்' என்பதுதான் இப்போது தி.மு.க. வட்டாரத்தில் அடிபடும் செய்தி. இலங்கைத் தமிழர் பிரச்சினை காங்கி ரஸ் கட்சிக்கு சிம்மசொப்பனமாக இருக்கிறது. அதுவே காங்கிரஸுக்கு வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும் ஆபத்தை உருவாக்கப் போகி றது! ▪


இந்திய அரசியல்

# பிரியங்கா மீதான ஆர்வம்

ராகுல் காந்தி எதையாவது செய்வார் என்று காத்திருந்ததில் காங்கிரஸ் காரர்கள் பொறுமை இழந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன



வி.சுதர்சன்



பிரியங்கா வடேரா இப்போது செய்திகளில் பெரிதாக அடிபடு கிறார். ஏன்? காங்கிரஸ் கட்சியின் அலகாபாத் கிளை அவர் பல்பூர் தொகுதியில் இருந்து தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று விரும் புகிறது. அத்தொகுதி பிரியங்காவின் கொள்ளுப்பேரன் பண்டிட் ஜவஹர் லால் நேரு வினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டதாகும். 'தாயாருக்கு அடிக்கடி சுகவீனம் ஏற்படுகிறது. தம்பியார் (ராகுல் காந்தி) கையாளுவ தற்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக் கின்றன. பிரியங்கா பல்பூர் தொகுதி யின் வேட்பாளராக வந்து பிரசாரம் செய்யுங்கள். மூன்றாவது தடவையும் காங்கிரஸ் அரசாங்கம் அமைக்க உத வுங்கள்' என்று சுவரொட்டிகளும் ஒட் டப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸின் அலகாபாத் கிளை அதன் ஆய்வை மிகவும் சரியாகவே செய்திருக்கிறது. ராகுல் காந்தி நீண்ட காலமாக அரசியலில் இருக்கிறார். அமெரிக்கத் தூதரகத்தின் கேபிளில் (கேபிள் 82135; அக்டோபர் 17,

2006) சுருக்கமாகச் சொல்லப்பட்டிருந்ததைப் போன்று காங்கிரஸ் கட்சியின் வாய்ப்புகள் விடுவித்துக் கொள்ள முடியாத அளவுக்கு இந்த இளைஞனிடம் இருப்பதாக ஊகிக்கப்படுகின்ற ஆற்றல்களுடனும் கண்டுபிடிக்கப்படாத பலவீனங்களுடனும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. மக்களைக் கவருகின்ற தன்மையும் அரசியல் ஆற்றல்களும் ராகுல் காந்தியிடம் இல்லாவிட்டாலும், அவரை நாடு மீது திணிப்பதற்கே தாயார் உறுதி பூண்டிருந்தார் என்று சோனியா காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரான ரஷீட் ஆல்வி அமெரிக்க இராஜதந்திரியொருவரிடம் கூறினார். 'ராகுல் காந்தி கடந்த மூன்று வருடங்களாக எதையும் செய்யவில்லை. அவர் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டவராக இல்லை. அவருக்கு எதிர்காலம் இல்லை. அரசியலுக்கான ஆற்றலும் அவரிடம் இல்லை. ஒருபோதும் அவர் பிரதமராக வரமாட்டார்' என்று ஒரு காங்கிரஸ்காரர் அமெரிக்கர்களிடம் கூறினார். இது நடந்தது சரியாக ஏழுவருடங்களுக்கு முன்னர். அதற்குப்பிறகு சோனியா காந்தியின் உடல் நிலை ஆர்வத்துடனான ஊகத்துக்குரிய விடயமாயிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அடுத்து தலைமைத்துவத்துக்குரியவர் யார் என்பது பற்றிய பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டுமென்று சோனியா காந்தி மீது நெருக்குதல்கள் அதிகரித்தன. ஆனால், அந்தப் பணியை அவர் எளிதாகச்செய்து முடிக்கக் கூடியதாக ராகுல்காந்தி நடந்துகொள்ளவில்லை. அதற்குப் பிறகு ராகுல்காந்தி பல தவறான அடிகளை எடுத்துவைத்தார். காங்கிரஸுக்குள்ளிருப்பவர்கள் தாங்கள் பிரியங்காவின் அரசியல் பிரவேசத்துக்காக காத்துக்கொண்டிருப்பதாக அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த பல அதிகாரிகளிடம் கூறினார்கள். (கேபிள் 105346; ஏப்ரில் 23, 2007)

ராகுல் காந்தி எதையாவது செய்வார் என்று காத்திருந்ததில் காங்கிரஸ்காரர்கள் பொறுமையிழந்து நீண்ட நாட்களாகிவிட்டன. அவர் செய்ததெல்லாம் மோட்டார் சைக்கிள்களை ஓட்டியதும் புறநகர்ப்பகுதி ரயில்களில் பயணம் செய்ததும் தான். இப்போது அவர் ரொக்கெட் விஞ்ஞானத்தில் அக்கறை காட்டுவதைக் காண முடிகிறது. அலகாபாத் காங்கிரஸ் கிளையினர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியமைக்காக அவர்களை நிச்சயமாகக் குறைகூற முடியாது. அதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும். சந்தேகத்தின் பயன்களை ராகுலுக்கு கொடுப்பதை விடவும் பிரியங்காவிற்குக் கொடுப்பதற்கே கூடுதல் எண்ணிக்கையானவர்கள் விரும்புவார்கள். தன்னைக் காட்டிலும் தனது சகோதரன் அரசியல் ரீதியில் கூர்மதியுடையவன் என்றும் சமூக, பொருளாதார விவகாரங்களில் தன்னை விடவும் கூடுதல் விளக்கப்பாட்டைக் கொண்டவன் என்றும் பிரகாசமான தந்திரோபாய மூளை கொண்டவன் என்றும் பிரியங்கா அடிக்கடி கூறுவார். அவர் அவ்வாறு கூறுகின்ற தருணங்களைத் தவிர, மற்றும்படி பெருமளவுக்கு நம்பக் கூடியவராக விளங்குகிறார்.

மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ராகுல் காந்தி சில நேரங்களில் வளர்த்திருப்பதைப் போன்றோ அல்லது நரேந்திரமோடியைப் போன்றோ பிரியங்காவிடம் தாடியொன்று இல்லை. பாட்டியார் இந்திரா காந்தியின் சாறிகளை அணிவதன் மூலம் எங்களுக்கு அவரை மிகவும் சாதுரியமான முறையில் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார் பிரியங்கா. அரசியல் காரணங்களுக்காக அவர் அவ்வாறு செய்வதாக இருக்கலாம். அவர் தனது தாயாரைவிடவும் சகோதரனை விடவும் மிகவும் சிறப்பான முறையில் பொது இடங்களில் இந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசக்கூடியவர். ஹரியானா மாநிலத்தில் பெருமளவு நிலங்களை தனதாக்கிக் கொள்வதில் அக்கறைகாட்டுகிற றொபேர்ட் வடேராவை பிரியங்கா திருமணஞ் செய்திருக்கிறார் என்பதைக் கூட கணக்கில் எடுக்காமல் விடுவதற்கு பலர் தயாராயிருக்கிறார்கள். வடேரா ஒரு 'சிறிய விவசாயி' மாத்திரமே என்று ஹரியானா முதலமைச் கூறவில்லையா? ராகுல் காந்தி வாய்ப்பைப் பெற்றுக்கொண்டபிறகு தேர்தல்களில் போட்டியிட விரும்புவதாக றொபேர்ட் வடேரா ஏற்கனவே கூறியிருந்தார். இதுதொடர்பாக சில அரசியல் குழப்பங்கள் வரக்கூடும். எவ்வளவு காலத்துக்கு றொபேர்ட் பொறுத்திருக்க முடியும்? பிரியங்கா அரசியல் செயன்முறைகளில் சம்பந்தப்படாமல் இருந்திருக்கக்கூடும். ஆனால், சம்பந்தப்பட வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். ▪

**இந்தியன் எக்ஸ்பிரஸ்**


---

*(44ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

எனவே தற்போதைய கிழக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகார வடிவத்தில் எந்த மாற்றமும் எதிர்பார்க்க முடியாது என்றே பலரும் கருதுகின்றனர். எனவே, இந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வியூகங்களை முஸ்லிம் காங்கிரஸ் வகுத்துச் செயற்பட்டு வருகின் றது. அதன்படியே தனக்குள்ள பலத்தைப் பயன்படுத்தி கிழக்கில் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பதான தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்திடமிருந்து முதலமைச்சர் பதவியை எதிர்பார்க்கின்றது போலவும் நடந்து கொள்கின்றது தவிர, ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் கொண்டுவந்து தமிழர்களுடன் இணைந்து செயற்பட்டு முதலமைச்சுப் பதவியைப்பெற முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதற்குச் சாத்தியமில்லை. எனவே, கிழக்கில் ஆட்சி மாற்றம் என்பதும் அதனூடான இரு மாகாண மீளிணைப்பு என்பதும் தொட முடியாத தூரத்தில் உள்ளது என்றே பலரும் நம்புகின்றனர். ▪

CHOGM 2013
Sri Lanka


# உள்நாட்டு அரசியலுக்கும் தேசிய நலனுக்கும் இடையே சிக்கியிருக்கும் மன்மோகன்சிங்



கொழும்பு உச்சி மகாநாட்டு ஆரம்ப தினத்தன்று பிரதமர் மன்மோகன் சிங் கொழும் புக்கு சென்று அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றி விட்டு அன் றைய தினமே புதுடில்லி திரும்பினால் இலங்கை அர சாங்கத்திற்கு ஒரு செய்தியை கொடுப்பதாக இருக்கும் என்று காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு சாராரும் அபிப்பிராயம்

கொழும்பு பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்கான நாட்கள் நெருங்குகின்றன. ஆனால், அதில் பங்கேற்பதற்கான மட்டம் குறித்து இன்னமும் இந்திய அர சாங்கம் தீர்மானிக்கவில்லை. ஏனைய பலதுறைகளில் தீர் மானமெடுப்பதில் தாமதம் காட்டுவதைப் போன்றே இந்த விடயத்திலும் அரசாங்கம் நடந்துகொள்கிறது. உகந்த நேரத்தில் உகந்த தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று சாக்குப் போக்குக் கூறப்படுகிறது. இராஜதந்திர ரீதியில் ஏற்புடையதும் அரசியல் ரீதியில் நேர்மையானதுமான தெரிவுகளுக்கிடையே பிரதமர் மன்மோகன்சிங் அகப்பட் டிருப்பதே பிரச்சினையாகும்.



எம்.பி.வித்தியாதரன்


பொதுநலவரசு மகாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டுமென்பதில் வெளியுறவு அமைச்சிலோ அல்லது ஏனைய கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலோ அல்லது தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களைத் தவிர, அரசியல் வாதிகள் மத்தியிலோ இரு அபிப்பிராயங்கள் இல்லை. மகாநாட்டை எங்கு நடத்துவது என்ற விவகாரம் இறுதியாக ஆராயப்பட்ட லண்டன் கூட்டத்தில் இலங்கையில் அது நடத்தப்படவேண்டுமென்று இந்தியா ஆதரித்து நின்றது. கனடாவே இலங்கையில் மகாநாடு நடத்தப்படுவதை எதிர்த்தது. எதிரியுடன் கூட ஊடாட்டங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பு மகாநாட்டில் பங்குபற்றுவதில் ஆர்வம் காட்டுவதாகவும் கூறப்பட்டது. அவ்வாறு கலந்து கொள்ளும் பட்சத்தில் பலதரப்பு அரங்கில் பொருத்தமான விவகாரங்களைக் கிளப்பக்கூடியதாக இருக்கும் என்பதுடன், மகாநாட்டுக்குப் புறம்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்திய அரசாங்கத்துக்கு அக்கறையுடைய விவகாரங்கள் குறித்து ஆராயக் கூடியதாகவும் இருக்கும்.

பேச்சுவார்த்தைகளே பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கான சிறந்தவழி என்பதும் தமிழர்களின் பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை மற்றும் ஏனைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறி த்து ராஜபக்ஷவுடன் மனந்திறந்து வெளிப்படையான பேச்சுகளை நடத்துவது அவசியம் என்பதுமே பிரதமரின் நம்பிக்கை. எனவே, கொழும்பு மகாநாட்டில் பங்குபற்ற அவர் விரும்புவார் என்பது தெளிவானது. ஆனால், தீர்மானமொன்றை எடுப்பதில் உள்ள பிரச்சினை அரசியல் ரீதியானது.

மமதா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸும் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக்கழகமும் ஆதரவை விலக்கிக்கொண்ட பின்னர் அரசாங்கம் சொற்ப பெரும்பான்மைப் பலத்துடனேயே இருக்கிறது. இப்போது காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும் இடையேயான உறவுகளில் படிப்படியான ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. ஆளும் கூட்டணியின் தலைமைத்துவக் கட்சி என்ற வகையில் காங்கிரஸ் இந்த முன்னேற்றத்துக்கு பாதிப்பு ஏற்படுவதை விரும்பப் போவதில்லை. அண்மைய எதிர்கால மற்றும் நீண்டகால நலன்களை மனதிற் கொண்டே காங்கிரஸ் செயற்படுகிறது. காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அடுத்த வருடம் தேர்தலைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே பெரும்பாலான மாநிலங்களில் இருந்து வருகின்ற தகவல்கள் காங்கிரஸுக்கு சாதகமானவையாக இல்லை. உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், மேற்குவங்காளம், ஆந்திரப் பிரதேசம், பீஹார் மற்றும் மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் கருத்துக் கணிப்புகள் மூலம் காங்கிரஸ் நெருக்கடியை எதிர்நோக்குகிறது என்பதையும் பாரதீய ஜனதாக் கட்சி மக்கள் செல்வாக்கில் மேம்பட்ட நிலையில் இருக்கிறது என்பதையும் அறியக்கூடியதாக இருக்கிறது. அரசியல் ரீதியில் முக்கியமானவையாக இருக்கும் வடமாநிலங்களில் எந்தவொன்றிலும் காங்கிரஸ் நம்பிக்கை வைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. கடந்த பொதுத் தேர்தலில் தெற்கில் ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சியால் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்த அதேவேளை, தமிழ்நாட்டில் தி.மு.க.வுடனான கூட்டணியின் மூலமாக பல ஆசனங்களில் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது.


ஆனால், எதிர்வரும் தேர்தலில், புதிய மாநிலமொன்றை உருவாக்குவதற்கு காங்கிரஸ் தீர்மானித்திருக்கும் (தெலுங்கான பிராந்தியத்தைத் தவிர) ஆந்திராவில் காங்கிரஸின் வாய்ப்புகள் படுமோசமாகிப் போயிருக்கின்றன. தெலுங்கானா மாநிலத்தின் விளைவாகத் தோன்றிய சூழ்நிலை ஆந்திராவைத் துருவமயப்படுத்திவிட்டது. காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்தவரான தற்போதைய முதலமைச்சர் கிரான்ரெட்டியே கிளர்ந்தெழுந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதன் விளைவாக சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கூட்டணிக்கு தமிழ்நாடு முக்கியமானதாகிறது. சரியான கூட்ட

> **இது இருதரப்பு மகாநாடு அல்ல. பலதரப்பு மகாநாடு. இருதரப்பு மகாநாடாக இருந்தால் பகிஷ்கரிப்பு பற்றிய பேச்சுகளுக்கு ஏதாவது பெறுமதி இருக்கக்கூடும். பொதுநலவரசு போன்ற பல தரப்பு அரங்கு ஒன்றை பகிஷ்கரிப்பதன் மூலம் இந்தியா எதைச்சாதிக்க போகிறது? அவ்வாறு செய்தால் உலகிற்கு ஒரு தவறான செய்கையை காட்டியதாகவே முடியும்**



கே.ரகுநாத்

ணியை அமைத்தால் தமிழ் நாட்டில் அரைவாசிக்கும் அதிகமான ஆசனங்களை ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியினால் கைப்பற்றக்கூடியதாக இருக்கும். ஆனால், அந்தக் கூட்டணி ஒன்றில் தி.மு.க.வுடனானதாக



எம்.கே.ராஸ்கோத்ரா

அல்லது அண்ணா தி.மு.க.வுடனானதாகவே இருக்க வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்களை அதிகம் 'நேசிப்பவர்கள்' யார் என்று காட்டிக் கொள்வதில் தி.மு.க.வுக்கும் அண்ணா தி.மு.க.வுக்கும் இடையே நிலவுகின்ற போட்டாபோட்டி மன்மோகன்சிங்கிற்கு பெரும் சிக்கலான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. தமிழகத்தில் பெரிய செல்வாக்கைக் கொண்டிராத காங்கிரஸ் கூட, இப்போது இந்த இலங்கைத்தமிழர் அரசியல் ஆதரவுப் போக்கில் இணைந்து கொண்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சகலரும் குறிப்பாக பி.சிதம்பரம், ஜி.கே.வாசன் மற்றும் நாராயணசுவாமி ஆகியோர் பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பதை எதிர்க்கிறார்கள். முற்றுமுழுதான தமிழ் அரசியல்வாதிகளான வாசனினதும் நாராயண சுவாமியினதும் நிலைப்பாடுகள் விளங்கிக் கொள்ளப்படக்கூடியவை. நிதியமைச்சர் சிதம்பரம் எடுத்திருக்கும் நிலைப்பாடு பெரும் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. ஏனென்றால், வாதப்பொருத்தமுடையதாக, காரண காரியத் தொடர்புடையதாகவே தீர்மானங்களை எடுக்கும் பழக்கமுடையவர் அவர். சிதம்பரம் ஒரு தமிழ் எம்.பி.என்றவகையில் தமிழ் நாடு மாநிலத்தின் நலன்களை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று உணருவதாக வட்டாரங்கள் கூறுகின்றன. மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் வாசன் பிரதமர் மன்மோகன்சிங்கை அக்டோபர் 31 ஆம் திகதி சந்தித்து, தமிழ்நாட்டுக் கட்சிகளின் உணர்வுகளை மனதிற்கொண்டு கொழும்பு மகாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

'பொதுநலவரசு உச்சி மகாநாடு தொடர்பாக இந்தியா எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பொருத்தமான தருணத்தில் தீர்மானம் அறிவிக்கப்படும். நான் கூறியவற்றை பிரதமர் மிகுந்த அவதானத்துடன் கேட்டார். இலங்கை தொடர்பில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மனதிற்கொண்டு செயற்படப்போவதாக அவர் எனக்குத் தெரிவித்தார்', என்று மன்மோகன் சிங்கைச் சந்தித்த பிறகு வாசன் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

மன்மோகன்சிங் மீதான நெருக்குதல்கள் அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில் அவர் இந்த விவகாரம் குறித்து சோனியா காந்தியுடன் ஆராய்ந்தார். விவகாரத்தை ஆராயுமாறு சோனியா காந்தி காங்கிரஸின் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழுவிடம் கேட்டுக்கொண்டார். அந்தக் கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கொழும்பு மகாநாட்டைப் பகிஷ்கரிப்பது பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்ல என்ற பிரதமரின் கருத்தை ஆதரித்தார்கள். அடுத்து, இந்த விவகாரம் மத்திய அமைச்சரவையிடம் விடப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. மத்திய அமைச்சரவையும் கூட,கொழும்பு மகாநாட்டைப் பகிஷ்கரிப்பதையோ அல்லது கலந்துகொள்ளக்கூடிய இந்தியத் தூதுக்குழுவின் மட்டத்தைக் குறைப்பதையோ ஆதரிப்பது சாத்தியமில்லை.

> உள்நாட்டு அரசியல் வெளியுறவுக்கொள்கைக்கு இடையூறாக அமைவது கவலைக்குரியது. தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதே எப்போதும் எமது முயற்சியாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மற்றைய தரப்பினருடன் நாம் பேச வேண்டிய தேவை இருக்கிறது. பகிஷ்கரிப்பு எவ்வாறு எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு உதவமுடியும்

ஒரு இடைநிலையான நடவடிக்கையை எடுக்கும்படி காங்கிரஸுக்குள் இருக்கும் ஒரு பிரிவினர் ஆலோசனை கூறுகிறார்கள். உச்சிமகாநாட்டு ஆரம்பதினத்தன்று மன்மோகன்சிங் கொழும்புக்குச் சென்று அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிவிட்டு, அன்றைய தினமே அவர் புதுடில்லி திரும்புவதை அந்தப் பிரிவினர் விரும்புகிறார்கள். அத்தகைய நடவடிக்கை மூலம் இரு நோக்கங்களைப் பூர்த்தி செய்ய முடியும் என்பது அவர்களின் அபிப்பிராயம். ஒன்று இந்தியா மிக நெருக்கமாக ஒத்துழைத்துச் செயற்படுகின்ற பலதரப்பு அரங்கான பொதுநலவரசு மகாநாட்டில் பங்கேற்பது, இரண்டாவது தமிழர்களுக்கு எதி

ரான ராஜபக்ஷவின் பாரபட்சக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வில்லை என்று வலிமையான செய் தியை தெரிவிப்பது.

வாக்குவாதங்கள் எத்தகையவை யாக இருந்தாலும், உண்மையான இறுதித் தீர்மானத்தை எடுக்கப்போ வது சோனியா காந்தியேதான். இந்த விவகாரத்தின் குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையான அரசி யல் விளைவுகளை சீர்தூக்கிப்பார் த்து அவர் ஒரு முடிவை எடுப்பார். பிரதமர் எடுக்கக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் வீட்டோ செய்யக் கூடிய அளவுக்கு வல்லமை பொருந் தியவராக சோனியா காந்தி விளங்கு கிறார். அவரது அணுகுமுறை குறுகியதாக - அதாவது தேர்தலை மனதிற்கொண்டதாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு உச்சி மகாநாட்டை மத் திய அரசாங்கம் பகிஷ்கரிக்க வேண் டும் என்று கோரும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டசபையில் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேறச் செய்

தலை மனதிற் கொண்டு சிதம்பரம் கூட மகாநாட்டைப் பகிஸ்கரிப்பதை ஆதரிக்கக்கூடும். கடந்த பொதுத்தேர் தலில் சிவகங்கை லோக்சபா தொகு தியில் மீள்வாக்கு எண்ணிக்கையைய டுத்தே அவர் வெற்றிபெறக்கூடிய தாக இருந்தது.

ஆனால், அரசியலை மனதிற் கொண்டு எத்தகைய இறுதித் தீர் மானம் எடுக்கப்பட்டாலும், வெளியு றவு அமைச்சும் முன்னாள் வெளி யுறவுச் செயலாளர்களும் கேந்திர முக்கியத்துவ விவகார ஆய்வாளர் களும் இந்தியா கொழும்பு மகாநாட் டில் பங்கேற்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தையே கொண்டிருக்கி றார்கள். எந்தவொரு பகிஷ்கரிப்பும் இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளைப் பாதிப்பது மாத்திர மல்ல, உலகிற்கே ஒரு தவறான செய் தியைக் கொடுப்பதாகவும் அமையும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இது வரையில் கனடா மாத்திரமே மகா நாட்டைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

தாகவே முடியும் என்பது ரகுநாத்தின் நிலைப்பாடு.

தமிழர்களுக்கு எதிரான இலங்கை யின் கொள்கைகள் தொடர்பில் எங்க ளுக்குப் பிரச்சினையொன்று இருக்கி றது. ஆனால், அந்த நாட்டு ஜனாதி பதியுடனும் அரசாங்கத்துடனும் பேசு வதுதானே தீர்வைக் காண்பதற்கு சிறந்த வழியாக இருக்கமுடியும். கலந்து பேசாமல் எவ்வாறு தீர்வைக் காண்பது? எவ்வாறு இலங்கை அர சாங்கத்தின் மீது செல்வாக்கைச் செலுத்த முடியும்? நாம் இலங்கைக் குச்சென்று அவர்களுடன் பேசவேண் டும். தமிழர் பிரச்சினைக்கு அப்பால், இலங்கையுடன் இந்தியா சுமுகமான நட்புறவைக் கொண்டிருக்கிறது. இணக்கத் தீர்வொன்றைக் காண்ப தற்கு இந்தியா பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்திருக்கிறது என்றும் ரகு நாத் விளக்கம் அளித்தார்.

இன்னொரு முன்னாள் வெளியுற

**ஒரு உறுப்பு நாட்டின் தவறுக்காக பொதுநல வரசு அமைப்பை இந்தியா தண்டிக்கக்கூடாது. இலங்கையில் உச்சி மகாநாடு நடைபெறுகி றது அவ்வளவுதான். ஒரு உறுப்பு நாட்டை தண்டிப்பதற்காக பல தரப்பு மகாநாடு ஒன்றை நாம் பகிஷ்கரிக்க வேண்டுமா?**



*ரி.சி.ஏ.ரங்காச்சாரி*

திருக்கிறார் முதலமைச்சர் ஜெய லலிதா. பொதுநலவரசு அமைப்பில் இருந்து இலங்கையை இடைநிறுத் தம் செய்வதற்கான பிரேரணையை இந்தியா முன்மொழிய வேண்டும் என்றும் கூட அத்தீர்மானத்தில் கோரி க்கை விடுக்கப்பட்டிருக்கிறது. மகா நாட்டைப் பகிஷ்கரிக்குமாறு கருணா நிதியும் பிரதமரை வலியுறுத்திக் கேட் டிருக்கிறார். காங்கிரஸைச் சேர்ந்த சிதம்பரமும் ஏனைய அமைச்சர்க ளும் கூட, இந்தக் கோரிக்கை ஆரவா ரத்தில் இணைந்து கொண்டுள்ளதை யடுத்து தமிழ் நாடு மாநிலத்தில் கருத்து ஏகமனதாக இருக்கிறது. தேர்


தமிழரான முன்னாள் வெளியுற வுச் செயலாளர் ரகுநாத் எது எவ்வா றிருந்தாலும் இந்தியா மகாநாட்டில் பங்கேற்றேயாக வேண்டும் என்று உறுதிபடக்கூறுகிறார். இது இருதரப்பு மகாநாடல்ல, பலதரப்பு மகாநாடு. இது ஒரு இருதரப்பு மகாநாடாக இருந்தால் பகிஷ்கரிப்புப் பற்றிய பேச்சுகளுக்கு ஏதாவது ஒரு பெறு மதியிருக்கக்கூடும். ஆனால், பொது நலவரசு போன்ற பல்தரப்பு அரங்க மொன்றைப் பகிஷ்கரிப்பதன் மூலம் இந்தியா எதைச் சாதிக்கப் போகிற து? அவ்வாறு செய்தால் உலகிற்கு ஒரு தவறான சைகையைக் காட்டிய

வுச் செயலாளரான மகாராஜ கிருஷ்ணா ராஸ்கோத்ரா உள்நாட்டுப் பிரச்சினைகள் அல்ல, தேசிய நலன் களே வெளியுறவுக் கொள்கையை வழிநடத்த வேண்டும் என்கிறார்.

'உள்நாட்டு அரசியல் வெளியுற வுக்கொள்கைக்கு இடையூறாக அமைவது மிகவும் கவலைக்குரியது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதே எப்போதும் எமது முயற்சியாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் மற்றத் தரப்பினருடன் பேசவேண்டிய தேவை இருக்கிறது. பகிஷ்கரிப்பு எவ்வாறு எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு உதவ முடியும்? எனக்கு இது விளங்கவில்லை' என்று கூறினார் ராஸ்கோத்ரா. கொழும்பு மகாநாட்டில் பங்குபற்றுவதன் மூலம் பிரதமரும் இந்திய அரசாங்கமும் பல்வேறு மட்டங்களில் பிரச்சினைகளைக் கிளப்பிப் பேசக்கூடியதாக இருக்கும். கொழும்பில் இருக்கும் போது பிரதமராலும் ஏனைய உயர் மட்ட அதிகாரிகளினாலும் தமிழ்த் தலைவர்களுடனும் பேசக்கூடியதாக இருக்கும் அல்லவா? என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் தூதுவரான தமிழ்நாட்டைச் சேர்ந்த ரி.சி.ஏ.ரங்காச்சாரி ஒரு உறுப்பு நாட்டின் தவறுதலுக்காக பொதுநலவரசு அமைப்பை இந்தியா தண்டிக்கக்கூடாது என்கிறார். இலங்கையில் அந்த மகாநாடு நடைபெறுகிறது அவ்வளவுதான். ஒரு உறுப்பு நாட்டைத் தண்டிப்பதற்காக பல தரப்பு மகாநாடொன்றை நாம் பகிஷ்கரிக்க வேண்டுமா? இருதரப்பு மகாநாடுகளுக்கும் பல்தரப்பு மகாநாடுகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. பொதுநலவரசு அமைப்பு தொடர்பில் ஏற்கனவே சர்ச்சைகள் இருந்திருக்கின்றன. இந்திய பொதுநலவரசு உச்சி மகாநாட்டை ஒரு தடவை நடத்தியபோது மகாராணியை எவ்வாறு நடத்துவதென்பது குறித்து சர்ச்சை மூண்டது. ஜனநாயக நாடுகளில் பிரச்சினைகள் சாத்தியமே. மத்திய அரசாங்கம் சகல அதிகாரங்களையும் தன்வசம் வைத்திருக்க விரும்பும்போது இந்தியாவின் சில மாநிலங்களின் முதலமைச்சர்கள் மத்தியிடமிருந்து கூடுதல் அதிகாரங்களைப் பெறுவதற்கு விரும்பவில்லையா? ஆனால், இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டியதேவை இருக்கிறது. பகிஷ்கரிப்பு



என்பது ஆக்கபூர்வமானதேயல்ல என்று ரங்காச்சாரி வாதிடுகிறார்.

இந்த இராஜதந்திரிகளில் எவருமே பிரதமர் மன்மோகன் சிங் அவசர அவசரமாக கொழும்புக்குச் சென்று உச்சிமகாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் பங்கேற்றுவிட்டு உடனே திரும்பிவர வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு செய்வதன் மூலம் எதைச் சாதிக்கப் போகிறோம்? என்று கேட்கிறார் ராஸ்கோத்ரா. அவ்வாறு செய்தால் அது ஒரு நாகரிகமற்ற காட்சியாக இருக்கும். அத்துடன், அதன் விளைவாக நீண்ட காலத்துக்கு கசப்புணர்வு தோன்றக்கூடிய நிலை ஏற்படும். எவருடனாவது நாம் பேசவில்லையென்றால், ஊடாட்டத்தைச் செய்யவில்லையென்றால் தமிழர்கள் விவகாரத்தில் நாம் எதைச் சாதிக்கப் போகிறோம்? என்ன செய்தியைத் தெரியப்படுத்தப் போகிறோம்? என்று கேட்கிறார் ரங்காச்சாரி.

இத்தகையதொரு பின்புலத்திலே, பல கொள்கைவகுப்பாளர்கள் பொது நலவரசு உச்சிமகாநாட்டில் மன்மோகன் சிங் பங்கேற்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவ்வாறு கலந்து கொண்டு தமிழர்களின் உண்மையான பிரச்சினைகளை (சாத்தியமானால் பொதுநலவரசு உச்சிமகாநாட்டு கூட்டத்தொடர்களிலேயே) கிளப்பலாம். ராஜபக்ஷவுடன் பேசி இந்தியாவின் அக்கறைகளைத் தெரியப்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயமுடியும் என்று அந்த கொள்கை வகுப்பாளர்கள் கருதுகிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கு அல்லது குறைந்தபட்சம் வடமாகாணத்தின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை சந்திப்பதற்காவது இந்த உச்சி மகாநாட்டுச் சந்தர்ப்பத்தை மன்மோகன் சிங் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

**மன்மோகன் சிங்குக்கு விக்னேஸ்வரன் எழுதிய கடிதம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உச்சி மகாநாட்டில் பிரதமர் பங்கேற்கக்கூடாது என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் தமிழ்நாட்டுக்கட்சிகள் எடுத்திருக்கும் நிலைப்பாட்டிற்கு இக் கடிதம் முரணானதாக இருக்கிறது**

### விக்னேஸ்வரனின் கடிதம்

வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ஒரு பக்கக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். 'இலங்கையின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச் செய்தமைக்காக உங்களுக்கும் மதிப்பார்ந்த உங்கள் நாட்டுக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு உங்களுக்கு

அழைப்பு விடுப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். உங்களை வரவேற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தால் அதை பெரும் கௌரவமாக எனது மக்கள் கருதுவார்கள்' என்று அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருந்தார்.

கொழும்பு உச்சி மகாநாடு தொடர்பில் டில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதத்திற்கு விக்னேஸ்வரனின் கடிதம் புதிய திருப்பத்தைக் கொடுத்திருக்கிறது. உச்சிமகாநாட்டில் மன்மோகன்சிங் பங்கேற்கக் கூடாது என்று வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் தமிழ்நாடு கட்சிகள் எடுத்திருக்கும் நிலைப்பாட்டுக்கு இக் கடிதம் முரணானதாக இருக்கிறது.

குழப்பநிலை தொடருகின்றதற்கு மத்தியில் பெரும்பாலான தலைவர்களும் அதிகாரிகளும் எதையும் பேசாமல் மௌனம் சாதிக்கிறார்கள். ஆனால், வாசன் மட்டுமே இந்த விவகாரம் குறித்து ஊடகங்களுடன் பேசத் தயாராயிருக்கிறார். முன்னதாக பிரதமர் அலுவலக இணைய மைச்சர் நாராயணசுவாமி பிரதமர் கொழும்புக்குச் செல்லாமல் இருக்கக் கூடும் என்று சூசகமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தார். ஆனால், விக்னேஸ்வரனிடமிருந்து வந்த கடிதம் நிலைவரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது போலத் தெரிகிறது. கொழும்பு மகாநாட்டில் பிரதமர் பங்கேற்பாரா, இல்லையா என்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று நவம்பர் முதலாம் திகதி மட்டில் கூட வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் சயீத் அக்பருதீன் கூறியிருந்தார். தேசிய நலன்கள் மற்றும் சர்வதேச கடப்பாடுகள் உட்பட பல்வேறு அம்சங்களை பரிசீலித்த பிறகு ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு நாட்டின் மாகாண முதலமைச்சர் இன்னொரு நாட்டின் பிரதமருக்கு அழைப்பு விடுப்பது வழமையான ஒன்றா? என்று வெளியுறவு அமைச்சின் பேச்சாளரிடம் கேட்கப்பட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

'இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவை வழக்கமான ஒன்றாக வகைப்படுத்தக்கூடாது. அது மிகவும் வலிமையான உறவு. அது மிகவும் நெருக்கமான உறவு, வடபகுதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நல்வாழ்வு உட்பட பல்வேறுபட்ட விவகாரங்கள் தொடர்பில் இலங்கையுடன் சேர்ந்து இந்தியா பணியாற்றுகின்ற ஒரு விசேடமான உறவுமுறை. எனவே, வழக்கமானவை என்று நீங்கள் கருதுகின்ற வழமையான அளவுகோல்களை அல்லது வரையறைகளை வைத்து இலங்கையுடனான இந்த விவகாரங்களை மதிப்பீடு செய்தலாகாது.

மன்மோகன் சிங் கொழும்புக்கு செல்வது சாத்தியம் என்று கூறும் வட்டாரங்கள் முன்கூட்டியே பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட குழுவொன்று கொழும்பில் அதன் ஏற்பாடுகளை பூர்த்திசெய்திருக்கிறது என்று சுட்டிக் காட்டுகின்றன. ஹோட்டல் அறைகள் பதிவு மற்றும் பயண ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டதாகவும், அந்த வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை அல்லது நிராகரிப்பைத் தெரிவித்த பிறகே பிரதமரின் கொழும்பு விஜயம் குறித்து இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படும்.

இந்தியா தனிமைப்படுத்தப்பட்டு, கேந்திர முக்கியத்துவத்துறைகளில் சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் தோற்றுப்போவதனால் ஏற்படக் கூடிய ஆபத்துகளை விளக்கிக்கூறி சோனியாகாந்தியின் நம்பிக்கையை வென்றெடுக்க மன்மோகன் சிங்கினால் இயலுமா? தமிழர் விவகாரத்தில் ராஜபக்ஷவின் மீது செல்வாக்கைச் செலுத்த இயலாமற் போகக் கூடிய சூழ்நிலையினால் ஏற்படக் கூடிய ஆபத்துகளை சோனியாவுக்கு விளக்கிக்கூறி நம்பவைக்க பிரதமரினால் இயலுமா? லோக்சபா தேர்தல்கள் நடக்கும் நேரத்தில் நிலைவரங்களில் மாற்றம் ஏற்படக் கூடியதாக இருக்குமென்று சோனியா காந்திக்கு மன்மோகன் சிங்கினால் விளங்க வைக்கக்கூடியதாக இருக்குமா? கூட்டணி அரசியலின் காரணமாக எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட தீர்மானங்களினால் தோற்றுவிக்கப்பட்ட தப்பெண்ணங்கள் கட்சியின் பெயரை எவ்வாறு பாதித்திருக்கின்றன என்பதை காந்திகுடும்பம் நன்கறியும். ■

---


*(42ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இலங்கையின் 'ஒற்றை ஆட்சி முறை'யில் மாகாண கவர்னர் பதவி மிக முக்கியமான ஒன்று. அண்டை நாடான இந்தியாவிலும் கவர்னர் பதவி ஒரு அளவிற்கு முக்கியமானது.

இரண்டு நாடுகளிலுமே இங்கிலாந்து நாட்டின் ஆட்சியில் இருந்த காலத்திலேயே கவர்னர் பதவி உருவாக்கப்பட்டது. ஆனால், இலங்கையைப்போல் அல்லாது, இந்தியாவில் கவர்னருக்கு, மாகாண ஆட்சி-அதிகாரத்தில் அதிக பங்களிப்பிற்கு இடமில்லை.


கடந்த 1967-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு மாநிலத்தில் கவர்னர் பதவி என்பது 'ஆட்டுக் குத் தாடி' என்பதற்கு ஒப்பானது என்று விமர்சனம் செய்தது. பின்னர் வந்த காலகட்டத்தில், மாநிலத்தை ஆண்ட தி.மு.க. அரசினால் நியமிக்கப்பட்ட நீதியரசர் இராஜமன்னர் தலைமையிலான கமிஷன் கூட, கவர்னர் பதவி அவசியமில்லை என்று அறிவுறுத்தியது. அவ்வாறே, பதவியில் இருந்த போதும், பதவி இழந்த போதும் கோரிவந்துள்ள தி.மு.க, கவர்னர் என்ற பதவி அரசியல் சட்டத்தில் இருக்கும் கடைசி நாள் வரை அந்த பதவிக்குரிய மதிப்பு மற்றும் மரியாதையைக்கொடுத்து வரவேண்டும் என்றே கூறி வந்துள்ளது. அவ்வாறே, செயற்பட்டும் வந்துள்ளது! ■

உள்நாட்டு அரசியல்



இராணுவப் பின்புலம் இல்லாத ஒருவரை வடமாகாண ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையில் அர்த்தமிருக்கிறது. அக்கோரிக்கை அரசியல் சார்ந்தது. மத்திய மற்றும் மாகாண அரசுகளில் அனுபவம் மிக்க மூத்த அரசியல்வாதி ஒருவரை வட மாகாண ஆளுநராக நியமித்தால் பொருத்தமாக இருக்கும்

# வட மாகாண வாக்களர்களின் உரிமையும் கூட்டமைப்பு அரசின் கடமையும்



என்.சத்தியமூர்த்தி

வட மாகாண சபைத் தேர்தல் முடிந்து, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமையில் புதிய அரசும் பதவியேற்றுள்ளது. எப்போது மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றாலும் கூட்டமைப்பே வெற்றிபெறும் என்பது 'தமிழர் அரசியல்' அறிந்த அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட 36 இடங்களில் 28 இடங்களை கூட்டமைப்பு கைப்பற்றும் என்றோ, மொத்தம் பதிவான வாக்குகளில் கிட்டத்தட்ட 80சதவீத வாக்குகளை அவர்கள் பெறுவார்கள் என்றோ, கட்சியின் ஆதர்ச ஆதரவாளர்கள் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். அதிக வாக்குகள் பெறும் கட்சிக்கு கிடைக்க வேண்டிய இரண்டு 'போனஸ்' இடங்களையும் சேர்த்து மொத்தமுள்ள 38 இடங்களில், 30 இடங்களை கூட்டமைப்பு கைப்பற்றியது இனப்போர் பின்னரான தற்போதைய காலகட்டத்தில், நாட்டின் அரசியலிலும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளிலும் முக்கிய திருப்பம் என்று கூறலாம்.

ஆனால், இந்த 'அசுர வெற்றி' வட மாகாண வாக்காளர்களின் அபிலாசைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்குமான வடிகால் என்பதனை கூட்டமைப்பு உணர்ந்து செயல்பட வேண்டும். குறிப்பாக, மாகாணத்தில் புதிதாக பதவியேற்றுள்ள கூட்டமைப்பு அரசும் அமைச்சர்களும் இதனை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். இதில், மக்களின் எதிர்பார்ப்பு என்பது கூட்டமைப்பின் தேர்தல் வாக்குறுதியையும் அதன் தலைவர்களின் தேர்தல் பிரசாரத்தின் அடிப்படையி லும் மட்டுமே அமைந்துவிடாது. அவ்வாறு அமைந்து விடவும் கூடாது.

தேர்தல் நேரத்தில், கூட்டமைப்புத் தலைவர்கள், பன்னெடுங்காலமாக தாங்கள் பேசி வந்த 'உரிமை' பிரச்சினைகளுக்கே முக்கியத்துவம் கொடு த்தனர். அவர்கள் ஆராய்ந்து அறிந்து வெளியிட்ட தேர்தல் அறிக்கை கூட

'தமிழர்களின் அரசியல் உரிமைகள்' கூறித்து பேசியதே தவிர, வட மாகாணத் தமிழர்களின் 'வாழ்வுரிமை' குறித்து வாய் திறக்கவில்லை. அந்த அடிப்படையில் மட்டுமே அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையும், பிரசாரமும் கூட அமைந்தது என்பது வருத்தமான செய்தி. ஆனால், அதுவே உண்மையான செய்தியும் கூட.

கூட்டமைப்பு பேசிவரும் 'அரசியல் உரிமைகள்' மட்டுமே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்றால், வட மாகாணத்தில் மட்டுமாவது அந்தக் கட்சி இனப்போர் முடிந்த பின்னர் நடைபெற்ற பிற தேர்தல்களில் ஏன் இத்தனை சதவீத வாக்குகள் பெறவில்லை என்ற கேள்வி எழும். அது மத்திய அரசு மற்றும் அரசு கட்சிகளின் சூழ்ச்சியாலும், தேர்தல் முறைகேடுகளாலும், இராணுவத்தினரின் கெடுபிடிகளாலும் என்று கூறி கூட்டமைப்பு தப்பித்துக்கொள்ள முடியாது. அது உண்மையானால், தற்போது நடந்து முடிந்த தேர்தலில் அவர்கள் கூறி வந்த அளவிற்கு தேர்தல் முறைகேடுகளும் இராணுவத்தினரின் கெடுபிடியும் இருக்கவில்லையா? அப்படியென்றால், பிற கட்சிகளை கூட்டமைப்பு குற்றஞ்சாட்டி வந்தது போல், அதன் தலைவர்களும் தேர்தல் நேர பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டார்களா?

**'தேர்தல் மயக்கம்'**

மாகாணசபைத் தேர்தல் முடிந்து, கூட்டமைப்பு ஆட்சி அமைத்த பின்னரும் கூட, அதன் தலைவர்களில் பலரும் இன்னும் 'தேர்தல் மயக்கம்' கொண்டவர்களாகவே தங்களை பிரகடனப்படுத்தி வருகின்றனர். இப்பொழுதும் கூட அவர்களது மேடைப் பேச்சுகளும், பத்திரிகையாளர் பேட்டிகளும், தேர்தல் இன்னமும் நடந்து முடியவில்லை என்று அவர்கள் கருதிச் செயல்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. தேர்தல் வெற்றி குறித்த 'இன்ப அதிர்ச்சி', அவர்கள் தங்களது அரசு மற்றும் ஆட்சி சார்ந்த கடமைகளை உணர்ந்ததான தோற்றத்தைக் கூட ஏற்படுத்திவிடவில்லை.

கூட்டமைப்புத் தலைவர்களும் அமைச்சர்களும் வேண்டிய விதத்திலும் அளவிலும் மனம் மாறிக்கொள்ள இன்னமும் நாள்படவில்லை. ஆனால், வட மாகாணத்தின் அவசியங்களையும், அவர்களுக்கு அபரிமிதமாக வாக்களித்த மக்களின் அவசரத்தையும் அவர்கள் புரிந்து செயல்பட்டால், இன்னமும் 'அரசியல் உரிமைகள்' பற்றி மட்டுமே பேசிக் கொண்டு இருக்கமாட்டார்கள். மாறாக, தங்களுக்கு தற்போதுள்ள குறைந்தபட்ச அதிகாரங்கள் மூலம், தங்கள் மக்களுக்கு அரசு சார்ந்த நன்மைகளை எவ்வாறெல்லாம் தங்களால் கொண்டு சேர்க்க முடியும் என்று எப்போதோ கருதி, எப்படியாவது செயல்படத் தொடங்கியிருப்பார்கள்.

'பைய தின்றால், பனையையும் தின்னலாம்' என்பது பழமொழி. அந்த விதத்தில், வட மாகாண அரசு, தற்போது உள்ள அதிகாரங்கள் மூலம் தங்கள் மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்வதற்கு நல்ல நாளும் முகூர்த்தமும் பார்த்து செயற்படத் தொடங்க வேண்டிய அவசியம் இல்லை. அரசியல் மற்றும் ஆட்சி அனுபவம் இல்லாத அமைச்சர்கள், தங்களுக்கு தற்போது இருக்கும் அதிகாரம் மற்றும் அதிகார வரம்புகளை தெளிவாக கற்றறிந்து செயல்பட்டாலே, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்க முடியும் என்றே தோன்றுகிறது.

பதின்மூன்றாவது அரசியல் சட்டத்தின் கீழ் 'அதிகாரப் பகிர்வு' முறை செயற்பாட்டில் வந்து 25 ஆண்டுகள் கடந்து விட்டன. இத்தனை ஆண்டுகளாகவும் நாட்டின் மற்ற எட்டு மாகாணங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள், தற்போது தங்களுக்கு உள்ள மட்டுப்பட்ட அதிகாரங்களைக் கூட பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அதை விட முக்கியமாக, மாகாண சபைக்கோ, மாகாண அரசுகளுக்கோ அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று தனி நபர்களாகவோ, அல்லது மாகாண சபை அல்லது அரசுகளாகவோ கோரிக்கைகள் கூட முன் வைத்தது இல்லை.

இதில், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகவும் செயற்பாட்டில் இருந்து வரும் கிழக்கு மாகாணமும் அடங்கும். அந்த மாகாணத்தில் இனப்போர் முடிந்து கடந்த 2008ஆம் ஆண்டில் 'பிள்ளையான்' என்று அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை முதலமைச்சராகக் கொண்டு அமைச்சரவைப் பதவி ஏற்றது. அந்த அரசிற்கு மத்திய அரசாங்கத்தின் அரசியல் ரீதியான ஆதரவும் பங்களிப்பும் இருந்தது. பிற்காலத்தில், மாகாண அரசிற்கு அதிகாரங்களே இல்லை என்று பிள்ளையான் கூறும் காலமும் வந்தது.

என்றாலும், அரசு ரீதியாக அமைச்சரவை உறுப்பினர்கள் சிலருக்கும் அதிகாரிகள் பலருக்கும் அனுபவமின்மை காரணமாக சரியான முடிவுகளையும் அதோடு சேர்ந்து முயற்சிகளையும் அவர்களால் எடுக்க முடியவில்லை என்ற கருத்தும் உருவானது. தற்போது, வட மாகாணத்தில் நிலை அத்தனை மோசம் என்று கூற முடியாது.

குறிப்பாக, வடமாகாண தலைநகரான யாழ்ப்பாணம், கடந்த தொண்ணூறுகளின் நடுப் பகுதியில் இருந்தே 'இனப்போர்' காரணமாக பிற மாவட்டங்கள் அளவிற்கு பாதிக்கப்படவில்லை என்பதே உண்மை. அதன் காரணமாகவும் வட மாகாண அரசு அமைப்பு குறிப்பிட்ட அளவிற்கு கட்டுக்கோப்புடன் இருந்து வந்துள்ளது. ஆனால், மாகாணத்தின் பிற மாவட்டங்கள், இனப்போரின் கடைசிக் கால கட்டத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. அங்குள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், வட மாகாண அமைச்சர்கள், அனுபவ ரீதியாக தாங்களும் தங்களது கட்சியும் தங்களது மக்களும் எதிர்பார்க்கும் 'அதிகாரப் பரவல் முறை' குறித்து கற்றறிந்து கொண்டு, அதன் பின்னர் தங்களது அடுத்த கட்டக் கோரிக்கைகள் குறித்து முடிவு செய்யலாம்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, பதின்மூன்றாம் திருத்தம் 'வேண்டும்-வேண்டாம்' என்ற அரசி

யல் போட்டா-போட்டியே நடந்துள்ளதே தவிர, அதன் பயன்களோ பயன் இல்லாமையோ என்றுமே, எவராலுமே விளக்கமாக விவாதிக்கப்படவில்லை என்பதே உண்மை. மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று அரசியல் ரீதியாக கூறி வருபவர்கள் இன்று தான் முதன் முறையாக ஆட்சி அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளார்கள். அத்தகைய அதிகாரங்கள் தேவையில்லை என்று வாதிடுவோரோ, மாகாண சபைகளில் பங்கேற்று சிறப்பாக செயல்படுபவர்கள் என்று கூறி விடமுடியாது. அவர்களில் பலரும் அரசியல் ரீதியாக மட்டுமே பதின்மூன்றாம் சட்ட திருத்தத்தைக் கூட எதிர்ப்பவர்கள்.

அந்த விதத்தில், பதின்மூன்றாம் திருத்தம் உட்பட்ட அதிகாரப் பகிர்வு முறைகளை ஆதரிப்போரும் சரி, அவற்றை எதிர்ப்போரும் சரி, ஏட்டுச் சுரைக்காயை மட்டுமே 'சுவைத்து' அதன் சுவை குறித்து விவாதமும் விதண்டாவாதமும் செய்கிறார்கள். இவற்றிக்கு மாறாக, மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையுடன் அரசு அமைத்துள்ள கூட்டமைப்பு, தங்கள் அரசு மற்றும் அமைச்சர்கள் அனுபவ ரீதியாக இந்தப் பிரச்சினைகளை அணுகி, அதன் அடிப்படையில் தங்களது தற்போதைய கோரிக்கைகளையும் மாற்றி அமைத்தால் மட்டுமே அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அவற்றின் செயல்பாடுகளுக்கும் இடையே ஏதாவது பொருத்தம் இருக்கும்.

அவ்வாறு இல்லையென்றால், தங்களது அளவுக்கேற்ப செருப்பு வாங்கிக் கொள்ளாமல், செருப்பின் அளவுக்கேற்ப தங்களது காலை வெட்டிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாவதற்கு கூட்டமைப்பினரும் அவர்களது அரசும் அமைச்சர்களுமே காரணமாகி விடுவார்கள். சுருங்கச் சொல்லப்போனால், சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் மற்றும் வட மாகாண மக்களின் வாக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில், கூட்டமைப்புத் தலைமை விரும்பும்

**கூட்டமைப்புத் தலைவர்களும் அவர்களின் அமைச்சர்களும் வட மாகாணத்தின் அவசியங்களையும் அவர்களுக்கு அபரிமிதமாக வாக்களித்த மக்களின் அவசரத்தையும் புரிந்துக்கொண்டு செயற்பட்டால் இன்னமும் கூட அரசியல் உரிமைகள் பற்றி மாத்திரமே பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள். தங்களிடம் தற்போது இருக்கும் குறைந்த பட்ச அதிகாரங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு அரசு சார்ந்த நன்மைகளை எவ்வாறு பெற்றுக் கொடுப்பது என்பதில் கரிசனைக் காட்ட தொடங்கியிருப்பார்கள்**

அளவிற்கு 'அதிகாரப்பரவல் முறை' அமுலாக்கப்பட்டாலும், அதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித பலனும் இல்லாமல் போய்விடும் சூழ்நிலை கூட தோன்றலாம்.

### ஆட்டுக்குத் தாடி?

தற்போதைய நிலையில், வட மாகாணத்தில் முன்னாள் இராணுவ உயர் அதிகாரியான, மேஜர் ஜெனரல் சந்திரசிரி கவர்னராக உள்ளார். அவரை மாற்றிவிட்டு, இராணுவப் பின்னணி இல்லாத எவரையேனும் கவர்னராக நியமிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு, தேர்தலுக்கு முன்னரே கோரியிருந்தது. தேர்தலுக்குப் பின்னரும் அந்தக் கோரிக்கையை கட்சியும் வட மாகாண முதல்வர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரனும் மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

அதேசமயம், கொழும்பில், முதல்வர் விக்னேஸ்வரன் பதவியேற்றுக் கொண்டது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் என்றாலும், அரசியல் சட்ட ரீதியாக, அவரது பதவியேற்பில் கவர்னர் சந்திரசிரியே முக்கிய பங்கு வகித்தார் எனலாம். முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகட்டும், அவரது அமைச்சரவை சகாக்கள் ஆகட்டும், அவர்கள் அனைவருமே கவர்னர் சந்திரசிரியின் அழைப்பு மற்றும் உத்தரவின் பேரிலேயே தற்போது அந்தந்தப் பதவிகளை வகித்து வருகின்றனர். அவர் பதவியில் தற்போது தொடரும் போது, இதுபோன்ற முரண்பாடான போக்குகளை கூட்டமைப்பு அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும்.

அதே சமயம், வட மாகாணத்தில் இராணுவப் பின்புலம் இல்லாத ஒருவரை கவர்னராக நியமிக்க வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கையில் அர்த்தமுள்ளது. அவர்களது கோரிக்கை அரசியல் சார்ந்தது. ஆனால், அரசு மற்றும் அரசியல் அனுபவமில்லாத அமைச்சர்களுக்கு தெளிவான அறிவுரை வழங்கி அவர்களை சரியாக வழிநடத்தும் வகையில், மத்திய மற்றும் மாகாண அரசுகளில் அனுபவம் மிக்க மூத்த அரசியல்வாதி ஒருவரை, வட மாகாண கவர்னராக நியமிக்கலாம்.

அவ்வாறு கவர்னராக நியமிக்கப்படுபவர், மாகாண அரசு மற்றும் குறிப்பாக முதலமைச்சரின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி இருந்தால் மட்டுமே, அவரால் கூட்டமைப்பின் இளம் அமைச்சர்களுக்கு அவர்கள் விரும்பும் வகையிலும், அரசு ரீதியாக பயனுள்ள வகையிலும் வேண்டிய அறிவுரைகளை, வேண்டிய சமயங்களில், வேண்டிய விதத்தில் வழங்க முடியும். இல்லை என்றால், கவர்னர் பதவி என்பதே, வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினைப் பொருளாக மாறிவிடும் அபாயம் உள்ளது. மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட கவர்னர் பெரியவரா அல்லது மாகாண மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பதவியேறியுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட அரசு பெரிதா என்ற பிரச்சினை உருவாகி, அதுவே பூதாகரமாக வடிவெடுத்துவிடும் அபாயம் உள்ளது.

*(39ஆம் பக்கம் பார்க்க)*

உள்நாட்டு அரசியல்

# முஸ்லிம் அரசியலும் வட கிழக்கு மீளிணைப்பும்



ஏ. பீர்முகம்மது

வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிந்த பின்னர் வடமாகாண சபைக்கென இவ்வா ண்டு செப்டெம்பரில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் முப்பத்தெட்டில் முப்பது ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மொத்தமாக அள்ளிக்கொண்டது. கூட்டமைப்பின் பிரமாண்டமான இந்த வெற்றியை அடுத்து பல திசைகளிலும் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் மேற்கிளம்பி வரத்தொடங்கியுள்ளன. வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது அவற்றில் முக்கியமானது. முஸ்லிம்களை வெளியே வைத்துவிட்டு இணைப்பு எந்தவகையிலும் சாத்தியமில்லை என்பதை விளங்கிக் கொண்டநிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் தலைவர் சம்பந்தன் உட்பட பல தமிழ்த் தலைமைகள் இரு இனங்களுக்கும் இடையிலான உறவின் முக்கியத்துவம்பற்றி பேசி வருகின்றனர். வடக்கு, கிழக்கு இணைப்பை நோக்கியதாகவே இந்தக் கருத்துகள் அமைந்துள்ளன. மறுபக்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் இணைப்புப்பற்றியும் இணைப்புக்கு சார்பாகவும் வெளியிடும் கருத்துகள் பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுதொடர்பில் பேசுவதே இக்கட்டுரையாகும்.

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது, இரண்டு மாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. முஸ்லிம்களும் தமிழ் பேசும் மக்கள்தான் என்றவகையிலோ அல்லது தமிழர்களுக்கு அடுத்த பெரும்பான்மையாக இரு மாகாணங்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றவர்கள் என்ற வகையிலோ அவர்கள் எவரிடமும் சிறிதளவேனும் கருத்துப் பரிமாற்றம் செய்யாமல் இந்த ஒப்பந்தம் அவசரம் அவசரமாக கையெழுத்தானது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அந்தவேளையில் இதுதொடர்பில் தன்னுடைய அதிருப்தியை வெளியிட்டிருந்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முஸ்லிம் சமூகம் தடையாக இல்லை என்பதையும் நிபந்தனையின்பேரில் வடக்கு, கிழக்கு இணைவதை தனது கட்சி ஆதரிக்கும் என்பதையும் பகிரங்கப்படுத்தினார். இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கென தனியான நிர்வாக அலகு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக சந்தர்ப்பங்கள்



கிடைக்கும்போதெல்லாம் தமிழ்த்த லைமைகளிடம் கலந்துரையாடினார். இந்தநிலையில்தான் அஷ்ரஃபின் திடீர் மறைவினால் கட்சியின் தலைமைப் பொறுப்பு ரவூப் ஹக்கீம் அவர்களின் கைக்குக் கிடைத்ததும் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் வடக்கும் கிழக்கும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதும் நடந்து முடிந்தது.

இணைப்பிலிருந்து வடமாகாணம் பிரிக்கப்பட்ட பின்னர் 2008 இலும் 2012 இலும் கிழக்கு மாகாணசபைக்கென இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டன. முதலாவது சந்தர்ப்பத்தில் முஸ்லிமொருவர் முதலமைச்சராவதற்குரிய முன்னெடுப்பு முயற்சிகள் அரசாங்கத்தால் கவனமாகத் தவிர்க்கப்பட்டு அவர்களின் விட்டுக்கொடுப்புடன் சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராக்கப்பட்டார். இரண்டாவது தேர்தல்( 2012) நடந்து முடிந்தபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோடு இணக்கப்பாட்டுக்கு வந்த அரசாங்கம் நஜீப். ஏ. மஜீதை முதல்வராக நியமித்தது. ஆனால் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த வட மாகாணசபைத் தேர்தல் 'தவிர்க்க முடியாத அழுத்தங்கள்' காரணமாக இப்போது நடந்து முடிந்துள்ளது. ஆட்சிப் பொறுப்பு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில்தால் இரு மாகாணங்களும் மீளிணைக்கப்படவேண்டும் என்ற கருத்துருவாக்கம் வெளியாகியுள்ளது. பிரிப்புக்குப் பின்னரான காலத்திலிருந்து தமிழ் மக்களின் குறிப்பாக வடபகுதி மக்களின் மனங்களில் விடுபட்டு வெளியேற முடியாதவாறு வேர் கொண்டுள்ள மீளிணைப்பானது விக்னேஸ்வரனின் வருகையோடு உயிர்ப்பிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த மீளிணைப்பு விவகாரம் அரசாங்கத் தரப்பில் அச்ச உணர்வொன்றை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.இந்த நிலையில்தான் கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒவ்வொரு நகர்வும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உள்ளடக்கிய ஆட்சி அதிகார மாற்றமே இரு மாகாணங்களும் மீளிணைக்கப்படுவதற்கான முதற்படி என்று கருதப்படுகின்றது. தற்போதைய சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (இரண்டு போனஸ் உட்பட) பதினான்கு ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களையும் மற்றும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஆசனத்தையும் பெற்று ஆட்சிப் பக்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதினொன்று, ஐக்கிய தேசியக் கட்சி நான்கு என ஆசனங்களைப் பெற்று எதிர்த்தரப்பிலும் அமர்ந்துள்ளன. மொத்தமுள்ள முப்பத்தேழில் பதினைந்து ஆசனங்கள் (141), (114) இரு பக்கங்களுக்கும் சமமாகச் செல்ல முஸ்லிம் காங்கிரஸ் ஏழு உறுப்பினர்களுடன் கிழக்கின் ஆட்சி மாற்றத்துக்கான திறவுகோலை தன்வசம் வைத்துக் கொண்டுள்ளது.

தேர்தல் முடிந்த கையோடு முதலமைச்சர் மற்றும் வேண்டிய அளவு அமைச்சுப் பதவிகள் தருவதாக உறுதியளித்து தம்மோடு சேர்ந்து ஆட்சியமைக்குமாறு தமிழர் தரப்பினால் முஸ்லிம் காங்கிரஸ் அழைக்கப்பட்ட போதும், அதனை மறுத்து இரண்டு அமைச்சுப்பதவிகளை மாத்திரமே பெற்று அரசாங்கத்துடன் சேர்ந்து ஆட்சியமைத்தது. இவ்வாறு அரசாங்கத்துடன் சேர்ந்து ஆட்சியமைப்புக்குத் துணை போனதன் பின்னணியில் பல்வேறு நிபந்தனைகளும் முன்வைப்புகளும் இருந்திருக்கக்கூடும். எனினும், ஆட்சி அமைந்ததன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது எதிர்பார்ப்புகள் எதனையும் கிழக்கு மாகாணசபையில் அடைந்து கொள்ள முடியாத ஆதங்கத்தில் இருந்து வருவதனையும் அதன் பிரதிபலிப்புகளையும் அண்மைக்கால நடவடிக்கைகள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன. பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தில் மாற்ற மேற்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட எத்தனங்களுக்கு எதிராக பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை வலுப்படுத்தவென பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்ற எடுத்த முயற்சிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இணைந்த வடகிழக்கு என்னும் போது நினைவுக்கு வரும் வேறுசில விடயங்களையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. தலைவர் அஷ்ரஃபின் காலத்தில் முஸ்லிம் சுயாட்சி அலகொன்றுக்கான தேடல் இடம்பெற்று வந்தது. முஸ்லிம் மாகாணசபை என்ற கோசம் எழுப்பப்பட்டது. 2012இல் முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரத்தில் இருப்பார்கள் என்று அஷ்ரஃப் அக்காலத்தில் முன்மொழிந்த வாய்மொழிகள் கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் பிரசாரச் சுவரொட்டிகளாக வெளிவந்தன. முஸ்லிம்கள் சுயாட்சியொன்றைப் பெறுவதாயிருந்தால் கிழக்கில் மட்டுமே அது சாத்தியம் என்று காங்கிரஸின் மூத்த தலைவர்கள் நம்பினார்கள். வடக்குடன் கிழக்கு இணைக்கப்படும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலகப் பிரிவுகளை ஒன்றிணைத்து சப்பாத்து நாடா முறையிலான நிர்வாக அலகொன்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் அஷ்ரஃப் காலத்தில் பேசப்பட்ட முஸ்லிம் சுயாட்சி அலகு இன்று முஸ்லிம் அரசியலுக்குள் தேடுவாரற்றுக் கிடக்கின்றது. பதிலாக, கிழக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தை சுழற்சி முறையில் பகிர்வதற்கான ஒப்பந்தங்கள் பற்றியே பேசப்படுகின்றது.

தற்போதைய கிழக்கு மாகாணசபை ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், இன்னும் ஒருவருடத்தின் பின்னர் ஆட்சியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது முஸ்லிம் காங்கிரஸ். ஆனால் வடக்கை இழந்து தலையில் கவலையோடு கை வைத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், கிழக்கில் தனது பிடியை இழப்பதற்குத் துணியமாட்டாது.

***(33ஆம் பக்கம் பார்க்க)***

# மாலைதீவு; வரவேற்கப்பட வேண்டிய மனமாற்றம்



பிராந்திய அரசியல்

என்.எஸ்.

இரண்டு முறை திகதி மாற்றப்பட்ட மாலைதீவு ஜனாதிபதித் தேர்தல், கடைசியாக எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி நடைபெறும் என்று இப்போது சிறிது நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. முன்னர் இரண்டு முறைகள், தேர்தல் ஆணையத்தின் வழிமுறைகளில் குற்றம் கண்டு, நீதிமன்றம் சென்ற இரண்டு வேட்பாளர்களும், அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளும் கூட, ஜனாதிபதித் தேர்தலை அநியாயத்திற்கும் தள்ளிப்போடுவது தவறு என்று எண்ணத் தொடங்கியுள்ளனர் என்பதே தற்போதைய நம்பிக்கைக்கு காரணம் எனலாம்.

அந்த விதத்தில் தொடர்ந்து வரும் பிரச்சினைக்குள்ளேயே அதற்கான விடையும் தொக்கி இருந்தது என்பதே உண்மை. நவம்பர் 11ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்ட பின்னர், களத்தில் இருந்த வேட்பாளர்களிடமும் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி முகமது வாஹீத் ஹஸன் மானிக், தனது பதவி முடிந்த காலத்திற்குப் பின்னர் தான் ஒருநாள் கூட பதவியில் தொடர விரும்பவில்லை என்ற தனது மனநிலையை விளக்கிய பிறகு, அரசியல் தலைவர்களான தாங்கள் சண்டையிட்டுக்கொண்டே இருந்தால், எங்கே 'இராணுவ ஆட்சி' வந்து விடுமோ என்ற அச்சம் கூட, வேட்பாளர்களின் மனமாற்றத்திற்கான காரணமாக இருக்கலாம்.

கடந்த செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற முதல் சுற்றுத் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதியும் மாலைதீவு ஜனநாயக கட்சியின் வேட்பாளருமான முஹமது நஷீத் 45.45 சதவீத வாக்குகள் பெற்று முன்னணியில் இருந்தார். ஐம்பது சதவீத வாக்குகள் பெற்றால் மட்டுமே ஜனாதிபதியாக முடியும் என்ற காரணத்தால், நஷீதுக்கும் முதலாவது சுற்றில் 25.35 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாவது வந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கயுமின் சகோதரரான அப்துல்லா யாமினுக்கும் இடையிலான இரண்டாவது சுற்று வாக்களிப்பு கடந்த செப்டம்பர் 27ஆம் திகதியே நடைபெற்று அடுத்த ஜனாதிபதி எப்போதோ தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் நடந்ததே வேறு.

முதல் சுற்றில் மூன்றாவதாக வந்த குடியரசுக் கட்சி வேட்பாளர் காசீம் இப்ராஹீம் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில், மாலைதீவு உச்ச நீதிமன்றம் முதல் சுற்று தேர்தலை செல்லாது என்று அறிவித்தது. முதல் சுற்று வாக்களிப்பில் அதிக அளவில் 'கள்ள வாக்குகள்' அளிக்கப்பட்டன என்றும், தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சேர்ப்பு முறையில் குறைபாடுகள் இருந்தன என்றும் ஏழு நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகள் முடிவு செய்தனர். நீதிமன்றம் முன்வைத்த பதினாறு அறிவுரைகளின் படியே புதிய தேர்தல் நடைபெற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத்தின் அறிவுரையை ஏற்று முடிவு செய்யப்பட்ட மறுதேர்தலும் கடந்த அக்டோபர் மாதம் 19ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால், அன்று தேர்தலுக்கு சரியாக பாதுகாப்பு வழங்க முடியாத நிலை உள்ளது என்று காவல்துறை அறிவித்ததைத் தொடர்ந்து வாக்களிப்பு அன்றும் நடைபெறவில்லை. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து ஜனாதிபதித் தேர்தலுக்கான முதல் சுற்று வாக்களிப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதியும், இரண்டாவது மற்றும் இறுதிச் சுற்று, நவம்பர் 16ஆம் திகதியும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. அதன் காரணமாகவே, எலியும்-பூனையுமாக

***(18ஆம் பக்கம் பார்க்க)***

# ஒட்டுக் கேட்கும்

ராகுல்ஜி

**பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளையும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய திட்டங்களையும் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்ட ஒட்டுக் கேட்டல்களும் இரகசிய வேலைகளும் இறுதியில் மக்களின் அந்தரங்க வாழ்க்கைக்குள்ளும் நாடுகளின் உத்தியோகபூர்வ இரகசியங்களுக்குள்ளும் ஊடுருவல் செய்வதற்கான செயற்பாடுகளாக மாறியிருக்கின்றன**



சர்வதேச அரசியல்

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம் ( US National Security Agancy) உலகத் தலைவர்களின் தொலைபேசிகளை, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நட்பு நாடுகளின் தலைவர்களின் தொலைபேசிகளை யும் கூட, கிரமமாக ஒட்டுக்கேட்டுவந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் உலகம் பூராவும் அமெரிக்காவினால் செய்யப்படுகின்ற இலத்திரனியல் உளவு வேலைகளின் (Electronic Spying) விசாலத்தை வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கின்றன.

இறுதியாக வெளியான தகவல்களின் படி ஜேர்மன் அதிபர் அஞ்செலா மெர்கெல்லின் தொலைபேசிகளும் பிரெஞ்சு ஜனாதிபதி பிராங்சுவா ஹோலண்டேயின் உரையாடல்களும் ஒட்டுக்கேட்கப்பட்டிருக்கின்றன. ஜேர்மனியில் மெர்கெல் ஆட்சியதிகாரத்துக்கு வருவதற்கு முன்னதாகவே, அதாவது எதிர்க்கட்சியில் இருந்தபோது 2002ஆம் ஆண்டில் இருந்தே அவரின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டு வந்திருக்கின்றனவாம். கடந்த ஜூனில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஜேர்மனிக்கு விஜயம் செய்த நாட்கள் வரை இந்த ஒட்டுக் கேட்பு தொடர்ந்திருக்கிறது.

ஜேர்மன் அரசாங்கத்தை உளவு பார்ப்பதற்காக பேர்லின் நகரில்

# ஒபாமா

**ஜேர்மன் அதிபர் அஞ்செலா மெர்கெலின் தொலைபேசி அழைப்புகள் அவர் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பிருந்தே அதாவது எதிர்க்கட்சியிலிருந்த வேளையிலிருந்து 2000ஆம் ஆண்டு முதல் ஒட்டுக் கேட்கப்பட்டு வந்திருக்கின்றன**



உள்ள அமெரிக்கத் தூதரகத்தை தேசிய பாதுகாப்பு நிறுவனம் பயன்படுத்தியிருப்பதாகவும் உலகம் பூராவும் அத்தகைய 80க்கும் அதிகமான கண்காணிப்பு மையங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் அண்மையில் அம்பலப்படுத்தப்பட்ட புலனாய்வு ஆவணங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

தொடர்பாடல்களை இடைமறித்து ஒட்டுக்கேட்பதென்பது சர்வதேச உளவுபார்த்தலில் உண்மையில் நடைபெறுகின்ற காரியம்தான். நாடுகள் இதைச் செய்வதற்கு பல்வேறு வழிகளை நாடுகின்றன என்பது சகலருக்கும் தெரிந்தவிடயமே. அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனம் (சி.ஐ.ஏ) உட்பட உளவு, விசாரணை அமைப்புகள் செய்துவரும் இரகசிய வேலைகளை வெளியுலகிற்கு அம்பலப்படுத்தியவரான சி.ஐ.ஏ.யின் முன்னாள் தொழில்நுட்பப் பணியாளர் எட்வேர்ட் சினோ டனால் வெளியிடப்பட்ட தகவல்களுக்குப் பிறகு மாத்திரமே எந்தளவு விசாலத்துக்கு இந்த ஒட்டுக் கேட்கும் கைங்கரியங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன என்பது வெளிச்சத்துக்கு வந்தது. உலகில் பரிமாறப்படுகின்ற இணையத்தகவல்கள் (உத்தியோகபூர்வமானவையும் ஏனையவையும்) அமெரிக்காவினால் இரகசியமாகப் பெறப்படுகின்றன என்ற ஆரம்பத் தகவல்கள் வெளியானதும் பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. இப்போது உலகத் தலைவர்களின் தொலைபேசிகளும் ஒட்டுக்கேட்கப்பட்டு வந்திருக்கின்றன என்ற விபரங்கள் அம்பலத்துக்கு வந்ததும் நிலைவரம் மோசமானதாகிப் போயிருக்கிறது.

## ஜேர்மனி, பிரான்ஸ் ஆட்சேபனை

ஜேர்மன் அதிபர் மெர்கெலும் பிரெஞ்சு ஜனாதிபதி ஹோலன்டேயும் இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ஒபாமாவுடன் தொடர்பு கொண்டு பேசி தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தார்கள். நடந்த காரியங்களுக்காக ஒபாமா வருந்திய போதிலும், தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றே கூறினார். ஆனால், இப்போது அவருக்கும் இந்த ஒட்டுக் கேட்டல்கள் எல்லாம் தெரிந்தே இருந்தன என்று அறிய முடிகிறது. அத்துடன், மெர்கெலின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்குமாறு ஒபாமா உத்தரவு பிறப்பித்ததாகவும் கூட கூறப்படுகிறது. இதையடுத்து அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவில் உள்ள அதன் நேச நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் கசப்பு நிலை தோன்றியிருக்கிறது. பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளையும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய திட்டங்களையும் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்ட ஒட்டுக் கேட்டல்களும் இரகசிய வேலைகளும் இறுதியில் மக்களின் அந்தரங்க வாழ்க்கைக்குள்ளும்

நாடுகளின் உத்தியோகபூர்வ இரகசியங்களுக்குள்ளும் ஊடுருவல் செய்வதற்கான நன்கு திட்டமிட்ட வகையிலான செயற்பாடுகளாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. நேசநாடுகளின் தலைவர்களின் தொடர்பாடல்கள் உளவுபார்க்கப்படுவதை நிறுத்தியிருப்பதாக அவர்களுக்கு ஒபாமா உறுதியளித்திருக்கின்ற போதிலும், அதை அவர்கள் முழுமையாக நம்பப்போவதில்லை.

அமெரிக்காவுக்கும் ஜேர்மனிக்கும் இடையே ஏற்பட்ட பதற்ற நிலையைப் போக்குவதற்காக அக்டோபர் இறுதியில் இரு நாடுகளினதும் உயர் மட்ட அதிகாரிகள் வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுசான் றைஸுடனும் ஒபாமாவின் தாயகப் பாதுகாப்பு ஆலோசகர் லிசா மொனா கோவுடனும் ஜேர்மன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கிறிஸ்தோபர் ஹியூஸ் ஜென்னும் ஜேர்மன் சான்சலறி புலனாய்வு ஒருங்கிணைப்பாளர் கன்ரெர் ஹீய்ஸும் வெள்ளைமாளிகையில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

## ஒபாமாவின் அங்கீகாரம்

ரஷ்யாவில் அஞ்ஞாதவாசம் செய்யும் எட்வேர்ட் சினோடனால் அம்பலப்படுத்தப்பட்ட அந்தரங்க ஆவணங்களை மேற்கோள்காட்டி ஜேர்மன் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளின் படி ஜேர்மன் அதிபரின் கைத்தொலைபேசியை ஒட்டுக்கேட்பது குறித்து தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் கீத் அலெக்சாண்டர் முறைப்படி ஒபாமாவுக்கு அறிவித்ததாகவும் இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதம் கிடைத்ததாகவும் தெரிய வருகிறது. 35 நாடுகளின் தலைவர்களை இவ்வாறாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் உளவு பார்த்திருக்கிறது என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

வாட்டர் கேட் ஊழல் விவகாரமும் அதன் தாக்கங்களும் அமெரிக்காவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. அந்த விவகாரத்தினால் அபகீர்த்திக்குள்ளான ஜனாதிபதி றிச்சர்ட் நிக்சன் காங்கிரஸில் அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டு பதவி நீக்கப்படுவதை விரும்பாமல் இராஜினாமா செய்தார். ஆனால், ஒபாமாவின் இந்த ஒட்டுக்கேட்டல் ஊழல் விவகாரம் (சில ஆங்கில ஊடகங்கள் இதை Snoop-gate என்று வர்ணிக்கின்றன) அமெரிக்காவின் சர்வதேச பிம்பத்தை சீரமைக்க முடியாத அளவுக்கு சேதப்படுத்தியிருக்கின்றது. அமெரிக்காவின் நேசநாடுகள் சீற்றமடைந்திருக்கின்றன.

மத்திய கிழக்கு நெருக்கடி தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி அண்மையில் பிரான்ஸுக்கும் இத்தாலிக்கும் சென்ற வேளையில் ஒட்டுக் கேட்டல் விவகாரம் தொடர்பில் கடுமையாக வசைமாரிகளைக் கேட்க வேண்டியதாயிற்று. இனிமேல் உலகின் சகல பாகங்களிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் (அவை உளவு வேலைகளில் ஈடுபடுகின்றனவோ இல்லையோ) கடுமையான சந்தேகத்துடனேயே நோக்கப்படக்கூடிய நிலை தோன்றியிருக்கிறது. அமெரிக்க இராஜதந்திரிகளை படுமோசமான பேர்வழிகளாகக் காண்பிப்பதற்கும் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்துவதை நியாயப்படுத்துவதற்கும் பயங்கரவாதக் குழுக்கள் இந்த ஒட்டுக் கேட்டல் விவகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய ஆபத்தும் தோன்றியிருக்கிறது. கடந்த வருடம் லிபியாவில் அமெரிக்கத் தூதுவர் கிறிஸ்தோபர் ஸ்ரீவன்ஸ் வன்முறையினால் மரணத்தைத் தழுவிய சம்பவத்தை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.

## உளவுக்கு வக்காலத்து

இதேவேளை, நேச நாடுகளின் தலைவர்களின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கும் கைங்கரியத்தை நியாயப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அமெரிக்க புலனாய்வு சமூகத்தின் செயற்பாடுகளுக்கு வக்காலத்து வாங்குபவர்களில் முக்கியமான ஒருவர் காங்கிரஸின் சனப்பிரதிநிதிகள் சபையின் புலனாய்வு கமிட்டியின் தலைவரான மைக் றொஜர்ஸ் (குடியரசுக் கட்சிக்காரர்). தேசிய பாதுகாப்பு நிறுவனத்



பேர்லினில் உள்ள அமெரிக்கத் தூதரகம்

தின் நடவடிக்கைகளை நியாயப் படுத்தும் இவர் ஐரோப்பியர்கள் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்பது குறித்து முறைப்பாடு தெரிவிக்கக் கூடாது என்றும் பதிலாக கைதட்டி வரவேற்று கொண்டாட வேண்டு மென் றும் கூறியிருக்கிறார். பயங்கர வாதிகளை இலக்குவைத்து தேசிய பாதுகாப்பு நிறுவனம் மேற்கொள்கி ன்ற உளவு வேலைகளுக்காக அமெ ரிக்காவை அதன் நேச நாடுகள் பாராட்டவேண்டுமென்று றொஜர்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

றொஜர்ஸ் தான் உண்மையில் என்ன பேசுகிறார் என்பதைப் புரியாத வராக இருக்கிறார் என்று தான் கூற வேண்டும். ஏனென்றால், பயங்கரவா திகளின் தொடர்பாடல்களை ஒட்டுக் கேட்பதல்ல இங்கு பிரச்சினை. ஐரோப்பாவிலும் உலகின் வேறு பிராந்தியங்களிலும் அரசாங்கத்தலை வர்களின் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பதற்கு அமெரிக்கத்தூதரகங்க ளில் கண்காணிப்பு மையங்களை அமைப்பதே பிரச்சினையாகும். ஒபாமா கண்டவுடன் கட்டியணைக் கின்ற தலைவர்களின் தொலைபேசி களே தேசிய பாதுகாப்பு நிறுவனத்தி னால் ஒட்டுக் கேட்கப்பட்டிருப்பதை என்னவென்று வர்ணிப்பது? இதை பயங்கரவாதிகளின் தொடர்பாடல் களை இடைமறித்துக் கேட்கின்ற செயற்பாடுகளுடன் எவ்வாறு ஒப்பி டமுடியும்? பயங்கரவாதிகளின் தொடர்பாடல்களை ஒட்டுக் கேட் கும் நடவடிக்கைகளின் ஒரு அங்க மாக ஜனாதிபதி ஒபாமாவின் கைத் தொலைபேசியை எந்தவொரு வெளி நாட்டு புலனாய்வுச் சேவையும் ஒட் டுக்கேட்டிருந்தால் அதை வாஷிங் டன் பொறுத்துக் கொள்ளுமா?

தனது தொடர்பாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதை ஆட்சேபித்து பிரேசில் ஜனாதிபதி டில்மா ரோசெவ் அமெரிக்காவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை ரத்துச் செய்திருக்கி றார். உளவு பார்த்தவிவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து மெக்சிக்கோ, கொலம்பியா மற்றும் சிலி போன்ற பல தென்னமெரிக்க நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கடிக் குள்ளாகியிருக்கின்றன.

### மன்மோகனுக்கு மின்னஞ்சல் இல்லை.

இந்தியா கூட இத்தகைய உளவு பார்த்தல்களினால் பாதிக்கப்பட்டிருக் கிறது. ஆனால், அமெரிக்காவை இது விடயத்தில் கண்டனம் செய்வதில் சர்வதேச சமூகத்துடன் இந்தியா இணைந்து கொள்ளவில்லை. எட் வேர்ட் சினோடனால் அம்பலப்படுத் தப்பட்ட முன்னையை தகவல்களில் இந்தியா சம்பந்தப்பட்ட பெருவாரி யான விடயங்கள் அடங்கியிருந்த போதிலும், அமெரிக்காவுக்கும் இந்தி யாவுக்கும் இடையே வளர்ந்து வரும் கேந்திர முக்கியத்துவ தோழமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதை மனதிற்கொண்டே மன்மோகன்சிங் அரசாங்கம் அதன் பிரதிபலிப்பை வெளியிட்டிருந்தது. மன்மோகன் சிங்கின் அலுவலகம் உளவு பார்க்கப் பட்டிருந்தால் அதனால் கவலைப் பட எதுவுமில்லை. ஏனென்றால் அவர் கைத்தொலைபேசியைப் பாவி ப்பதில்லை. அத்துடன் அவருக்கு மின்னஞ்சல் முகவரியொன்று இல்லை என்பதே அவரின் அலுவல கத்தின் பதிலாக இருந்தது.

தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பது குறித்து ஐரோப்பியர்கள் முறைப் பாடு தெரிவிக்கக் கூடாது. பதிலாக கைதட்டி வரவேற்றுக் கொண்டாட வேண்டும் பயங்கரவாதிகளை இலக்கு வைத்து தேசிய பாதுகாப்பு நிறுவனம் செய்கின்ற உளவு வேளைகளுக்காக அமெ ரிக்காவை அதன் நேச நாடுகள் பாராட்ட வேண் டும் என்று கூறுகிறார் அமெரிக்க காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையின் புலனாய்வு கமிட்டித்தலைவர் மைக் றொஜர்ஸ்




### இணைய ஆளுகை

அமெரிக்காவின் இந்த ஒட்டுக் கேட்டல் செயற்பாடுகள் தொடர்பில் சில நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையை அணுகத் திட்டமிடுகின்றன. பிரேசில் ஜனாபதி வேறு நாடுகளு டன் சேர்ந்து ஐ.நா.பொதுச்சபையில் தீர்மானமொன்றைக் கொண்டுவரு வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அதனால் உருப்படியான தீர்வு கிட்டுமா என்ற கேள்வி இயல் பாகவே எழுகிறது. Internet Corporation for Assigned Names and Numbers (ICANN) என்ற அமைப்பின் உதவியுடன் இணைய ஆளுகை (Internet Governance) தொடர்பில் அடுத்த வருடம் உச்சி மகாநாடொன்றை நடத்த பிரேசில் முன்வந்திருக்கிறது. இணைய வலை யமைப்பு மீதான அமெரிக்க கட்டுப் பாட்டைக் குறைப்பதே இந்த மகா நாட்டு ஏற்பாட்டின் பிரதான நோக்கமாகும்.

இந்திய அரசியல்



# பிரதமர் மோடி? கார்பொரேட்களின் கனவு பலிக்குமா?



அ.மார்க்ஸ்

தினசரி காலை அரை மணிநேரம் ஐ.ஐ.டி மாணவர்களின் கணக்குகளை இன்டெர்நெட்டில் போட்டுப் பயிற்சி மேற்கொள்கிறார் எனச் சமீபத்தில் ஒரு பத்திரிகை மோடி பற்றி எழுதியிருந்தது. மோடியைச் சகல கலா வல்லவராகச் சித்திரிப்பதில் கார்பொரேட் மீடியாக்கள் போட்டி போடுகின்றன. ரோபோவைப் போலச் செயற்பட்டு மோடி 15,000 பேரை உத்தரகான்ட் வெள்ளத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டு வந்தார் என்கிற தலைப்பில் டைம்ஸ் ஒவ் இந்தியா நாளிதழ் (ஜூன் 22, 2013) விட்ட கதை அடுத்த சில நாட்களில் அம்பலப்பட்டது நமக்குத் தெரியும். 80 டயோடா கார்கள், நான்கு போயிங்களைத் தயாராக நிறுத்தி வைத்து தன் மாநில மக்களைக் கரை சேர்த்ததாகவும் அந்த நாளிதழ் கூறியிருந்தது.

**குஜராத்தின் வளர்ச்சிக்கதை எத்தனை அபத்தம் என்பது இப்போது பெரிய அளவில் அம்பலமாகியுள்ளது. வளர்ச்சி என்பதற்கான எந்தவொரு அளவு கோளிலும் குஜராத் வேறெந்த இந்திய மாநிலங்களைக் காட்டிலும் முதலிடத்திலோ, ஏன் முன்வரிசையில்கூட இல்லை. கார்பொரேட்டுகளே தங்கள் தொழில் முதலீடுகளுக்கு குஜராத்தை தெரிவு செய்வதில்லை**

மோடிக்குக் கூட்டம் சேர்வது உண்மைதான். தேர்தல் காலங்களில் எல்லோருக்கும்தான் கூட்டம் சேர்கின்றது. எனினும், மோடிக்குத் திரளும் கூட்டங்கள் பிரமாதப்படுத்தப்படுகின்றன. சென்ற மாதம் திருச்சியில் நடைபெற்ற பா.ஜ.க.வின் இளந்தாமரை மாநாட்டிற்குத் திரண்ட கூட்டம் குறித்தும் இப்படித்தான் இங்குள்ள இதழ்கள் எழுதின. அதற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது, தமிழகம் முழுவதும் எத்தனை ஆயிரம் ஃப்லெக்ஸ் போர்ட் விளம்பரங்கள் வைக்கப்பட்டன என்பதை நாம் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். இந்தியன் எக்ஸ்பிரஸ் குழும இதழ்கள் பா.ஜ.க.வின் கட்சி இதழ்களாகவே செயல்படுகின்றன. தினத்தந்தி மற்றும் புதிய தலைமுறை ஊடகங்களும் இன்று மோடியைத் தூக்கிப் பிடிக்கின்றன. திருச்சியில் கூட்டப்பட்ட மக்களில் புதிய தலைமுறை பாரி வேந்தரின் ஆட்கள், அதாவது அவரது சாதிக்காரர்கள் அதிக அளவில் இருந்துள்ளனர். பாரி வேந்தர் எனப்படும் பச்சமுத்து டில்லி சென்று பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்சிங்கைச் சந்தித்து வந்துள்ளார். தனது கட்சிக்கும் பா.ஜ.க.வுக்கும் கொள்கையில் எந்த வேறுபாடும் இல்லை எனத் தெண்டனிட்டுள்ளார். புதிய தலைமுறையின் புதிய சனல் ஒன்றை மோடி தொடங்கி வைக்கிறார்.

அரசு நிதியைப் பயன்படுத்தி நவீன தொழில்நுட்பங்களின் உதவியோடு, மோடி தன் பிம்பத்தை மக்கள் மத்தியில் ஊதிப் பெருக்கி வரும் கதை எல்லோரும் அறிந்ததே. இன்று இந்தப் பணியில் கார்பொரேட்களும் சேர்ந்துள்ளன. துணிந்து கொள்கை முடிவுகளை எடுக்கும் இரும்பு மனிதர் என்றும், வளர்ச்சியின் நாயகன் என்றும் அவரை முன்னிறுத்துகின்றன. MODIfying India என்றும் Modi for PM என்றும் முழக்கங்கள் உருவாக்குகின்றன. குஜராத் பாணியில் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று வீழ்ந்து விட்ட ரூபாய் மதிப்பை உயர்த்துவது, இன்னும் வானத்தை வில்லாக வளைப்பது உட்பட ஏகப்பட்ட சாகசங்களைச் செய்யப்போவதாகப் படங் காட்டுகின்றன.

## எந்த அளவிற்கு இதெல்லாம் உண்மை?

ஒரு வகையில் மோடி இரும்பு மனிதர்தான். தானே முன்னின்று தன் அமைச்சர்களையும் விசுவாச அதிகாரிகளையும் தளபதிகளாக்கி 2000 முஸ்லிம்களைக் கொன்றும் இரண்டு இலட்சம் பேர்களை இரண்டே நாட்களில் அகதிகளாக்கிச் சாதனை புரிவதற்கு எத்தனை இரும்பு இதயம் வேண்டும். இன்றுவரை அதற்காக வருத்தம் ஏதும் தெரிவிக்காததோடு இவ்வாறு கொல்லப்பட்ட முஸ்லிம்களை தனது காரில் அடிபட்டுச் சாகும் நாய்க்குட்டிகள் எனச் சொல்வதென்பது சாதாரண மனிதர்களால் முடிகிற காரியமா? ஆனால், இளைஞர்கள் இந்த நிகழ்வைக் கடந்துபோன ஒரு பழைய வரலாறாக மறக்கத் தொடங்கி விட்டதாக புதிய தலைமுறை இதழாசிரியர் மாலன் அவுட்லுக் இதழுக்குப் பேட்டி அளிக்கிறார்.

குஜராத்தின் வளர்ச்சிக்கதை எத்தனை அபத்தம் என்பது இப்போது பெரிய அளவில் அம்பலமாகியுள்ளது. வளர்ச்சி என்பதற்கான எந்த ஒரு அளவுகோலிலும் குஜராத் வேறெந்த இந்திய மாநிலங்களைக் காட்டிலும் முதலிடத்திலோ, ஏன் முன் வரிசையிலோ கூட இல்லை. கார்பொரேட்களே தங்கள் தொழில் முதலீடுகளுக்குக் குஜராத்தைத் தேர்வு செய்வதில்லை. மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம் முதலான மாநிலங்களில்தான் வெளிநாட்டு முதலீடுகள் (FDI) குவிகின்றன. மின்பற்றாக்குறையே இல்லாத குஜராத்தைக் காட்டிலும், இந்திய மாநிலங்கள் 15இல் அதிக வீடுகள் மின் வசதி பெற்றுள்ளன. தமிழகம், ஹரியானா, பஞ்சாப், கேரளம் எல்லாம்தான் முன்னணியில் உள்ளன.

ஊழல் இல்லாத தூய திறமையான நிர்வாகம் நடப்பதாகச் சொல்லப்படும் குஜராத்தில் விதிகள் மீறப்பட்டுக் கார்பொரேட்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டதைக் குறைந்தபட்சம் இருமுறை சி.ஏ.ஜி (CAG) அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. 2011 ஆம் ஆண்டு மனித வளர்ச்சி அறிக்கையிலும் குஜராத் 11ஆவது இடத்தில்தான் உள்ளது. தமிழகம், ஹரியானா, பஞ்சாப், கேரளம் எல்லாம் குஜராத்தைக் காட்டிலும் வளர்ச்சி நிலையிலுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் குஜராத்திற்கு நான்காம் இடம்தான். இணையத்தில் இது குறித்து இன்னும் ஏராளமான தகவல்கள் கிடைக்கின்றன. சுருக்கம் கருதித் தவிர்க்கிறேன்.

இந்த விடயம் அம்பலப்பட்டுவிட்டதால் பா.ஜ.க.வினர் இப்போது இது குறித்து அதிகம் வாய் திறப்பதில்லை. மூன்று முறை தொடர்ந்து முதலமைச்சராக இருப்பதை ஒரு சாதனையாகச் சொல்லிப் பார்க்கின்றனர். இன்னும் எத்தனையோ பேர் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர். சமகாலச் சாட்சிகளாக நவீன் பட்நாட்யக், தாருண்

கோகோய், ஷீலா தீட்சித், மானிக் சர்க்கார் எனப் பலர் உள்ளனர்.

## பின் ஏன் கார்பொரேட்கள் மோடியைக் கதாநாயகனாக்குகின்றன?

2008 பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இன்னும் கார்பொரேட் உலகம் மீளவில்லை. பெரிய அளவில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம் திறந்துவிடப்பட்ட போதிலும் ஐரோப்பிய நாடுகளைப்போல அவ்வளவு முழுமையாகவும் எளிதாகவும் இங்கே அது நடந்துவிடவில்லை. இங்கு வேரூன்றி இருந்த இடதுசாரிச் சிந்தனைகள், நேரு காலத்திய ஜனநாயக சோசலிசச் சொல்லாடல்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தாராளமய முயற்சிகளுக்குத் தடையாக இருந்தன, இருக்கின்றன. பல ஆண்டுகளாக மன்மோகன்சிங் உள்ளிட்டோர் தலைகீழாக நின்றும் சில்லறை வணிகத்தில் இன்னும் முழுமையாக அந்நிய முதலீட்டைக் கொண்டு வந்துவிட இயலவில்லை. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், அணு உலைகள் ஆகியவற்றை அமைப்பதிலும் பல எதிர்ப்புகள் மத்தியில்தான் இவற்றைச் செய்ய வேண்டியுள்ளது.

வெளிப்படையாக இதுதான் எங்கள் திட்டம் எனச் சொல்லிக்களத்தில் இறங்கக் காங்கிரஸுக்குக் கொஞ்சம் வெட்கம் இருக்கிறது. பல காரியங்களை அது திருட்டுத் தனமாகவே செய்து முடிக்கிறது. உள்நாட்டுப் போரின்போது இலங்கை அரசுக்கு அது அளித்த உதவிகள் ஒரு எடுத்துக் காட்டு. சந்தையைத் திறந்து விடுதல், கார்பொரேட்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்தல் எல்லாவற்றிலும் இந்தத் திருட்டுத்தனந்தான்.

தமது கனிவளக் கொள்ளைகளுக்கும், சுற்றுச்சூழல் அழிப்பிற்கும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் உருவாகும் எதிர்ப்புகள் கார்பொரேட்களுக்கு எரிச்சலை உண்டாக்கியுள்ளன. காங்கிரஸ் இரும்புக்கரம் கொண்டு இவற்றை அடக்குவதில் தயக்கம் காட்டுவதாகவே கார்பொரேட் உலகம் நம்புகிறது. வளர்ச்சியைச் சாத்தியப் படுத்தாத ஜனநாயகம் இந்தியாவிற்குத் தேவையில்லை என மின்ட் இதழ் தலையங்கம் எழுதியது (ஏப்ரல் 1, 2013) குறிப்பிடத்தக்கது.

இன்றைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தாம் மீள்வதற்கு அனைத்து அம்சங்களிலும் தமக்குச் சாதகமான அரசு வேண்டும் என கார்பொரேட் உலகம் விரும்புகிறது. போராட்டங்களைக் கடுமையாக ஒடுக்குகிற, துணிந்து முடிவெடுக்கிற, காவல்துறைக்கு இன்னும் அதிகாரமுள்ள ஒரு அரசு 2014இல் அமைய வேண்டும் என்கிற வெறிபிடித்து ஆட்டுவதன் விளைவுதான் கார்பொரேட் உலகத்தின் இந்த மோடிக் கூத்து.

## கார்பொரேட்களின் மோடிக் கனவு நிறைவேறுமா?

நிறைவேற வாய்ப்பில்லை. முதலாளிகள் காசைக் கொட்டி வளர்த்து நிறுத்தும் பிம்பம் என்பது ஓரளவுக்குத்தான் அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றும். மற்றப்படி கார்பொரேட்கள் பெரிய அரசியல் சக்திகள் கிடையாது. அவை மக்களால் வெறுக்கப்படுபவை. முதலாளிகளின் புத்திசாலித்தனங்களைப் பார்த்து நாம் மிரண்டுவிடத் தேவையில்லை.

மோடியைப் பூதாகரமாகப் பிம்பப்படுத்துவதால் கிடைக்கப்போகும் அரசியல் லாபத்தைப் போலவே குஜராத் 2002 இல் மோடி மீது சுமத்தியுள்ள கறையின் விளைவாக ஏற்படப் போகும் அரசியல் இழப்பையும் அவர்கள் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். மோடி இந்திய அளவில் சிறுபான்மை மதத்தினரால் மட்டுமன்றி ஜனநாயக உணர்வுடையோராலும் வெறுக்கப்படும் பிறவி. சிறுபான்மையினர் குறிப்பிட்ட தொகுதிகளில் செறிந்து நிற்கும் கோவா, உத்தர பிரதேசம், பிஹார் போன்ற மாநிலங்களில் சிறுபான்மை வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் பா.ஜ.க.விற்கு எதிராக விழும்.

இதை ஈடுகட்ட பா.ஜ.க.விற்குள்ள ஒரே வழி உத்தரப்பிரதேசம் பிஹார் முதலான கங்கைச் சமவெளி ஓர மாநிலங்களில் இந்து வாக்குகளை 1990 களைப்போல முழுமையாகத் திரட்டி நிறுத்துவதுதான். ராம ஜென்ம பூமிப் பிரச்சினையை முன்வைத்து நடத்தப்பட்ட யாத்திரைகள், மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள், உச்சபட்சமாக மசூதி இடிப்பு ஆகியவை அன்று அதைச் செய்து காட்டின. வன்முறையின் பலன்களை பா.ஜ.க.வினர் அறுவடை செய்தனர்.

ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும், மேற்கு மத்திய இந்திய மாநிலங்களைப்போல பா.ஜ.க.விற்கு கங்கைச் சமவெளி ஓர மாநிலங்களில் நிரந்தர வேர்ப்பிடிப்பு கிடையாது. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளினூடாக இந்துக்களை ஓரணியில் திரட்டும் (polarisation) காலங்களில் மட்டுமே அவர்கள் இங்கு தேர்தல் பலன்களை அனுபவித்துள்ளனர். இதை மனதில் வைத்துத்தான் ஆர்.எஸ்.எஸ் மூளைகள் இன்று பெரிய தேர்தல் விற்பனராகவெல்லாம் இல்லாதபோதும், 2002 வன்முறையைச் சிறப்பாக மேற்கொண்டு முடித்த பெருமைக்குரிய அமித் ஷாவை உத்தரப்பிரதேசம் மாநிலத் தேர்தல் பிரசாரத் தலைமையாக அனுப்பி வைத்துள்ளன. அவர் அங்கு சென்று முசாபர்பூர் கலவரத்தை நிகழ்த்தி 50,000 முஸ்லிம்களை அகதிகளாக்கியதோடு, ஒரு குறிப்பிட்ட அளவு ஜாட் சாதியினரை ராஷ்ட்ரீய ஜனதா தளத்திலிருந்து பா.ஜ.க. பக்கம் இழுத்துள்ளார். சிறிய அளவுகளில் எண்பது கலவரங்கள் அங்கு சென்ற ஓராண்டில் நடந்துள்ளன.

அதேநேரத்தில் ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டலில் இந்துத்துவ சக்திகள் ராம ஜன்ம பூமி யாத்திரைகளை நடத்த இருமுறை முயன்று தோற்றுள்ளன. ஆக தொண்ணூறுகளைப்போல இந்து அடையாளத்தின் கீழ் உத்தரப் பிரதேசத்தில் ஒரு பெருந் திரட்டலை மேற்கொள்வதில் இம்முறை பா.ஜ.க.விற்குத் தோல்விதான். முசாபர்பூரில் அகிலேஷ் யாதவ் அரசு சரியாக நடந்து கொண்டிருந்தால் அந்தக்

கலவரமும் தடுக்கப்பட்டிருக்கும். பிஹாரைப் பொறுத்தமட்டில் நீண்ட காலத்திற்குப் பின் முதன்முறையாக இந்தத் தேர்தலைத்தான் அது நிதிஷ் குமாரின் உதவியின்றித் தனியாக எதிர்கொள்ளப்போகிறது.

காங்கிரஸுக்கும் பா.ஜ.க.விற்கும் உள்ள ஒரு வேறுபாட்டை நாம் மனங் கொள்ள வேண்டும். கடந்த முப்ப தாண்டுகளில் அது மிகப் பெரிய பின் னடைவுகளுக்கு உள்ளாகிய போதி லும், ஒப்பீட்டளவில் பா.ஜ.க. வைக் காட்டிலும் புவியியல் அடிப்படை யில் மட்டுமன்றி சாதி, வர்க்க அடிப்ப டையிலும் அது பரந்துபட்ட வேர்க ளுள்ள ஒரு கட்சி. பா.ஜ.க.வின் வேர்ப்பிடிப்பு சற்றுமுன் சொன்னது போல மேற்கு மத்திய இந்தியப் பரப் புகளிலும், உயர்சாதி மற்றும் நகர்ப் புற மத்தியதர வர்க்கத்திடமுந்தான். தலித், பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மத்தியில் அவர்கள் கடுமையாகச் செயற்பட்டபோதும் ஒரு நிரந்தரப் பிடிப்பை அவர்களி டம் பா.ஜ.க. ஏற்படுத்தியதில்லை. இம்முறை குஜராத்திலேயே பழங்கு டியினர் மத்தியில் பா.ஜ.க. தன் செல் வாக்கை இழந்து நிற்பதாக அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதுவரை நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க பெற்ற அதிக பட்ச வாக்கு 25.6 சதந்தான். காங்கி ரஸ் பெற்ற குறைந்த பட்ச வாக்கு 25.8 சதம் என்பது நினைவிற்குரி யது. எண்பதுகளுக்கு முன்புவரை (நெருக்கடிக் காலத்தை ஒட்டிய ஒரு சிறிய இடைவெளி தவிர்த்து) காங்கி ரஸ் சராசரியாக 40 சத வாக்குகள் பெற்று 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து வந்தது. அப்போ தெல்லாம் பா.ஜ.க.வின் மிக அதிக பட்ச வாக்கு வீதம் 7 முதல் 10 சதம் வரைதான் இருந்து வந்தது.

மாநிலக் கட்சிகள் தேசிய அரசிய லில் முக்கிய பங்கு வகிக்கும் நிலை 1990 களுக்குப் பின் ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 30 சத வாக்குகளை அவை பெறுகின்றன. காங்கிரஸும் பா.ஜ.க.வும் சேர்ந்து 50 சத வாக்குக ளைப் பெறுகின்றன. மீதியுள்ளவை இடது மற்றும் உதிரிக் கட்சிகளால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

மொத்தம் 50 சத வாக்குகளைப் பெறும் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. வில் எது 30சதத்திற்கு மேல் பெறுகி றதோ, அது மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து மத்தியில் ஆட்சி யைப் பிடிப்பது என்பதுதான் இன் றைய யதார்த்தம். சென்ற தேர்தலில் பா.ஜ.க. பெற்ற வாக்குகள் வெறும் 18.8 சதம். எனவே அது இம்முறை கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானால், மேலும் 12 சதம் வரை வாக்குகள் பெற வேண் டும். கிட்டத்தட்ட 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.

இன்றைய நிலையில் பா.ஜ.க. முந் தைய தேர்தலைக் காட்டிலும் 12 சத வாக்குகளைக் கூடுதலாகப் பெற வாய்ப்பில்லை. தேர்தலுக்கு முந் தைய அதன் கூட்டணி இன்று மிக வும் பலவீனப்பட்டுள்ளது. இன்று அதன் கூட்டணிக் கட்சிகள் அகாலி தளமும் சிவசேனாவும் மட்டுந்தான். ஒரு காலத்தில் 23 கட்சிகள் அதனு டன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்குப் பிந்திய கூட்டணி அமைப்பிலும் பா.ஜ.க.விற்குச் சாதக மற்ற நிலையே உள்ளது. முக்கிய மாநிலக் கட்சிகளான திரிணாமுல் காங்கிரஸ், மதச் சார்பற்ற ஜனதா தளம், பிஜு ஜனதா தளம், சமாஜ் வாதி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, அ.இ.அ.தி.மு.க ஆகியவற்றில் அ.தி. மு.க. மட்டுமே தேர்தலுக்குப் பின் பா.ஜ.க. பக்கம் சாய்வதற்கு வாய்ப் புள்ளது. திரிணாமுல் கூட அந்த பக் கம் போகப் போவதில்லை.

பா.ஜ.க.வின் ஒரே பலம் காங்கிர ஸின் பலவீனந்தான். அதன் தவறான ஆளுகைகள், ஊழல்கள்தான். ஆனால் இதன் மூலம் பா.ஜ.க.விற்குக் கிடைக்கவுள்ள பயன், எடியூரப்பா மற்றும் நிதிஷ் குமாரின் பிரிவால் ஏற் படும் இழப்பால் ஈடுகட்டப்பட வாய்ப்புள்ளது.

ஆர்.எஸ்.எஸ்ஸும் கார்பொரேட் களும் இன்று கூட்டாக நின்று மோடியை முன்னிறுத்துவதில் இன் னொரு ஆபத்தும் உள்ளது. இந்திய ஜனநாயகமும் தேர்தலும் குடியரசுத் தலைவர் (Executive Presidential Form) வழிப்பட்டதல்ல. இங்கு பிர தம வேட்பாளர் யார் என்பது முக்கிய கேள்வியல்ல. ஆனால் கார்பொரேட் களும் ஆர்.எஸ்.எஸ்ஸும் இந்தத் தேர்தலை ஒரு குடியரசுத் தலைவர் வழிப்பட்ட ஜனநாயகத் தேர்தலைப் போல நடத்த முற்பட்டுள்ளன. மோடியா இல்லை ராகுலா என்கிற கேள்வியை அவை மட்டுமே முன் வைத்துப் பிரசாரம் மேற்கொள்கின்ற ன. காங்கிரஸ் கூட அப்படி ராகுலை முன்னிறுத்தவில்லை.

இந்தியா இரு கட்சி முறைக்கு உகந்த நாடல்ல. பல்வேறு மொழி, இன, மத, சாதி மக்கள் வசிக்கும் ஒரு நாட்டில் இது சாத்தியமல்ல. 1984 வரை வெறும் 19 கட்சிகளே இருந்த நிலை மாறி இன்று 39 கட்சிகள் நாடா ளுமன்றத் தேர்தலில் பங்கு பெறுகின் றன. இந்நிலையில் இரு கட்சி மற்றும் குடியரசுத் தலைவர் ஆட்சி முறை போல இந்தத் தேர்தலை நடத்த முயல்வதிலும் கார்பொரேட்கள் தோற்கத்தான் போகின்றன.

மோடியை ஆதரிப்பதற்கு அவரும் அவரது பா.ஜ.க.வும் காங்கிரஸைக் காட்டிலும் ஈழத் தமிழர் பிரச்சினை யில்ஆதரவாக இருப்பார்கள் என வைகோ முதலானோர் சொல்லி வரு வதைப் போன்ற அபத்தம் எதுவுமில் லை. இந்திய, இலங்கைப் பிரதமர் களால் டில்லியிலிருந்து இலங்கையின் இறையாண் மையைக்காப்பது என வெளியிட்ட அறிக்கையே பா.ஜ.க.வின் இலங் கைக் கொள்கை என்பது குறிப்பிடத் தக்கது. சமீபத்தில் அதில் எந்த மாற் றங்களும் ஏற்பட்டதற்கான தடயங்களே இல்லை. தமது இயல் பான இந்துத்துவ ஆதரவைக் காட்ட இவர்கள் மேற்கொள்ளும் உத்திதான் இது. ▪


மானிடத்தின் மனச்சாட்சியை கிள்ளிவிட்ட
ஒரு மகத்தான கலைஞனின் நூற்றாண்டு

# ஆல்பேர்ட் காம்யு

மதுசூதனன்

பிரபல பிரெஞ்சு சிந்தனையாளரும் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆல்பேர்ட் காம்யு (1913-1960) உலகளவில் கொண்டாடப்படும் உன்னதக் கலைஞர். இவர் பன்முக ஆளுமையுடன் விளங்கிய ஒரு வித்தியாசமான மனிதர். இவரது உலகப்பார்வையும் வாழ்வியல் நோக்கும் வித்தியாசமானது. தொடர்ந்து இருப்பியல் வாதத்துடன் அடையாளப்படுத்தப்பட்டு வந்தார். ஆனால் தான் ஒரு இருப்பியல் வாதி என்பதை காம்யு மறுத்துவந்தார். ஆயினும், இருப்பியல் சிந்தனையின் தத்துவத்தின் சிறப்பு பிரதிநிதியாகவே இன்றுவரை அறியப்படுகிறார். காம்யுவை ஒரு தத்துவ வாதியென சித்தரிக்க முடியாது. ஏனெனில், இவர் இருப்பியல் தத்துவம் பற்றி கனதியான குறிப்பிடத்தக்க நூல்கள் எதனையும் எழுதவில்லை. ஆயினும் ஆங்காங்கு சில கட்டுரைகள் சிறிய நூல்கள் முதலானவற்றில் தனது தத்துவப் பார்வையை விளக்கியுள்ளார். இதற்கு இவரது படைப்புகளும் துணைசெய்துள்ளன.

காம்யு ஒரு எழுத்தாளர், கலைஞர், இலக்கியப் படைப்பாளி, நாடக ஆசிரியர் போன்ற படைப்பாக்கத் தளங்களில் தீவிரமாக இயங்கியவர். நாவல், சிறுகதை, கட்டுரை, அரசியல்பத்தி, நாடகம் முதலானவை ஆல்பேர்ட் காம்யு எனும் ஆளுமை மனிதரின் பன்முகப்பரிமாணத்தை வெளிப்படுத்தின. தற்போது உலகளவில் காம்யுவின் நூற்றாண்டு சிறப்பாக கொண்



டாடப்படுகின்றது. காம்யுவின் அந்நியன்(நாவல்), வீழ்ச்சி (நாவல்) விருந்தாளி (சிறுகதை) முதலான படைப்புகளும் மரணதண்டனை என்றதொரு குற்றம், உள்ளிட்ட கட்டுரைகளும் தமிழில் வெளிவந்துள்ளன.

இதைவிட ஆய்வாளர் எஸ்.வி.ராஜதுரை எக்சிஸ்டென்ஷியலிசம் (1979, 1983), அந்நியமாதல் (1979) முதலான நூல்களை தமிழில் எழுதினார். மேலும், காம்யுவின் படைப்புகள் குறித்த அறிமுகக் கட்டுரைகள், நேர்காணல்கள், வாழ்க்கை வரலாறு போன்றவையும் ஆங்காங்கு வெளிவந்துள்ளன. இந்த விடயங்களின் தெளிவு சார்ந்து காம்யுவை புரிந்து கொள்வதற்கான முயற்சிகள் நம்மிடையே விரிவாக்கம் பெற்று வந்துள்ளன. இவற்றின் வெளிச்சத்தில் தற்போது நாம் காம்யுவை கௌரவிக்கும் விதத்தில் அல்லது புரிந்துகொள்ளும் வகையில் வாசிப்பு தேடலின் தொகுப்பாக இந்தக் கட்டுரை அமைகிறது.

ஆல்பேர்ட் காம்யு 1913 நவம்பர் 7இல் அல்ஜீரியாவில் பிறந்தார். அப்போது அல்ஜீரியா பிரெஞ்சு காலனியாக இருந்தது. இவர் அல்ஜீரியாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் தத்துவம் படித்து வந்தார். ஆனால் இவருக்கு காச நோய் ஏற்பட்டதன் காரணமாக இவரால் மேற்படிப்பு படிக்க முடியாமற் போய்விட்டது. இருந்த போதிலும் இவரது சிந்தனை ஆர்வம் காரணமாக பல நூல்களை தானே படிப்பதும், நாடகங்கள் எழுதி அவற்றை இயக்குவதுமாக இருந்தார். காம்யு பிழைப்புக்காக அவ்வப்போது வெவ்வேறு இடங்களில் பல தொழில்களில் ஈடுபட்டு வந்தார். அந்த நிலைமையிலும் தத்துவார்த்த நூல்களைப் படிப்பதில் தீவிரமாக இருந்தார். இந்நாட்களில் கல்லூரியில் இவரது தத்துவப் பேராசிரியராக இருந்த ழான்க்ரெனியர் இவருடைய நண்பராக மட்டுமன்றி குருவாகவும் திகழ்ந்து வந்தார். காம்யுவிடம் தத்துவ வாதியாக முகிழ்ப்பதற்கான அனைத்து பண்புகளும் சாதகமாகப் பொருந்தி வருவதற்கான அறிவும் துணிச்சலும் பயிற்சியும் இயல்பாக வெளிப்பட்டது.

காம்யு 1933இல் திருமணம் செய்து கொண்டார். ஆனால் அடுத்த ஆண்டே அந்த அம்மையாரை விவாகரத்துச் செய்து விட்டார். 1934 இல் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராகச் சேர்ந்தார். ஆனால் வெகுவிரைவிலேயே கட்சியில் அதிருப்தியுற்று விலகிவிட்டார். 1936இல் தத்துவத்தில் பட்டம் பெற்றார். 1937இல் தொடங்கி நாடகத்துறையில் தீவிர ஈடுபாடு காட்டி வந்தார். 1938 இல் அல்ஜீரியா 'ரிபப்ளிக்' என்ற பத்திரிகையில் நிருபராகவும் பணிபுரிந்தார். 1940 இல் இரண்டாவது திருமணம் செய்தார். இந்தக் காலகட்டத்தில் தான் 'அந்நியன்' நாவலை எழுத ஆரம்பித்தார்.

வரலாற்று நோக்கில் அரசியல் ரீதியாகப் பார்த்தால் முதல் உலகப்போர் முடிந்து இருபது ஆண்டுகளிலேயே இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்தது. இந்தக்கால இடைவெளியில் இருந்த குழப்பநிலை ஒரு முக்கிய பின்புலமாக உருவானது. இது பல்வேறு வினாக்களை எழுப்பியது. இந்தச் சூழ்நிலையில் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள உறவு, தனிமனிதனுக்கு ஏற்படும் மனச்சாட்சிப் போராட்டங்கள் இவற்றிற்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கின. இவை தத்துவ சிந்தனையாளர்களை மட்டுமன்றி இலக்கியப் படைப்பாளிகளையும் நாடகக் கலைஞர்களையும், ஓவிய, இசைக்கலைஞர்களையும் வெகுவாகப் பாதித்தன.

பிறப்பு - இறப்பு என்ற வரையறைகளுக்குள் முற்றுப்பெற்றுவிடும் மனிதவாழ்க்கைத் திட்டமிடலில் தனிமனிதனின் பங்கு என்ன? மனிதனின் குறிக்கோள் என்ன? என்றெல்லாம் தர்க்கம் செய்யும் சூழல் இயல்பாக உருவாகிவந்தது. இவ்வாறு தர்க்கிக்கும் சிந்தனையாளர்களை போரின் கொடூரம் மிகப்பயங்கரமாகத் தாக்கியது. இவர்கள் பகுத்தறிவு ரீதியாக காரண-காரியத் தொடர்பு மூலமாக மனித இனத்தின் பிரச்சினைகளை அணுக முற்பட்டனர். கடவுள், மதம், விதி, ஊழ்வினை போன்றவற்றை இவர்கள் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. கொள்கை வெறியின் விளைவாக ஏற்பட்ட வன்முறைகள் ஒன்றுமறியாத சாதாரண மக்களை ஆயிரக்கணக்கில் பலிகொண்டது. இந்த அநீதிகளும் மனிதனுக்கு மனிதனால் இழைக்கப்பட்ட தீங்குகளும் ஒன்றுசேர மனிதாபிமானம் என்ற உணர்வு மறைந்துவிட்டது. இதனால் வாழ்க்கை அர்த்தம் அற்றுப் போயிருந்தது.வாழ்க்கையின் அபத்தம் பற்றி இவர்கள் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தனர்.

இரண்டு உலகப்போருக்குப் பின்னர் பிறப்பை தொடக்கப்புள்ளியாகக் கொண்டு வாழ்வு அல்லது இருத்தல் என்னும் பொருளை அணுகும் நேர்கோட்டு வாதங்கள் அர்த்தமிழந்தன. இச்சூழலில் எழுந்த எக்சிஸ்டென்ஷியலிசம் (Existentialism) எனும் இருத்தலியம், சாவை மையப்புள்ளியாகக் கொண்டு வாழ்வின் பொருண்மையைத் தேடியது. உலகப்போர்கள் மனித உயிரை மதிப்பிழக்கச் செய்த அதிர்வும் மனித உயிர்களின் தொடர்ச்சியான கொத்துக்கொத்தான

**வறுமையும் நெருக்கடியும் போர்களும் அழிவும் பெரு நாசமும் ஒரு சமுதாயத்தில் ஊடுருவும் போது மனிதன் இயற்கையிடமிருந்தும் தன் உழைப்பிலிருந்தும் தன்னிடமிருந்தும் அயலவனாகிவிட்ட போது உலகம் முழுவதும் அவனுக்கெதிரானதாக, வாழ்க்கை பொருளிழந்து போனதாக தோன்றுவதில் வியப்பில்லை**

இழப்பும் மனிதனுடைய இருத்தலை அர்த்தமற்றதாக்கின. எனவேதான் இருத்தலியம் சாவுகுறித்த கேள்விகளை எழுப்பி இருத்தலுக்கான அர்த்தத்தைத் தேடியது. முடிவில் இருத்தலின் அர்த்தமின்மையைக் கண்டடைந்தது. உலகெங்கும் கலை இலக்கியப் படைப்பாக்கச் செயற்பாடுகளில் வாழ்வின் அர்த்தமின்மையும் (அபத்தமும்) சாவும் மையப்படுத்தப்பட்டன.

தமிழ்ச்சூழலில் இருத்தலிய அலைகள் சற்று தாமதமாகத்தான் வந்தடைந்தன. இந்தப் பின்னணியில் தான் சார்த்தர், ஆல்பேர்ட் காம்யு போன்றோரை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். காம்யுவின் படைப்புகள் இருத்தலியம் சார்ந்த தத்துவார்த்த உரையாடல்களுக்கான கருத்தியல் வெளியைக் கட்டமைத்தன. அவை படைப்பாக்கமாகவும் வெளிவந்தன. காம்யுவின் படைப்புகள் தத்துவார்த்தமான கேள்விகளை எழுப்பின. அதாவது, அபத்தநிலை பற்றிய தருணங்களை அடையாளம் காட்டின. அல்லது அவற்றை உணர்வதற்கான சூழமைவை உருவாக்கின. காம்யுவின் படைப்புகளில் ஆழமான பரிச்சியம் கொள்பவர்கள் வாழ்க்கையின் அர்த்தமின்மையைத் தெரிந்துணரும்போது இந்த அபத்த நிலையை ஆழமாக உணர்வர். இதனை காம்யு தனது புனைவு சார்ந்த படைப்புகளிலும், கட்டுரைகளிலும் விரிவாக விளக்கியுள்ளார்.

வறுமையும், நெருக்கடியும், போர்களும், அழிவும், பெருநாசமும் ஒரு சமுதாயத்தில் ஊடுருவும்போது, மனிதன் இயற்கையிடம் இருந்தும் தன் உழைப்பிலிருந்தும் தன்னிடமிருந்தும் தன் இனத்திடமிருந்தும் அயலவனாகிவிட்டபோது, உலகம் முழுவதும் அவனுக்கெதிரானதாக, வாழ்க்கை பொருளிழந்து போனதாக தோன்றுவதில் வியப்பில்லை. இந்த சமுதாயத்தில் அவன் எதிர்கொள்கிற ஒவ்வொரு சூழ்நிலையும் அபத்தம் நிறைந்ததாகவே இருக்கிறது. பொருளியல் காரணங்களால் வெறுக்கத்தக்கதாக மாறிவிட்ட சமுதாயச் சூழ்நிலையுடன் மரபு வழிப்பட்ட சமய நம்பிக்கைகளில் சீர்குலைவும் சேர்ந்துகொள்ளும்போது மனித வாழ்க்கையின் இலக்குக்கான விளக்கங்கள் திடீரென மறைந்துவிடுகின்றன.

இதனால் அதிர்வடைந்து அந்நியமாகும் மனிதன் தன்னுடைய இருத்தலின் அர்த்தம் குறித்தும் அதன் அபத்தம் குறித்தும் கேள்விகளை எழுப்பிக் கொள்கிறான். இத்தகைய கேள்விகளை எழுப்பிய மனித மனங்களுடன் இருத்தலியம் நெருங்கிச் செல்கின்றது. இதன் நீட்சியாகவும் கண்டடையும் வழிமுறைகளில் ஒன்றாகவும் 'தற்கொலை' ஒரு தெரிவாகவும் அமைகின்றது. ஆல்பேர்ட் காம்யுவிற்கு தற்கொலை தீர்விற்கான திறவுகோலாகவும் இருந்துள்ளது. மனிதன் தன்னுடைய இருத்தலை கேள்விக்குள்ளாக்கும்போது சாவு குறித்த சிந்தனைகள் இயல்பாகவே அவனிடம் தோற்றம் கொள்கின்றன. இன்னொரு மனிதனாலும் சமூகத்தாலும் கட்டப்பட்டுள்ள 'தான்' சாவின் மூலமே விடுதலையை அடையமுடியும். சாவு மட்டுமே தன்னுடைய இருத்தலுக்கான அர்த்தத்தை தெரியப்படுத்தும் என்பதற்கான சிந்தனை அழுத்தம் பெற்றது. இதன் வளர்ச்சி நிலையாக சாவை தன்னுடைய முக்கிய அம்சமாக்கியது இருத்தலியம். காம்யுவின் படைப்புகளின் வழியே இருத்தலியம் மையம் கொண்டு வாழ்வியல் விசாரணைக்கான களங்களை அகலத் திறந்துவிட்டது.

மனித வாழ்க்கை உருவாக்கிய மிக மோசமான நிலைகளின் எல்லைக்குச் சென்று பார்த்தபிறகு இறுதித் துயரத்தில் மூழ்கிவிடாமல் புதிய தீர்வை உருவாக்க முயல்பவர்களே தாங்கள் என இருத்தலியலாளர்கள் கருத்துரைக்கின்றனர் அல்லது வாதிடுகின்றனர். எவ்வாறாயினும் இருத்தலியம் என்பது உலகளவில் புரிந்துகொள்ளப்படாத தத்துவம் அல்லது கருத்து நிலை. இதுதான் இருத்தலியம் என்று நாம் ஒற்றைப்பரிமாணத்தில் இருத்தலியலை விளக்கிவிட முடியாது. இருத்தலியம் பற்றிய உணர்வுக்கும் சிந்தனைக்கும் மனித வாழ்வு பற்றிய விசாரணை விரிவுபெற வேண்டும். அதனை அறிந்தும் உணர்ந்தும் கொள்வதற்கான பண்பாட்டுத்தளம் மனக்கட்டமைப்பு நமக்கு வேண்டும். எந்தவொரு தத்துவமும் குறிப்பிட்ட சமுதாய பொருளியல் நிலைமைகளை மட்டுமே அங்குலம் அங்குலமாக பிரதிநிதித்துவம் செய்வதில்லை. புதிய நிலைகளின் தேவைக்கேற்ப நெடுங்காலமாகத் தொடர்ந்துவரும் சிந்தனை மரபின் தர்க்கத்திற்கு உட்பட்டே புதிய கோட்பாடுகள் பிறக்கின்றன. இவ்வகையில் இருத்தலியத்திற்கு நீண்ட வரலாறு உண்டு.

மனித வாழ்க்கை பிறப்பில் தொடர்ந்து இறப்பில் முடிவடைந்து விடுகின்றது. இன்னும் முடிந்துவிடாத நிலையில் தொடர்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையை இருத்தல் என்று சார்த்தர் கூறுகிறார். இந்த இருத்தல், இறத்தல் என்ற முடிவுடன் முழுமைபெற்று ஒரு வாழ்க்கையாகிறது. ஆகவே இருத்தல் என்னும் சொல் மனித வாழ்க்கையை பொதுவாக குறிப்பிடுவதாக இல்லாமல், வாழ்க்கை இன்னும் முற்றுப்பெறாமல் நடந்துகொண்டிருக்கின்றது என்ற நிலையையும், அது எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது என்னும் விதத்தையும் உள்ளடக்கிய சொல்லாகவும் இருக்கிறது.

இப்பேரண்டம் ஏதேச்சையானது. பொருள்களும் வாழ்வும் ஏன் இருக்கின்றன என்பதற்கு உறுதியான காரணங்கள் ஏதும் இல்லை. பொருள்களை நாம் எவ்வாறு காண்கின்றோமோ அவ்வாறே அவை ஏன் இருக்க வேண்டும், வேறுவகையில் ஏன் இருக்கக்கூடாது என்பதற்கான காரணமும் இல்லை. நாமே அப்படித்தான். இப்பேரண்டம் ஒரு மூர்க்கத்தனமான உண்மை. அது தடமான தெளிவற்ற ஜடத்தன்மை கொண்ட ஒன்று. இந்தப் புவிக்கோளமும் அதன் மேல் உள்ள விலங்குகளும் ஏதோ முற்றிலும் தற்செயலாக, ஏதேச்சையாக தோன்றியவை என்பதைக் கொள்வோமானால், அவை ஏதோ ஓர் இறைநோக்கம் கருதி படைக்கப்பட்டவை என்னும் கருத்தை முற்றா

கப் புறக்கணித்து விடலாம். மனித சமுதாயம் என்பது இயற்கை விதிகளில் இருந்து முற்றிலும் சுயேச்சையானது. எனவே அது, இப்போது போல எப்போதும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உலகில் நமக்குள்ள நிலையை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ நமக்கு சுதந்திரம் உள்ளது. அதை மறுப்பதிலோ மாற்றுவதிலோ தோல்வியடைந்தாலும் கூட அதை எதிர்த்துக் கலகம் செய்ய நமக்குச் சுதந்திரம், உரிமை இருக்கிறது. என்றும் மாறாத உலகு தழுவிய எல்லோருக்கும் பொதுவான மனித சாரம் என்பது ஏதும் இல்லை. ஆகவே, தேர்வு செய்வதில் சுதந்திரம், மனித வாழ்க்கை சாவில் முழுமையடைவது, இருத்தலின் அபத்தம் ஆகியவை குறித்து சார்த்தர் மேலும் விரிவாகப் பேசுகிறார். நன்மை, தீமை போன்ற கருத்தமைவுகள் மனிதனுடைய தேவைகளால் உருவாக்கப்பட்டவையே. ஆனால் இருத்தல் என்பது அதற்கும் முந்தையது. இங்கு சார்த்தர் மட்டுமல்ல காம்யுவின் புரிதலும் இவ்வாறுதான் விரிந்துசெல்கின்றது.

பொதுவாக சாவு, நிலையாமை என்கிற பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிறவர்கள் தான் இருத்தலியலாளர் என்ற குற்றச்சாட்டினை தொடுக்கின்றவர்களுக்கு இருத்தலியலாளர் தரும் விடை இதுதான்: இத்தகைய குற்றச்சாட்டினைத் தொடுப்பவர்கள் ஏதேனும் ஒரு கட்டத்திலாவது மரணத்தைப் பற்றிய சிந்தனையோ, இயற்கை விதிக்கும் இந்த வரையறையில் இருந்து ஏதேனும் ஒரு வகையில் கடந்து சென்று விடவேண்டும் என்கிற வேட்கையோ, தங்கள் உள்ளத்தில் எழுந்ததே இல்லையா? என்பதை ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சிந்தனை இல்லாதவன் தன் வாழ்க்கையின் பொருள் பற்றியோ இப்பேரண்டத்தின் தன் உரிமையைப்பற்றியோ ஒரு போதும் கவலைப்படமாட்டான். இவன் கல்லாக இருப்பான் அல்லது கடவுளாக இருப்பான். இரண்டுமே கைகூடாதவை. ஆதலால், ஏதேனும் ஒரு வறட்டுத் தத்துவத்தில் அறநெறிக்கோட்பாட்டில் கட்டுப்பாடற்ற புலனின்ப வாழ்க்கையில் தலைவிதி பற்றிய கருத்தில் தன்னை மறந்திருப்பான் அல்லது தன் வாழ்க்கையில் வாழும் பொறுப்பை நிறுவனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைத்துவிட்டவனாக இருப்பான். இவன் வாழ்வதே இல்லையாதலால் சாவைப் பற்றிச் சிந்திக்க மாட்டான்.

காம்யுவிடம் நிரந்தரமான ஆழமான தெளிவற்ற இருமைத் தன்மை இருந்தது. அந்நியனைப்போல துரைக்கின்றார். உலகத்தின் விதியோடு ஒத்துப்போகிறவர்களுக்கு நாகரிகங்களுக்கிடையேயான மோதல் வேதனையளிக்கும். நான் அந்த வேதனையை என்னுடையதாக்கிக்கொண்டுவிட்டேன். அதேநேரத்தில் நான் என்னுடைய வேலைகளையும் செய்கிறேன் எனவும் கூறுகிறார்.

மனிதனைப் பற்றி பொதுவான அனுமானங்களைச் சிந்திக்கும்போது காம்யு தன்னைப்பற்றியும் தன் சொந்த அனுபவங்கள் பற்றியும் பேசுகின்றார். மனிதன் தான் பகுத்தறிவு

> **மனித வாழ்க்கை உருவாக்கிய மிக மோசமான நிலைகளின் எல்லைக்குச் சென்று பார்த்த பிறகு இறுதி துயரத்தில் மூழ்கி விடாமல் புதிய தீர்வை உருவாக்க முயல்பவர்களே தாங்கள் என்று இருத்தலியலாளர்கள் கருத்துரைக்கின்றனர். ஆனால் இருத்தலியம் என்பது உலகளவில் புரிந்து கொள்ளப்படாத தத்துவம். இது தான் இருத்தலியம் என்று நாம் ஒற்றைப் பரிமாணத்தில் அதை விளக்கி விட முடியாது**

'சிசுபஸ்' புராணம் என்னும் கட்டுரையில் மேலும் சில அடிப்படை தத்துவார்த்தப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளார். தன் கட்டுரையை இப்படித்தான் தொடங்குகிறார். வாழ்க்கை வாழத்தகுந்ததா இல்லையா என்று முடிவு செய்வதே தத்துவத்தின் அடிப்படைக்கேள்விக்கு பதில் அளிப்பதாகும். தான் வாழும் காலத்தில் இருந்து என்னைப் பிரிக்க முடியாது என்று உணர்ந்த நான், அதன் பகுதியாகிவிடுவதென்று முடிவு செய்து விட்டேன். வாழும் காலத்தில் முக்கியத்துவமற்றவனாக அவமானப் படுத்தப்பட்டவனாக இருக்கும் தனி மனிதன் மீதே அதிகம் கவனம் செலுத்துகிறேன். இவ்வாறு கட்டுரையில் காம்யு எழுதிச் செல்கின்றார். மேலும் உணர்ச்சி பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் வாழ்க்கையின் அர்த்தமின்மையைத் தெரிந்துணரும் போது வெளிப்படுவது தான் அபத்த நிலை என்பதையும் தெளிவாக எடுத்தற்றவர்களால் எதிர்க்கப்படுவதைப்பார்க்கிறான். மகிழ்ச்சிக்கும் காரணங்களுக்குமான தேவையை அவன் எதிர்பார்க்கிறான். இருண்மைத்தன்மை மனிதனின் அழுகைக்கும் உலகத்தின் காரணமற்ற மௌனத்திற்கும் இடையேயுள்ள எதிர்ப்பில் பிறந்தது என்கிறார் காம்யு. ஒரு மனிதன் தன்னை தன்வெளிப்பாடுகளாலும் நகைச்சுவை உணர்ச்சிகளாலும் வறையறுத்துக்கொள்கிறான். இருண்மை, தெளிவின்மை, அபத்தம் என்பதை விலகும் புள்ளியாக மனநோயின் விவரணையாகப் பார்த்தார். தற்கொலைதான் உலகத்தின் மிக முக்கியமான தத்துவப் பிரச்சினையென்று முடிவுக்கு வந்தார். அதேநேரம் வரலாற்றுப்பார்வையில் தற்கொலை அப்படி இல்லாததையும் உணர்ந்தார். உலகத்திற்கும் ஒவ்வொரு சிந்திக்கும் மனிதனின் தெரிவிற்குமான ஆசைக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதாக நம்பி

னார். உலகம் தன்னளவில் அபத்தமற்றதாக இருக்கிறது, அது இருக்கிறது அவ்வளவு தான். தனக்குத்தானே ஒழுக்க விதிகளை வகுத்துக்கொண்டு கடவுள் நம்பிக்கையோடும் வாழ்கிற மனிதனுக்கு உலகம் அர்த்தம் உள்ளதாக இருக்கிறது. அவர்கள் இல்லாத மற்றவர்களுக்கு உலகம் எந்த நல்லொழுக்கத்தையும் விதிக்காமல் இருப்பது காம்யுவிற்கு வேதனையை அளித்தது. உலகத்தின் அபத்தமான போக்கினால் புரட்சியில் இறங்குகிற மனிதனின் கதைகளை 'அந்நியன்' நாவலை விட விரிவான மற்றும் ஒரு பெரிய நாவலில் காம்யு சொல்ல நினைத்தார்.

வாழ்க்கையின் அபத்த நிலையென்றால் வாழ்க்கையே அபத்தமானதென்று பொருள் அல்ல. காரண-காரிய தொடர்பு இன்றி அன்றாட வாழ்க்கையில் நம் கண்முன்னே நிற்கும் சில நிகழ்ச்சிகள் அர்த்தமற்றவையாக இருக்கின்றன. இவற்றினூடே ஒரு அர்த்தத்தை தன் பகுத்தறிவு உதவி கொண்டு தேட விளைகின்றான் மனிதன். இவனது பகுத்தறிவிற்கும் உலகின் அர்த்தமின்மைக்கும் இடையே உள்ள முரண்பாடு தான் அபத்தமாகிறது. ஆனாலும், காம்யுவின் படைப்பில் இந்த அபத்தம் என்ற சொல்லுக்கு இருவித அர்த்தங்கள் இருப்பதாக தத்துவவாதி சார்த்தர் சொல்லியிருக்கிறார். அதாவது, அபத்தம் என்பது உண்மை நிலை. இந்த உண்மை நிலை குறித்து சிலருக்கு இருக்கும் தெளிவான பிரக்ஞை. இவை இரண்டுமே அபத்தம் பற்றிய விளக்கத்தை விரிவாக்குகின்றன. உண்மை நிலைபற்றிய தேடல் பலவாறு சிந்திக்கும் சாத்தியங்களே என காம்யு விளக்குகிறார். அந்நியன் நாவலை ஆழமாக வாசிக்கும் பொழுது நாம் அபத்தம் - உண்மை நிலை, தெளிவான பிரக்ஞை பற்றிய விசாரணைக்காக பண்முகக் களத்தை உணர முடியும்.

ஒரு அபத்த மனிதனின் கதையாகவே அந்நியன் படைக்கப்பட்டுள்ளது. காம்யு உருவகக் கதைகளாக நாவல்களைப் படைத்தார். குறியீட்டு புனைகதைகள் மூலம் தனது தத்துவக் கருத்துகளை அழுத்திச் செல்வது இவரது தனித்துவ அடையாளம் எனலாம். இங்கு கதாபாத்திரங்கள் இரத்தமும் சதையும் உள்ள மனிதர்கள் அல்ல. இவர்கள் முகமற்ற கருத்துருவச் சித்திரங்கள் அபத்தத்தின் இயங்குவலியை உணர்த்துவதில் தான் காம்யுவின் ஆளுமை முழுமை அடைந்துள்ளது.

நாம் காம்யு இப்படித்தான் என்று ஒற்றை வரியில் ஒற்றைப் பரிமாணத்தில் அவரைப் புரிந்து விளக்கிவிட முடியாது. அவர் படைப்புகள் வழியே வெளிப்படுத்திய கருத்துகள் வாழ்வியல் சார்ந்த விசாரணைகள் நமக்கு பல்வேறு புதிய விளக்கங்களை முன்வைக்கின்றன. வாழ்க்கையின் அர்த்தமின்மையை கருத்தளவில் ஒப்புக்கொள்கிறார். அடுத்த கணம் இந்த முடிவை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். இவற்றை எல்லாம் மீறி வாழ வேண்டியது மனிதனின் கடமை என்கிறார். அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் இடையேயான உறவைப் பேணுவதில் காம்யு ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதனை தெளிவாகப்புரிந்துகொள்ள நமக்கு ஆழமான தத்துவார்த்தப் பயிற்சியும் அனுபவமும் வேண்டும்.

படைப்புக் கலைக்கும் அரசியல் வாழ்க்கைக்குமிடையே என்னை தேர்ந்தெடுக்கச் சொன்னால் நிச்சயம் நான் படைப்புத் தொழிலையே தேர்ந்தெடுப்பேன்... ஆனால், சில வருடங்களாக அதற்கு நேர்மாறான ஒன்றைச் செய்துவருகின்றேன். கடந்த 6 மாதங்களாக எனக்கென்று ஒரு வரி கூட நான் எழுதவில்லை என்பது உண்மைதான்... எனக்கு ஏற்கனவே இருக்கிற கட்சிகளில் சேர ஆர்வம் இல்லை. ஓர் புதிய கட்சியை ஆரம்பிக்க ஒரு மனிதன் தனது அனைத்து நேரத்தையும் சக்தியையும் செலவழிக்க வேண்டும்... அப்படிப்பட்ட ஒரு மனிதனான என்மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் ஏற்கனவே அரசியல், வரலாறு, மனித குலம் அனைத்திற்கும் என்னுடைய வழியில் சேவை செய்து வருகின்றேன். அதுவொரு இரட்டை வழி... முதலில் நானொரு அடிப்படை போராளியாக சண்டையிடுகிறேன்... இரண்டாவதாக நான் நினைத்ததை சரி என்று வரையறுக்க மொழியைப் பயன்படுத்துகின்றேன்.

இவ்வாறு ஒரு வாசகருக்கு (1945 ஜனவரி 2ஆம் திகதி) காம்யு விரிவாக பதிலளித்துள்ளார். இந்தப் பின்புலத்தையும் நாம் உள்வாங்கிக் கொண்டு தான் காம்யுவை புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது தான் நமக்கு ஆரோக்கியமான பார்வை கிடைக்கும்.


காம்யு 1960 ஜனவரி 4ஆம் திகதி பாரிஸில் கார் விபத்தில் சிக்கி மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஒரு அபத்தமான ஒரு நிகழ்வு என எழுதி வந்த காம்யு அந்த அபத்த சாவை இறுதியில் சந்தித்தார். மானிடத்தின் மனச்சாட்சியைக் கிள்ளி விட்ட ஒரு மகத்தான கலைஞன் என நோபல் பரிசுக் குழு காம்யுவை புகழ்ந்துரைத்தது அவருக்கு கிடைத்த பொருத்தமான சான்றிதழ்.

> **ஆல்பேர்ட் காம்யு தனது படைப்புகள் வழியே வெளிப்படுத்திய கருத்துகள் வாழ்வியல் சார்ந்த விசாரணைகள் நமக்கு பல்வேறு புதிய விளக்கங்களை முன்வைக்கின்றன. வாழ்க்கையின் அர்த்தமின்மையை கருத்தளவில் ஒப்புக்கொள்கிறார். அடுத்த கணம் இந்த முடிவை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். இவற்றையெல்லாம் மீறி வாழ வேண்டியது மனிதனின் கடமை என்கிறார்.**

# நுண்ணிய நரம்புக் கலங்கள் முதல் செயற்கை மூளை வரை

## காதலின் சின்னமாக மூளை

**காதலில் நாம் இழப்பது, பெறுவது, அனுபவிப்பது எல்லாமே உணர்வுகளுடன் தொடர்புடைய மூளையால்தானே. ஆனால் காதலின் சின்னமாக ஏன் இதயத்தை வைத்திருக்கிறோம். மனது மூளைக்குள்தான் இருப்பது விஞ்ஞான பூர்வமாக தெளிவாக புரிந்து நீண்ட காலமாகி விட்டது**



'குற்றம் செய்தவர் மீண்டும் குற்றம் செய்வாரா?', ஒருவரது அரசியல் சாய்வு எந்தப் பக்கம் இருக்கக்கூடும் 'ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஒருவர் எவ்வாறு முடிவு எடுப்பார்' இவை பற்றி யாரால் என்ன சொல்ல முடியும். மற்றவர் மனதில் உள்ளதை எம்மால் எவ்வாறு கண்டறிய முடியும். அவராகச் சொன்னால் தான் உண்டு. அல்லது கேட்டு அறிய வேண்டும். கள ரீதியாக இல்லாமல் விஞ்ஞான பூர்வமாக இந்த விடயங்கள் பற்றி அண்மையில் ஆய்வுகளாக செய்யப்பட்டிருந்தன. அவர்களது சமூக மற்றும் தனிநபர் செயற்பாடுகள் அடிப் படையாகக் கொண்டு அல்ல. அவர்களது மூளைகளின் செயற்பாடுகளை நுணுக்கமாக ஆராய்ந்து செய்யப்பட்டவை. அறிய ஆச்சரியமாக இருக்கிறதா?உணர்வோடு சம்பந்தப்பட்ட விடயங்களை பௌதீகமான மூளைக்குள் ஆய்வது பற்றி சாதாரண மனிதர்கள் மட்டுமன்றி பல அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளும் ஐயங்களை எழுப்பினர்.

### மனசும் மூளையும்

அட்டகத்தி திரைப்படம் அற்புதமானது என்று சொல்ல முடியாது. ஆனால் மிக வித்தியாசமானது. 'காதல் தெய்வீகமானது, உண்மையான காதல் ஒரு முறைதான் வரும், காதல் இல்லையேல் சாவு' போன்ற பிம்பங்களை உடைத்துக் கொண்டு வந்திருக்கும் சினிமா அது. நாயகன் ஒவ்வொரு முறை காதல் வயப்படும் போதும் அவனது காதலின் அடையாளமாக இருதயத்தைத் தாங்கிய அம்பு காதலியை நோக்கி சிட்டெனப் பாயும்.

காதல் என்றால் உணர்வுடன் தொடர்புடையது. ஆனால், காதலின் சின்னமாக ஏன் இருதயத்தை வைத்திருக்கிறோம். காதலில் நாம் இழப்பது, பெறுவது, அனுபவிப்பது எல்லாமே உணர்வுகளுடன் தொடர்புடைய மூளையால்தானே.

தர்க்க ரீதியாகச் சிந்தித்தால் மூளை தான் காதலின் சின்னமாக அமைய வேண்டும்.

இந்தச் சிந்தனை முரணுக்குக் காரணம் எம்மிடையே ஆழப் பதிந்திருக்கும் ஒரு எண்ணம்தான். ஒரு



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

## அறிவியல் களரி

உதாரணம் பார்க்கலாம். வழமையான தமிழ்த் திரைப்படங்களின் கதைதான். ஒரு அழகான பெண். மிகவும் வசதியுள்ளவள். ஆனால் அவள் காதலிப்பதோ ஒரு விளிம்பு நிலை வாலிபனை. 'தனது மூளை அவனை மறக்கச் சொல்கிறது, மனசோ அவனோடுதான் உறவாடுகிறது' என்பாள். ஆம் மூளை வேறு, மனசு வேறு என்ற எண்ணம் பலரிடையே ஆழ வேரூன்றிவிட்டது.

ஆனால், மனசு மூளைக்குள்தான் இருப்பது விஞ்ஞான பூர்வமாகத் தெளிவாகப் புரிந்து நீண்ட காலமாகி விட்டது.

### விஞ்ஞான ஆய்வுகள்

இருதயத்தையும், சிறுநீரகத்தையும் ஈரலை மாற்றீடு செய்யும் சத்திரசிகிச்சைகள் சர்வ சாதாரணமாகிவிட்டன. ஆனால் இன்னமும் மூளையில் கை வைக்க முடியவில்லை. இதனாலோ என்னவோ! உடல் உறுப்புகள் பற்றிய நுண்ணிய ஆய்வுகள் இப்பொழுது மூளையின் பக்கம் திரும்பியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஐன்சைடினின் மூளையின் அளவும் அவரது அறிவாற்றலும் பற்றிய ஆய்வுகள் சில காலத்திற்கு முன் ஊடகங்களில் அடிபட்டது. அது பற்றிய சர்ச்சைகளும் எழுந்தன. சமகாலத்திலும் எழுதப்பட்டது. மூளையின் அளைவை மட்டும் வைத்துக் கொண்டு அதன் ஆற்றலை புரிந்து கொள்ள முடியாது என்றார்கள். 'கண்ணாடிக் குடுவைக்குள் உள்ள மூளையை ஆய்வதன் மூலம் மூளையின் செயற்பாட்டை கண்டறிய முடியாது' என்ற வாதமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

உண்மைதான். மூளையானது தனியாக இயங்கும் உறுப்பு அல்ல. அது உடலின் ஒரு அங்கம். உடலுடன் கூடவே நடமாடும் அந்த மூளையானது பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறது, புதிய மனிதர்களைக் காண்கிறது, புதிய சுழல்களில் இயங்குகிறது.பிரச்சினைகளை எதிர் நோக்குகிறது, ஆபத்துகளை எதிர் கொள்கிறது, அதே நேரம் சிரிக்க வைக்கிறது, அழ வைக்கிறது, கோபப்பட்டு ஆக்ரோஷமாக தன்னைச் சுமக்கும் உடலை எதிர்வினையாற்றவும் வைக்கிறது.

அதன் ஆற்றலை அதன் செயற்பாட்டைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், இன்னும் ஆழமாகச் செல்ல வேண்டும். மூளையின் அடிப்படையான நரம்புக் கலங்களை ஆராய வேண்டும். மூளையில் தகவல்கள் எவ்வாறு பரிமாறப்படுகின்றன என்பது பற்றி அறிய வேண்டும். நினைவுகள் எப்படிச் சேமிக்கப்படுகின்றன என்பது தெளிவாக வேண்டும்.

இவற்றையெல்லாம் தனியாக மூளையை வெளியே அகற்றி போர்மலின் போட்டுப் பாதுகாத்து அதை ஆராய்வதில் பயனில்லை. மூளையானது வெவ்வேறு வித்தியாசமான சுழல்களைச் சந்திக்கும் போது பெறும் மாற்றங்களை ஆராய வேண்டும். மூளையை அவ்வாறு ஆராய்வதை நரம்பியல் விஞ்ஞானம் (Neuroscience) என்கிறார்கள்.

இவை மூளையில் பதிவாகின்றன. ஒவ்வொரு உணர்வும் அனுபவமும் கற்கையும் அங்கு பதிவாகின்றன. இதற்குக் காரணம் அது மிகவும் நுணுக்கமான ஒரு உறுப்பு. 'ஆழ்ந்தகன்ற நுண்ணியனே..' என சிவனைப் பாடினார் மாணிக்கவாசகர். அது போல நுண்ணியதில் நுண்ணியது.

அவ்வாறே அனுபவங்களின் பதிவுகள் மூளையின் கண்ணுக்கு எட்டாத ஏதோ ஒரு பகுதியில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அங்கு பேணப்படுகின்றன. பின்னொரு நாளில் நினைவு மீட்கும்போது அவை அச்சடித்த காகிதம்போல தகவலை மீளத் தருகின்றன.

### நவீன ஆய்வுகள்

இவற்றை ஆராய்வதற்கான வசதிகள் எங்களிடம் உள்ளனவா?

இது சாத்தியமா?

'இருக்கு.. ஆனால் இல்லை..' என்ற பாணியில்தான் மழுப்பலாக பதில் சொல்ல வேண்டியுள்ளதா?

நரம்பியல் விஞ்ஞானம் இப்பொழுதுதான் குறுநடை போட ஆரம்பித்திருக்கிறது. MRI பற்றி எல்லோருக்கும் தெரியும். எமது மூளைக்குள் இருக்கும் கட்டிகள், குருதிக் கண்டல்கள், பழுதடைந்த மூளையின் பகுதிகள் போன்றவற்றை புகைப்படம் போல எடுத்துக்காட்டுபவை அவை.

ஆனால், இவை போதுமானதல்ல என்பதை எல்லோரும் அறிவர்.

மூளையின் கனபரிமாணத்திற்கு அப்பால் அதன் செயற்பாட்டை ஆராயும் MRI Functional magnetic resonance imaging பாவனைக்கு 1990களில் வந்துவிட்டது. ஒரு பகுதி நரம்புகளின் செயற்பாடுகளுக்கும் அதற்கான குருதி ஓட்ட அளவிற்கும் தொடர்பு உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு படம் எடுக்கிறது இது. அதாவது, செயற்படும் மூளையின் குறிப்பிட்ட பகுதிக்கு அதிகளவு இரத்தம் செல்வதைக் கொண்டு இயங்குவது.

இவை ஆரோக்கியமான சாதாரண மனிதர்களின் மூளையை ஆராய்வதில் புரச்சிகரமான முன்னேற்றத்தைக் கொண்டு வந்தது. உணரும்போதும் செயற்படும்போதும் மூளையின் பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்ய முடிந்தது. எம் நினைவுகளையும் சிந்தனையையும் முடிவு எடுத்தலையும் அறிவாற்றலையும் மட்டுமன்றி கனவுகளையும் கூட உணர்த்தக்கூடியதாகும். இது ஒரு ஆரம்ப நிலை உபகரணமாகும். புதிய புதிய கருவிகள் வந்துள்ளன. மூளையின் ஆழத்தில் புதைந்திருக்கும் சில நரம்புக் கலங்களை மிகுந்த துலக்கத்துடன் தூண்டும் வல்லமை கொண்ட ஒளித்துகள் கருவிகளை (optogenetics) இப்பொழுது நரம்பி

யல் விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். நனொ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மிக நுணுக்கமான அளவுகளை மூளையின் செயற்பாட்டின்போது எடுப்பது விரைவில் சாத்தியமாகும் எனவும் தெரிகிறது.

அடிப்படை அலகுகள் மூளையின் செயற்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது மூளையின் மூலக் கலங்களான நியுரோன் (neuron) எனப்படுவதாகும். இவற்றில் எழும் நுண்ணிய மின்அலைகள் கலத்திலிருந்து ஏனைய கலங்களுக்கு பரவுவதன் மூலமே மூளை செயற்படுவதாகக் கருதப்பட்டது.

இவற்றை ஒன்றோடு ஒன்று இணைப்பதாக கிளையல் கலங்கள் (glial cells) இருக்கின்றன. இவற்றில் மூன்று வகைகள் உண்டு. astrocytes, microglia and oligodendrocytes எனப்படுகின்றன. நியுரோன்கள் மட்டுமே மூளையின் செயற்பாட்டையும் முழுமையாகக் கட்டுப்படுத்துவதாக ஆரம்பத்தில் கருதப்பட்டது.

இந்தக் கிளையல் கலங்கள் நியுரோன்களைப் பாதுகாப்பதற்கும், கலங்களின் இடையேயான தொடர்புகளைக் கடத்துவதற்கும் போசாக்குகளைக் கடத்துவதற்கும் மட்டுமே என்றே முன்னர் நம்பினார்கள். ஆனால், ஆஸ்ரோசைட்ஸ் மற்றும் மைக்ரோகிளயா (astrocytes, microglia) ஆகியவை தகவல்களைப் பதப்படுத்துவதற்கும் உதவுகின்றன என அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன.

பல்வேறு நட்சத்திர வடிவம் கொண்ட ஆஸ்ரோசைட்ஸானது நியுரோன் போலவே இணைப்புகளை ஏற்படுத்தி சமிக்ஞைகளை தமக்கிடையேயும், நியுரோன்களுக்கும் அனுப்பும் ஆற்றல் கொண்டவை. ஆயினும், தானாகவே மின் சமிக்ஞைகளை உற்பத்தியாக்கக் கூடியவை அல்ல.

எலிகளில் செய்யப்பட்ட ஆய்வின் படி ஒவ்வொரு ஆஸ்ரோசைட்ஸும் பல்லாயிரக் கணக்கான இணைப்புகளூடாக தகவல் பரிமாற்றத்தை ஒழுங்கு பண்ணக் கூடியவையாகும். அத்துடன், மயிர்த்துளைக் குழாய்கள் (capillaries) ஊடான இரத்த ஓட்டத்தையும் கட்டுப்படுத்தக் கூடியவையாகும்.

ஆனால், மனித ஆஸ்ரோசைட்ஸ்கள் எலியினுடையதை விட அளவில் சற்றுப் பெரியவையாக இருக்கின்றன. இவற்றை எலியின் மூளையில் மாற்றீடு செய்தபோது எலிகளின் நினைவாற்றலானது பல்மடங்கு பெருகியது. மனித ஆஸ்ரோசைட்ஸ்கள் மேலும் பல செயற்பாடுகளைச் செய்யும் ஆற்றல் கொண்டவை என்ற முடிவுக்கு இந்த ஆய்வு அறிக்கை மூலம் நாம் வர முடியும்.

இதேபோல மைக்ரோகிளியாவும் பல்வேறு செயலாற்றல் கொண்டவை என கடந்த 10 வருடங்களுக்குள் செய்யப்பட்ட ஆய்வுகள் உணர்த்துகின்றன. அவை மூளையின் எதிர்ப்பாற்றல் சக்தியுடன் தொடர்புடையவை. இறந்த கலங்களைத் துடைத்தெடுக்கின்றன. நுண்ணியதாக நீளும் விரல் போன்ற அலகுகளால் சுழலைக் கண்காணிக்கின்றன. அத்துடன், தேவையற்ற இணைப்புகளை அழித்து புதியவை உருவாக இடம் அளிக்கின்றன. இவ்வாறான ஒரு சில ஆய்வுகள் மனிதரில் மேற்கொள்ளப்பட்ட போதும் பெரும்பாலானவை எலி போன்ற மிருகங்களிலேயே செய்யப்படுகின்றன. மேலும் நுணுக்கமான ஆய்வுகளை மனிதரில் செய்வதற்கான நவீன கருவிகளின் வரவு தேவையாகவுள்ளது.

நரம்பியல் விஞ்ஞான ஆய்வுகளாவன மூளையின் கனபரிமாணம் மற்றும் வடிவுகளைத் தாண்டி அதன் உட்பாகங்களுக்கும் சென்றுள்ளதைப் புரியக் கூடியதாக உள்ளது. மூளையின் கலங்களையும் அதன் மூலப் பகுதிகளையும் நோக்கிய துல்லியமான ஆய்வுகள் சாத்தியமாகின்றன.

## செயற்கை மூளை

இதற்கிடையில் ஒஸ்ரிய விஞ்ஞானிகளால் மறு உருவாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி மனித மூளையின் சிறிய வடிவத்தை ஆய்வு கூடத்தில் உருவாக்க முடிந்திருக்கிறது. இது பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். மூளையின் பல பகுதிகளான cerebral cortex, retina, meninges, choroid plexus போன்றவற்றின் ஆரம்ப கட்ட வளர்ச்சியை 2 மாதத்தில் ஆய்வு கூடத்தில் எட்ட முடிந்தாலும் அதற்கு மேல் வளர்ச்சியடையவில்லை.

போதிய குருதி ஓட்டம் மற்றும் ஒட்சிசன் இல்லாமையால் வளர்ச்சி தடைப்பட்டது என்று அவர்கள் சொன்னார்கள். இருந்த போதும் மனித உடலில் பயன்படுத்தக் கூடிய மூளையை உருவாக்குவது அண்மைக்காலத்தில் சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

இருந்தபோதும் இந்த ஆய்வை தட்டிக்கழிக்க வேண்டியதில்லை. மூளையின் செயற்பாடுகள் அதன் நோய்கள் பற்றிய பல புதிய செயதிகளையும் தருவதோடு ஆய்வுக்கான புதிய கதவுகளையும் அது திறந்து விட்டிருக்கிறது.

முடிவாக, இன்னும் பல்லாயிரம் படிகள் எங்கள் முன் காத்திருக்கின்றன. தகவல்கள் மின்அலைகளாக எவ்வாறு உருவாகின்றன. அவை ஒன்றிலிருந்து மற்றது எவ்வாறு வேறுபடுகிறது போன்ற பலவற்றையும் கண்டறிய வேண்டியுள்ளது.


காதலின் சின்னமாக மூளையின் கலங்களான நியுரோன் மற்றும் ஆஸ்ரோசைட்ஸ், மைக்ரோகிளியா போன்றவற்றைக் குறியீடாக சினிமாவில் காட்டும் விஞ்ஞான அறிவியல் தெளிவு எமது நெறியாளர்களுக்குக் கிட்டும் காலம் வருமா?

வரும் என நம்பலாம். அதேபோல திரைப்பட ஆர்வலர்களும் அக்குறியீடுகளை தெளிவாகப் புரிந்துகொள்ளும் அறிவியல் வளர்ச்சி தொலைதூரத்தில் இல்லை. ■



இந்திய - சீனப் போரின்போது வெளியேற்றப்பட்ட

# சீன வம்சாவளியினரும் அசாமிய நாவலாசிரியர் ரீடா சௌத்ரியும்



அ.மார்க்ஸ்

**வன்முறைகள், வெறுப்பு அரசியல், மற்றமை மீதான வன்கொடுமைகள், அந்நியர் குறித்த விதவிதமான வரையறைகள் நம்மைச்சுற்றி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ் எழுத்துகள் இவை குறித்த பிரக்ஞையை எந்த அளவிற்கு வெளிப்படுத்துகின்றன. ரீடா சௌத்ரியின் முயற்சிகளை வாசித்தபோது என் நெஞ்சில் கிளர்ந்த கேள்வி இது**

கடந்த சில நாட்களில் நாளிதழ்களில் வந்த ஒரு செய்தி மனதை நெகிழ்த்தியது. அசாமிய மொழிக் கவிஞரும் நாவலாசிரியருமான ரீடா சௌத்ரியுடன் தொடர்புடைய செய்தி அது. ரீடா அசாமிலுள்ள காட்டன் கல்லூரியில் அரசியல் அறிவுத்துறை பேராசிரியையும் கூட. அவரது 602 பக்க நாவல் மகம் சாகித்ய அகடமி பரிசை (2008) மட்டுமல்ல இதுவரை நான்கு பதிப்புகளையும் கண்டுள்ளது. மகம் என்கிற சீன மொழிச் (Cantonese) சொல்லுக்குத் தங்கக் குதிரை என்று பொருளாம்.

அசாம் போராட்டத்தின்போது தலைமறைவாக இருந்த நிலையில் அவர் எழுதிய அபிரத ஜாத்ரா (நில்லாத நெடும்பயணம்) எனும் நாவலுக்காக அசாம் சாகித்ய சபா பரிசும் (1981) அவருக்குக் கிட்டியது.


மகம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் (1962) இந்திய அரசு இழைத்த ஒரு பெருங் கொடுமையை மையமாக வைத்து இயங்கும் ஒரு நாவல். அசாமின் மேற்பகுதி எண்ணெய்க்கு மட்டுமல்ல தேயிலைக்கும் புகழ்பெற்றது. அருகிலுள்ள மார்கரிடாவைச் சேர்ந்த ரீடா சௌத்ரி சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் பதின் வயதுச்சிறுமியாக அவ்வழியே பயணம் செய்தபோது இந்திய அரசின் கொடுங்கரங் களால் கசக்கி எறியப்பட்ட ஒரு சிறு சமூகத்தின் எச்சசொச்சங்களைக் கண்டாள். அவர்கள் சீனர்கள் என அடையாளப் படுத்தப்பட்டார்கள். இவர்களைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என அந்தச் சிறு வயதில் அப்பெண் கொண்ட மன உறுதி பின்னாளில் விரிந்த ஆய்வாகவும், அற்புத இலக்கியமொன்றாகவும் முடிந்தது.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிரிட்டிஷ் தேயிலைத் தோட்ட முதலாளிகளால் சீனாவிலிருந்து கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டுக் குடியமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளிகள் அசாமியப் பெண்களை மணந்து கொண்டு இங்குள்ள மக்களுடன் ஒன்றிணைந்தனர்.

நவம்பர் 19, 1962 அவர்களுக்கு மறக்க இயலாத துன்ப நாளாக விடிந்தது. இந்திய- சீனப் போர் அவர்களின் வாழ்வைக் குலைத்தது. நூறாண்டுகளுக்கும் மேலாகத் தம் வேர்களை இழந்து, இம்மண்ணையே தாயகமாக வாழ்ந்திருந்த இந்த அப்பாவித் தொழிலாளிகளைச் சீனர்களாக மட்டுமல்ல, தேச எதிரிகளாகவும் இந்திய அரசு அடையாளம் கண்டது. உருவத்தோற்றம், சீன மொழி அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் சீனர்கள் என்றும், இந்தியர்கள் என்றும் அடையாளங்கண்டு, மகூம் என்னுமிடத்திலிருந்த சீனப் பட்டியிலிருந்த 1500 சீனர்களைக் கைது செய்து ராஜஸ்தானிற்குக் கொண்டு சென்றது. டியோல் எனும்

இடத்தில் அமைக்கப்பட்ட முகாம்களில் அவர்களை அடைத்தது. குடும்பங்கள் சிதைந்தன. கணவரிடமிருந்து மனைவியர், பெற்றோரிடமிருந்து குழந்தைகள் எல்லாம் வன்முறையாகப் பிரிக்கப்பட்டனர்.

வெற்றி முகத்துடன் இருந்த போதும் சீனா தன்னிச்சையாகப் போரை நிறுத்திக் கொண்டதோடன்றி, கைப்பற்றிய பகுதிகளிலிருந்து பின்வாங்கவும் செய்தது. அதன் பின் இந்திய அரசு இந்த 1500 பேரையும் சீனத்திற்கு நாடு கடத்தியது. அது மட்டுமல்ல அவர்களின் சொத்துகளை எதிரிகளின் சொத்து (enemy property) என அறிவித்து




தான் எடுத்துக்கொண்டது.

இந்திய அரசின் தவறான அணுகல் முறைகள் இந்திய - சீனப் போருக்கு வழியமைத்ததையும், இந்தியா இதன் மூலம் தோல்வியை மட்டுமன்றி, பெரிய அழிவுகளையும் சந்திக்க நேர்ந்ததையும் பலரும் எழுதியுள்ளனர். நானும் இந்திய- சீனப் போரின் 50ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி எழுதிய கட்டுரையில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். இந்திய அரசு இப்படி ஒரு மனித விரோதச் செயலை செய்தது பலருக்கும் தெரியாது.

இது குறித்து ஆய்வு செய்த ரீடா, இந்த மக்களில் (Assamese People of China Origin) சிலர் ஹொங்கொங்கில் இருப்பதை அறிந்து தொடர்பு கொண்டார். இவர்கள் இன்னும் அசாமிய மொழியில் அல்லது இந்தி கலந்த அசாமிய மொழியில் தான் பேசுகின்றனர். நாங்கள் சீனாவுக்கு உளவு பார்த்ததில்லை. எங்களை ஏன் இப்படிச் செய்தார்கள்? என அவர்கள் கேட்டபோது ரீடாவால் தலை குனிய மட்டுமே முடிந்துள்ளது. இன்னும் அவர்கள் இந்தியாவைத் தான் தங்களின் ஜனம் ஜகாவாகக் (தாயகமாக) கருதுகிறார்கள் என்கிறார் ரீடா. அது மாத்திரமல்ல இன்னும் கூட மகூமில் ஒன்பதக் சீன வம்சாவழிக் குடும்பங்கள், தாங்கள் அடையாளம் காணப்படும் நிலை ஏற்படுமோ என அச்சத்தில் உறைந்து வாழ்வதையும் ரீடா அறிந்தார்.

நாவல் எழுதியதோடு தன் வேலை முடிந்து விட்டதாக ரீடா நினைக்கவில்லை. ஹொங்கொங்கில் வாழும் இவர்களை அரசு அனுமதியுடன் மீண்டும் அசாம் அழைத்து வந்து தாம் வாழ்ந்த இடங்களை, சின்ன வயதில் ஓடி ஆடித் திரிந்த வீதிகளை, படித்த பள்ளிகளைப் பார்த்து கடந்த கால அனுபவங்களைக் கண நேரம் உயிர்ப்பித்துக்கொள்ளவும் வழி வகுத்தார்.

முதலமைச்சர் தாருண் கோகோயும் பெரிய மனது பண்ணி, அவர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களை வந்து பார்த்துச் செல்ல அனுமதி அளித்ததோடன்றி, தான் அவர்களை முறைப்படி வரவேற்பதாகவும் சொல்லச் சொன்னார். கடந்த 19 ஆம் திகதி அவர்களில் சிலர் கவ்ஹாத்தி வந்து சேர்ந்தனர்.



ரீடாவின் மகம் நாவலின் முக்கிய பாத்திரம் இப்படியாகப் பிரிக்கப்பட்ட சீனப் பெண் ஒருத்திதான்.. பெயர் பார்வதி கோவாலா. அவரது மகள் ஹோ யுஇட் மிங்கிற்கு அப்போது வயது எட்டு. அவரது அசாமியப் பெயர் அஞ்சலி கோவாலா. வந்துள்ளவர்களில் அவரும் ஒருவர்,

அசாமுக்கு வந்ததில் ரொம்பவும் மகிழ்ச்சி அடைகிறோம். இன்னும் கூட எனது சின்ன வயது நண்பர்கள் சிலரின் பெயர்கள் நினைவில் இருக்கின்றன. நான் மகூமுக்குச் செல்வேன். அவர்களைச் சந்திப்பேன் என்றார் அஞ்சலி. அவரது தந்தை ஹோ கோங் வா ஒரு கைவினைத் தொழிலாளி. பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளால் கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டவர்களில் ஒருவர். அசாம் அமைப்புகள் சிலவும், தோட்டத் தொழிலாளிகளின் மாணவர் அமைப்பு ஒன்றும், இதர சில சமூக இலக்கிய அமைப்புகளும் வந்திருக்கும் ஏழு பேர்களுக்கும் வரவேற்பளிக்கின்றன. டிப் புயான் இயக்கத்தில் ரீடா தயாரித்துள்ள இந்தச் சீன வம்சாவழியினர் குறித்த The Divided Soul எனும் ஆவணப்படமொன்றும் திரையிடப்பட்டது. அசாம் அரசு தமக்குப் பிறப்புச் சான்றிதழ் அளிக்க வேண்டும் என கவ்ஹாத்தி வரவேற்பின்போது மிங் வேண்டிக்கொண்டார்.

ஹொங்கொங்கில் முதன் முதலாக தான் மிங்கைச் சந்தித்தபோது அவர் உணர்ச்சி வயமாகி, மகூமுக்கு ஒரு முறை வருவது என் வாழ்நாள் கனவு எனக் கூறியதை ரீடா நினைவு கூர்ந்

தார்.

அவர்களுக்கு இழைத்த தீங்கிற்கு நாம் ஈடு செய்துவிட இயலாது. குறைந்தபட்சம் இந்த 48 ஆண்டுகளில் அவர்கள் பட்ட வேதனைகளுக்கு நம் வருத்தத்தையும் ஆதரவையும் தெரிவிக்கலாம். இந்தியா இதை முறைப்படி அறிவிக்க வேண்டும். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சொத்துகளை நாம் திருப்பித் தந்து விட இயலாது. அவை ஏலமிடப் பட்டுவிட்டன. குறைந்தபட்சம் அரசு அவர்களிடம் மன்னிப்புக் கோரலாம். அவர்களின் குடியுரிமையை மீள் அளிப்புச் செய்யலாம். இந்த அநீதி மேற்கொள்ளப்பட்டபோது நமது ஜனநாயகம் அரும்புப் பருவத்தில் இருந்தது. நமது ஊடகங்களோ, மனித உரிமைச் சிந்தனைகளோ போதிய வளர்ச்சி பெற்றிருக்க வில்லை என்றும் ரீடா கூறியுள்ளார்.

இந்தச் செய்திகளை நான் வாசித்த போது இந்திய அரசின் கொடுஞ் செயல்கள், அந்தச் சீன வம்சாவளியினர் அடைந்த ஈடு செய்ய இயலா இழப்புகள் எல்லாவற்றைக் காட்டிலும் எழுத்தாளர் ரீடா சௌத்ரியின் மன விசாலிப்பும் மற்றமையின் மீதான கரிசனமும்தான் நெஞ்சை நெகிழ்த்தியது.

1984இல் இந்திரா கொலையை ஒட்டி டில்லியில் சீக்கியர்கள் மீது நடந்த வன்முறையின் நேரடிச் சாட்சியாக இருக்க நேர்ந்த எழுத்தாளர் அமிதவ் கோஷஸ்து தன் எழுத்துகளை எவ்வாறு பாதித்தது என விரிவாக எழுதியுள்ளார்.

அவரது முதல் நாவல் The Circle of Reason 1985இல் வெளிவந்தது. சீக்கியர்கள் மீதான வன்முறைக்கு அடுத்த ஆண்டு. இது குறித்து அவர் சமீபத்தில் சுனில் சேத்தியிடம் பகிர்ந்து கொண்ட போது (Outlook, Sep 30, 2013), 1984 சம்பவங்கள் தான் தன் நாவலுக்குத் தூண்டு பொறியாய் அமைந்ததாகக் கூறியுள்ளார். எனது வாழ்க்கை எவ்வாறு கலவரங்கள் என்கிற வலையால் சூழப்பட்டுள்ளது என்பதைத்தான் 1984 எனக்குச் சுட்டிக் காட்டியது என்றுள்ளார்.

யோசித்துப் பார்த்தால் நாம் எல்லோருமே இப்படியான வலைப்பின்னலுக்குள்தான் சிக்கி வாழ்ந்து கொண்டுள்ளோம். உலகளவில், இந்திய அளவில், தமிழக அளவில் இப்படியான வன்முறைகள், வெறுப்பு அரசியல், மற்றமை மீதான வன் கொடுமைகள், அந்நியர் குறித்த வித விதமான வரையறைகள் நம்மைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டுள்ளன. அவற்றுக்குள்தான் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். தமிழ் எழுத்துகள் எந்த அளவிற்கு இவை குறித்த பிரக்ஞையை வெளிப்படுத்துகின்றன? மாறாக மிக வெளிப்படையாகவும் வெட்கமில்லாமலும் மற்றமைகள் மீதும், சிறுபான்மையினர் மீதும் வெறுப்பை விதைக்கும் இயக்கங்களோடும் சிலர் தம் எழுத்தை அடையாளப்படுத்தப்படும் சூழல் தமிழில் உருவாகி வருவது எதைக் காட்டுகிறது? ரீடா சௌத்ரியின் முயற்சிகளை வாசித்தபோது என் நெஞ்சில் கிளர்ந்த கேள்விகள் இவை. ■

---

***(66ஆம் பக்கத் தொடர்ச்சி...)***
சித்திரவதை செய்யப்படவில்லை; மனதளவிலோ - உடலளவிலோ காயப்படுத்தப்படவில்லை. இப் போது நாங்களும் சமூகத்தில் ஒருவனாக மலர்ந்திருக்கிறோம்.

ஏன் இவ்வாறெல்லாம் நடக்கின்றன? மாறிவரும் உலகத்துடன் நாங்களும் இயைபு பட வேண்டுமென்பதாலா? அபரிதமான விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சியுடன் ஒத்தோட வேண்டுமென்பதாலா? எல்லாமே வர்த்தக மயமாகிக் கொண்டிருக்கும் உலகின் போக்கினாலா? பெற்றோர் மத்தியிலான கௌரவப் பிரச்சினையினாலா? எதற்காக எங்கள் குழந்தைகளைக் காயடிக்கிறோம். சுய சிந்தனை - சுய மலர்ச்சி - சுய ஆற்றல் வெளிப்பாடு இல்லாமலாக்குகிறோம். ஊட்டி, ஊட்டி வளர்க்கும் பிள்ளைகளாக்குகின்றோம்.

இவற்றுக்கெல்லாம் உங்களில் பலர் சில சமாதானங்களைச் சொல்லக்கூடும். பழைய கூட்டுக்குடும்ப முறை சிதைவடைந்துவிட்டது தந்தையும் - தாயும் வேலைக்குப் போனால் தான் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியும். எங்களுடைய குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும். உலகத்தோடு ஒத்து வாழத் தானே வேண்டும். ஆங்காங்கே, சில நம்பிக்கைக் கீற்றுகள் தெரிகின்றன தான். சில ஆர்வமுள்ள ஆசிரியர்களின் செயற்பாடுகள் குறிப்பாக கிழக்கிலங்கையில் நண்பர் மௌனகுருவின் அரங்க ஆய்வு கூடத்தின் சிறுவர் சுய ஆற்றல் விருத்திச் செயற்பாடுகள்.... இன்னும் சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. ■

---

***(65ஆம் பக்கத் தொடர்ச்சி...)***
இருந்த நண்பர்கள் சிலரின் குறிப்புகளைத் தாங்கியுள்ளது.

ஐந்தாவது பகுதி செ.க.வின் நேர்காணல்களும் நூலகவியலா ளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட செ.க.வின் படைப்புகளின் முழுமையான விபரிப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளன.


இந்த நூலின் பகுப்பு முறை படைப்பு, படைப்பாளி பற்றிய பன்முகப் பார்வையாளர்களுக்கான அறிகை தேட்டமாக அமை ந்துள்ளது. ஆரம்பத்தில் செ.க. விற்கு படிப்பதில்தான் ஆர்வம் இருந்தது. இவர் இவரைத் தான் படிப்பதென்று இல்லாமல் அனைவரையும் தேடிப்படிக்கும் மன நிலை இருந்தது. பெரும்பாலான நேரங்களில் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் அரசியல், பொருளாதாரம், இலக்கியம், நாவல் இப்படிப்பட்ட பலதரப்பட்ட புத்தகங் களையும் படித்து மார்க்சிய கரு த்தியலில் நம்பிக்கை கொண்டு அதன் வெளிச்சத்தில் தனது படைப்பாக்கத்திறனை வளர்த்துக்கொண்டவர். இந்த வாழ்வியல் தொடர்ச்சியை முற்போக்கு இடதுசாரி எழுத்து மரபைப் புரிந்து கொள்வதற்கான கருவியாகவே இந்நூல் ஆக்கம்பெற்றுள்ளது. ■

ஆதிசேனன்

## பனுவல் பார்வை

# செ.கணேசலிங்கன் படைப்பும் படைப்பாளியும்

ஈழத்தில் மூத்த எழுத்தாளர்களுள் செ.கணேசலிங்கன் முக்கியமானவர். இவர் நாவல், சிறுகதை, கட்டுரை, ஆய்வு, மொழிபெயர்ப்பு, இதழாசிரியர் ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். இவர் பன்முக பரிமாணம் கொண்ட ஆளுமையாளர். இதைவிட ஈழத்து தமிழ்ச் சூழலில் குமரன் பதிப்பகம் மூலம் எண்ணற்ற காத்திரமான நூல்களைப் பதிப்பித்தவர்.




செ.க. அவர்களின் பவள விழாவை முன்னிட்டு கட்டுரைகளின் தொகுப்பாக செ.கணேசலிங்கன் படைப்பும் படைப்பாளி எனும் நூல் - மலர் ஆக்கம் பெற்றுள்ளது. செ.க.வின் பவள விழா முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்த பின்னரே இந்த மலர் வெளிவருகின்றது. காலம் தாழ்த்தியேனும் இந்த மலர் வெளிவந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இவ்வாறான தொகுப்பு நூல் முயற்சிகள் படைப்பு, படைப்பாளி குறித்து தீவிரமாக அலசல்களை, மதிப்பீடுகளை, ஆய்வுகளை மற்றும் மீள்வாசிப்புகளை முன்வைப்பதற்கு துணையாக இருக்கும்.

ஈழத்து தமிழ்ச் சூழலில் இவ்வாறான நூல் தொகுப்பு முயற்சிகள் அரிதாகவே உள்ளன. அல்லது இவ்வாறு குறித்துச் சொல்லத்தக்க வகையில் நூல்கள் வெளிவரவில்லை. தமிழகத்தில் க.நா.சு இலக்கியத் தடம், மௌனி இலக்கியத் தடம், புதுமைப்பித்தன் இலக்கியத் தடம், ஜெயகாந்தன் இலக்கியத் தடம், சி.சு.செல்லப்பா இலக்கியத் தடம் போன்ற வரிசை நூல்கள் படைப்பு - படைப்பாளி குறித்து பன்முகப்பார்வைக்கான களங்களை அடையாளப்படுத்துகின்றன. இவ்வாறான அறிதல் முறை, நோக்கும் முறை கொண்ட நூல்கள் ஈழத்திலும் அதிகம் வெளிவரவேண்டும். அப்பொழுது தான் ஈழத்து கலை இலக்கிய செல்நெறியின் மடை மாற்றங்களையும் புதிய உள்ளீடுகளையும் ஆளுமைகளையும் புரிந்துகொள்ள முடியும். இதற்குச் சிறப்பு செய்யும் வகையிலேயே செ.கணேசலிங்கத் தின் இந்நூலைக் கருதலாம்.

இந்த மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் நான்கு பகுதிகளாக பகுக்கப்பட்டுள்ளன. முதலாவது பகுதி செ.கணேசலிங்கனின் வாழ்க்கைப் பின்னணியையும் இலக்கிய பங்களிப்பையும் சுருக்கமாக அறிமுகம் செய்கிறது.

இரண்டாவது பகுதி, செ.கணேசலிங்கனின் படைப்புகள் பற்றிய மதிப்பீடுகள், ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. இங்கு ஒன்பது கட்டுரைகள் உள்ளன. குறிப்பான தமிழ் நாவலில் யதார்த்த மரபு (பேரா.கா.சிவத்தம்பி), செ.கணேசலிங்கனின் முதல் ஆறு நாவல்கள் - ஒரு மதிப்பீடு (கலாநிதி நா.சுப்பிரமணியன்), செ.கா-காலமும் கருத்தும் (பேரா. வீ.அரசு), தேசிய இனப்பிரச்சினை பற்றிய நான்கு நாவல்கள் (சிகாமணி) ஆகிய கட்டுரைகள் ஒன்றுடன் ஒன்று நேரடித் தொடர்பானவை. இவை பல்வேறு புரிதல்களுக்கும் மேலதிக விளக்கங்களுக்கும் உரிய பார்வைப் பின்புலத்தைத் தருகின்றன. கருத்தியல் சார்ந்த விளக்கத்தை முன்வைக்கின்றன. படைப்பு, படைப்பாளி பற்றிய மேலதிக புரிதல்களுக்கும் அணுகுமுறைக்கும் உரிய அறிவியல் நோக்கை கட்டமைக்கின்றன. மற்றைய கட்டுரைகளும் படைப்பாளியின் ஏனைய சிறப்புகளை, தனித்தன்மைகளை, வளர்ச்சிகளை அடையாளப்படுத்துகின்றன. மொத்தத்தில் இந்தப்பகுதி செ.க.வின் படைப்பு ஆளுமையை பல்வேறு நிலைகளில் வைத்து புரிந்துகொள்வதற்கான, ஆய்வு செய்வதற்கான பயிற்சியை நமக்கு வழங்குகின்றன.


மூன்றாவது பகுதி, தமிழின் முன்னணிப்படைப்பாளிகள் பலரது செ.க. பற்றிய நினைவுக் குறிப்புகளாக மையம் கொள்கின்றது.

நான்காவது பகுதியில் செ.க. பற்றி அவரோடு நெருக்கமாக

**(64ஆம் பக்கம் பார்க்க)**

## கடைசிப் பக்கம்

நான் புதிதாக ஒன்றும் சொல்லப்போவதில்லை. எனது வளர்பருவ அனுபவங்கள்-நினைவுகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளப்போகின்றேன் அவ்வளவு தான். இப்போது நினைத்துப் பார்க்கும் போதும், எனது சிறு வயது நினைவுகள் பரவசம் தருபவை. மங்கிய நிலவொளியில் அப்பாச்சியின் மடியில் படுத்துக் கொண்டு விதம் விதமான கதைகளைக் கேட்பேன். வீமன் என்ற வீரனின் கதை; அர்ஜுனன் என்ற வில்லனின் கதை; தர்மன் என்ற தருமவானின் கதை; திருஞானசம்பந்தர் தேவாரம் பாடிய கதை; பொய்யே சொல்லாத அரிச்சந்திரன் கதை; மிருகங்களின் பேச்சு ; பறவைகளின் பாட்டு....



குப்பிளான் சண்முகம்

இப்படி இப்படியே. வண்ணம் வண்ணமான பூக்கள், எப்போதாவது தோன்றும் வானவில், நாங்கள் போகுமிடமெல்லாம் கூடவே வரும் அம்புலிமாமா, வானத்தில் ஜொலிக்கும் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள், சோவென்று வீசும் சோழகக் காற்று, சிவந்த தம்பளப் பூச்சி, கோயில் மணி ஓசை, அப்பா பாடுகின்ற அந்தக் காலத்துக் கூத்துப்பாட்டுக்கள்... சிலவேளைகளில் அம்மா அடிப்பாள் தான்; அப்பா ஏசுவார் தான்; கொள்ளி எறும்போ... மசுக்குட்டியோ கடிக்கும் தான்.

# சில அனுபவங்கள் – சில சிந்தனைகள்

தவிர்க்க முடியாமல் இன்றைய குழந்தைகளின் நிலையை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அம்மாவின் அரவணைப்பில்-அப்பாவின் செல்லக் கொஞ்சுதலில் வளர்கிறார்களா? தாத்தா- பாட்டியின் கதைகளைக் கேட்கிறார்களா? எல்லையற்ற இந்த வானத்தின் கீழிருக்கும் வனப்புகளை வியக்கிறார்களா? ஏதோ தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களைப் போல, இரண்டரை - மூன்று வயதிற்குள்ளாகவே நேர்சறி என்ற சிறையில் அடைக்கப்படுகின்றார்கள். பயிற்சி பெற்ற - பயிற்சி பெறாத ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகிறார்களாம். இந்த உலகத்திற்கு இயைபான - ஒழுங்கான பிரஜைகளாக உருவாக்கப்படுகிறார்களாம். ருவிங்கிள் ருவிங்கிள் லிற்றில் ஸ்ரார்....... சுயசிந்தனை..? சுய மலர்ச்சி..?

இதன் அடுத்த படிநிலை இதைவிடக் கொடுமையானது என்று சொல்லலாமா? எங்கள் காலத்திலும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை இருந்ததுதான். ஆனால் இப்போதுள்ளது போன்ற அழுத்தங்கள் - ஆவலாதிகள் - கொடுமைகள் இருந்ததில்லை. பெரிதாக அலட்டிக் கொள்ளப்படாத ஒரு சாதாரண பரீட்சை. பரீட்சையில் சித்தியடையும் ஏழை மாணவர்கள், அரச உதவியுடன் சிறந்த பாடசாலைகளில் சேர்ந்து படித்தார்கள். அப்படி உயர்கல்வி கற்று நல்ல நிலைக்கு வந்தவர்கள் பலரை நான் அறிவேன். நாங்களெல்லாம் சித்தியடையாதிருக்க, என்னுடன் படித்த வசதிகள் குறைந்த நண்பனொருவன் சித்தியடைந்து, எங்கள் கிராமத்துப் பாடசாலையை விட்டு வேறு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றதும் ஞாபகம் இருக்கிறது. ஏதோ மிகப்பெரிய சாதனைகள் செய்ததாக அவனது படம் பத்திரிகைகளில் வரவில்லை. கதாநாயகனாக முடிசூட்டப்படவில்லை. பொற்கிழிகள், பணப் பரிசில்கள், வேறு சன்மானங்கள் என்றெல்லாம் வழங்கி பெரிய மனிதர்களால் கௌரவிக்கப்படவில்லை. இத்தனைக்கும் அவன் புலமைப் பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் தனிப்பட்ட வகுப்புகளில் படிக்கவும் இல்லை; இதற்காகவே வெளியிடப்படும் மாதிரி வினாக்களைப் பெற்று பயிற்சிகள் பெறவுமில்லை. இப்போது போல ஊடக நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிகளிலோ - பரீட்சைகளிலோ பங்கு கொள்ளவும் இல்லை.

எங்களில் ஒருவனாக எங்களுடனேயே கிராமத்துப் பாடசாலையில் படித்தான். எங்களுக்கு கற்பித்த - வழிகாட்டிய நல்லாசிரியரே அவனுக்கும் கற்பித்தார். நாலைந்து புள்ளிகள் வித்தியாசத்தில் நாங்கள் சித்தியடையாதிருக்க உயர் புள்ளிகள் பெற்று அவன் சித்தியடைந்தான் அவ்வளவு தான். நாங்கள் சோர்ந்து விடவில்லை; பரீட்சைக்கு முன்னரோ - பின்னரோ பெற்றோராலோ, உடன் பிறப்புகள் - உறவினர்களாலோ, ஊரவர்களாலோ, மற்றவர்களாலோ நாங்கள்

(64ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச தரத்தில்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்

வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...

KALAIKESARI

கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

மாத இதழ்




தொடர்புகளுக்கு : 0117 322788

Purchase your digital copy at

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை

தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.